
# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

AMUDHU
අමුදු
April / May '99

ஊற்று 1
துளி 7/ 8

















இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - ஏப்ரல்/மே '99 -30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெல் கற்றுத்தந்த சுற்றாடல் பாடம் விலைமதிப்பற்றது.



ஷெல் எங்கள் பாடசாலையில் நடத்திய மீள்பாவனை பற்றிய விளக்கத் திட்டத்தின் பயனாக நானும் எனது நண்பர்களும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுக்கொண்டோம்.

குப்பைகூழங்கள் மற்றும் கழித்தொதுக்கும் பொருள்களைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல், புதுப்பித்துப் பயன்படுத்தல் என்பன பற்றி ஷெல் எமக்கு விரிவாகச் சொல்லித் தந்தது. பாடசாலையிலும் வீட்டிலும் நாம் வீசியெறியும் பொருள்களை எவ்வாறு மீளப் பயன்படுத்த முடியும் என்பதை நரம் அறிந்துகொண்டோம். மீள்பாவனை முறைகளைக் கையாண்டால் பொலித்தீன் பைகளினால் வடிகால்கள் அடைபடுவதைத் தவிர்க்க முடியும். நுளம்புத் தொல்லையைக் குறைக்க முடியும். இதனால் கொழும்பு மாநகரத்தில் சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் உருவாகும். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஷெல் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றிலும் உண்மை.



*ஷமீலா செனவிரத்ன*
**ஷெல் பாடசாலைச் சுற்றாடல் திட்டத்தில் பங்குபற்றிய மாணவி**

GRANT McCANN

*வாழ்வைச் சிறப்பிக்கத் தன்னை அர்ப்பணிக்கும்*

**Shell GAS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்...


விடைபெறும் பாம்புகள் .......... 5

நெற்றிக்கண் ................ 6

வாசலைத் தாண்டிய கடிதம்....... 7

**அரசியல் அரங்கம்:** கொசோவோ,

இறைமையும் கொடுமையும் ....... 8

**கவிதை:** அல்லால் என்றன்.... ....... 11

**பேட்டி:** டெலோ அடைக்கலநாதன்.. 12

புலிகளின் பலத்தில் அரசியல் செய்வதா?

யார் இந்த முல்லா ............... 16

அழிந்து போகும் பிள்ளைப் பிராயம்... 18

**மணிக் கதை:** பூரை .............. 22

**கவிதை:** நீங்கள் தூவிய மலர்கள்... 25

கத்திகள் கூராக

மழுங்கிவிடும் வாழ்க்கை .........26

**ஸ்ரோபரி:**

காதல் மன்னர்களும், பொறுக்கிகளும். 29

தாயாகும் உனக்கு..............30

சாமியார்களும் சைக்கலாஜியும்.....32

**புரட்சி:** வெற்றிக்கு வழிசமைத்த

சீன நெடும் பயணம்.............36

**குங்:.பூ:**

சண்டைக்கான சிறந்த பயிற்சி

சண்டையே....................38

**நோயற்ற:** எரியும் நெஞ்சு .........41

**சிறுகதை:**

உப்புச் சவுக்காரம் ............42

**சினிமா:**

தமிழ் சினிமாவின் உலகத் தரம்?... 44

கிரக சஞ்சாரம் ..............47

நூல் அறிமுகம் ...............48




08 கொசோவோ கொடுமை



26 கத்தியும் வாழ்க்கையும்



சாமியார்களும் சைக்கலாஜியும் 32



உப்புச் சவுக்காரம் 42



44 தமிழக சினிமாவின் தரம் என்ன?



18 பிள்ளைப் பிராயத்துக்கு எதிரான போர்


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை**
**அமுது வரவேற்கிறது.**
**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283**
**:.பக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் அச்சில் தரும் அமுதை அக்கறையோடும் மகிழ்வோடும் வாசிக்கிறோம்!

இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் சஞ்சிகை அமுதே! உன்னைக் கையில் எடுத்தவுடன், நீ உன்னுள் அடக்கிவரும் அத்தனை நிகழ்வுகளையும் எப்படியாவது படித்துவிட வேண்டும் என்ற உற்சாகம் எனக்கு ஏற்படுகின்றது. அமுதுக்கு நிகர் அமுதே! இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

**க. சுதர்சன், கணபதி நகர், செங்கலடி.**

'அமுது' சிறந்த முறையில் அதிகப்படியான கட்டுரைகளைச் சுமந்து எம்மிடம் வருவதில் மாத்திரம் தாமதத்தைக் காட்டுகிறது. கூடிய விரைவில் எம்மிடம் கிடைக்கத்தக்க வகையில் நடையைப் பயிற்றுவிக்க வேண்டுகிறேன். 6வது துளியில் 'நெற்றிக்கண்', 'அரசியலரங்கம்', 'தலைக்கு மவுசிருக்கும் யாழ்ப்பாணம்', 'நிழல் உலகம்' போன்ற கட்டுரைகள் சிறப்பாக அமைந்திருந்தன. 'கழுத்தைப் பிடிப்பதற்கு அளவு ஒரு பொருட்டல்ல' என்ற செந்தமிழ் வாணனின் கடிதம் நிஜத்தை துணிவாகக் காட்டியிருக்கிறது. "தேசியத் தலைவர்" பற்றி மட்டுமல்ல, ஏனைய தலைவர்களைப் பற்றியும் (தமிழ்) எழுத வேண்டிய அவசியம் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் ஏற்பட்டுள்ளது. முதுகெலும்புள்ளவர்கள் முன்வர வேண்டும்.

**தங்க முகுந்தன், மாநகரசபை உறுப்பினர், யாழ்ப்பாணம்.**

'அரசியலரங்கம்' தமிழன் மறந்துபோன சங்கதியை நினைவுபடுத்தி உணர்வை உசுப்பும் முயற்சி. தொடரட்டும். நடுப்பக்கப் படம் பரவாயில்லை. 'கத்தியின்றி ரத்தமின்றி' சிந்திக்க வைத்த நல்ல கதை.

**கே. எம். வாசகர், கன்னன்குடா.**

வாசகர் ச...ல்

நெற்றிக்கண், யாழ்ப்பாண தேர்தல், தலைக்குமவுசிருக்கும் யாழ்ப்பாணம், பேட்டி, நிழல் உலகம் போன்ற துணிச்சலான எழுத்துக்களைத்தான் அமுதில் எதிர்பார்த்தோம். கீப் இட் அப். கன்னடப் பேராசிரியர் அரவிந்த மாளகத்தியின் சுயசரிதைப் பகுதி சுவாரஷ்யமாக எழுதப்பட்டிருக்கிறது. புத்தகம் எங்கே கிடைக்கும் என்று குறிப்பிடவில்லையே நீங்கள். மினி பஸ் பயணம் போல மக்கள் பிரச்சினைகளை அருகில் சென்று ஆராய்ந்து சொல்லும் பகுதியாக ஒவ்வொரு இதழிலும் ஒன்று தருவதற்குப் பார்த்துக் கொள்ளுங்கள். கவிதைகளும் நன்றாக இருக்கின்றன. வண்ணப்படங்களோடு சுவையான விஷயங்களும் அமைந்துவிட்டால் சஞ்சிகையின் வெற்றி உறுதி. நீங்கள் பதிக்கப் போகும் புகழ் முத்திரைக்கு அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.

**தி. உலகநாதன், திருகோணமலை.**

அட்டைப் படம் கண்ணைக் கவர்ந்தது. அமுது தாங்கி வரும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் மனத்தில் ஊன்றி பதிந்து விடுகின்றன. பள்ளி மாணவர்களுக்குமாத்திரமன்றிவளர்ந்தோர், தொழில்புரிவோர், பல்கலைக் கழகத்தில் பயில்வோர் அனைவருக்கும் அமுது இன்பம் ஊட்டுகிறது.

**எம். வை. எம். மீஆத், (பத்றால் உலூம்) ஹெம்மாதகம.**

தேர்தல் கால, மற்றும் அரசியல் கட்டுரைகள் அபாரம். வரதரின் சூடான பேட்டி, ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பே முட்டாளாக்கும் முயற்சி. வெளிச்சத்துக்கு வரும் நிழல், ஐயோ வேண்டாம், நாடற்ற பிராணி, மலையகம் மறந்த மகாத்மா, பிடிப்பு என்பன மிகப் பிடித்த கனதியான ஆக்கங்கள். இம்முறை வெறுப்படையச் செய்த பகுதி என்றால் "சினிமாவில் பெண்ணுடல்". ஒரு அருவருப்பான விஷயத்தை மேலும் அருவருப்பாக்கி "அமுதை" கொச்சைப்படுத்தியிருக்கிறீர்களோ.... என்று எண்ணத் தோன்றுகிறது. சினிமாவில் பெண்ணுடல் எப்படிப் பயன்படுகிறது என்பது... இந்தக் காலத்தில் யாருக்குத் தெரியாது. அதற்கெல்லாம் படங்களும் போட்டு, விளக்கமும் எழுதி.... இதுதான் தமிழுக்குச் செய்யும் சேவையா?

**"அனார்", சாய்ந்தமருது.**

நல்லதோர் வீணை செய்தே... என்ற தலைப்பினுள் வரும் ஆக்கத்தினை ஒரு முறைக்கு பலமுறைவாசிக்கத்தூண்டுகிறது. துணிச்சலுடன் பலவிடயங்களை அமுதுசஞ்சிகையில் வாசித்தபோது நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

**இஸ்மாயில், ஓட்டமாவடி.**

தங்கள் அமுது துளி-4 இதழை தற்செயலாக இங்கு பார்க்க நேர்ந்தது. துளி 5,6 கூட இப்போது வெளியாகி இருக்கும். படித்துப் பார்க்க நிரம்ப ஆசை. வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் மிகுந்த கவனம் செலுத்தியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பாராட்டுக்கள்.

**கே. எஸ். சிவகுமாரன், ஓமான்.**

கலாசாரத்தின் போர்வையில் நமக்குள் இருக்கும் அசிங்கங்களை மறைத்தபடியே சென்றுகொண்டிருக்கும் நம்மவர்களின் அந்தரங்க அலங்கோலங்களைத் துணிச்சலுடன் எழுத முன்வந்து இளைய தலைமுறைக்குப் புது ரத்தம் பாய்ச்ச வேண்டும் அமுது.

**ஏ. ராஜேந்திரன், சாவகச்சேரி.**

நீங்கள் அச்சில் தரும் அமுதை நாங்கள் மகிழ்வுடனும் அக்கறையுடனும் வாசிக்கிறோம். அது தந்த உந்துதலில் ஆக்கங்களும் அனுப்புகிறோம். திருத்திப் பிரசுரிக்க வேண்டியது உங்கள் கடமை.

**எஸ். உதயகுமார், வல்வெட்டித்துறை.**

அமுதில் அறிவியல் தகவல்கள் குறைவாக இருப்பது ஒரு குறைதான். சிறுவர்களுக்கான ஆக்கங்களையும், போட்டிகளையும் சேர்த்துக் கொண்டால் எல்லாத் தரப்பினரிடையேயும் அமுது தான் 'டொப்'. செய்வீர்களா?

**வை. சியாட், நேகம.**

நண்பனுக்கு கொடுக்கும் பரிசு - செவிமடுத்தல். பகைவனுக்கு கொடுக்கும் பரிசு - மன்னிப்பு. குழந்தைக்கு கொடுக்கும் பரிசு - முன்மாதிரி நடத்தல். தந்தைக்குக் கொடுக்கும் பரிசு - நன்னடத்தை. தாய்க்குக் கொடுக்கும் பரிசு - அருகிருத்தல். சமூகத்திற்கு கொடுக்கும் பரிசு - தியாகம். எங்கள் எல்லோருக்கும் நீங்கள் மாதாந்தம் கொடுக்கும் அற்புதப் பரிசு - அமுது.

**க. சாமினா, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

அமுதுக்கு நீங்கள் செய்யும் விளம்பரம் போதாது. நாட்டில் பலருக்கு இப்படி ஒரு அசத்தலான சஞ்சிகை இலங்கையில் வெளிவருவது தெரியாது. மாதந்தோறும் என்பதே கால இடைவெளி சற்று அதிகம்தான். அமுதோ குறித்த காலத்தில் வருவதில்லை என்பது அதற்கு மேலும் ஒரு பின்னடைவு. விற்பனையைச் சீர் செய்து கொள்ள நீங்கள் திருந்தப் போகிறீர்களா? அல்லது கடை விரித்தோம் கொள்வாரில்லை என்று கடையை மூடிவிடுவீர்களா?

**க. திருஞானம், கொழும்பு 06.**

மிகவும் தரமான ஒரு பல்சுவைக் கலசமாக மிளிர்கிறது அமுது. *Readers Digest, Life, India Today* தரத்திற்கு உயர்வதோடு தனது ஆயுளையும் கெட்டிப்படுத்திக் கொள்ளட்டும். எனது மனமார்ந்த பாராட்டுக்களும் எதிர்கால வளர்ச்சிக்கு நல்ஆசிகளும்.

**சி. சதாசிவம், மட்டுவில்.**

'தமிழுக்கு அமுதென்று பேர். இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாவேந்தர் பாடினார். 'அமுதை' அச்சில் பார்த்த பிறகு அவை இன்னும் உண்மையான வார்த்தைகளாகத் தெரிகின்றன.

**எம். ஏ. பெரோஷா, கடுகண்ணாவ.**

அமுத வாசலைத் தாண்டிய வாசகர் கடிதம் சூடாகவே உள்ளது. அத்தகைய கடிதங்களுக்கு தனிப் பக்கம் ஒதுக்குவது நல்லது.

**ந. நிரோஷா, கொட்டாஞ்சேனை.**

உங்கள் ஆக்கங்கள், அபிப்பிராயங்களை
ஆசிரியர், 'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10. க்கு அனுப்பிவையுங்கள்.
Phone : 454283 Fax : 320677
E-Mail : webmgr@sri.lanka.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

பிரதமஆசிரியர்:
எஸ். மனோரஞ்சன்
இணையாசிரியர்:
து. பாஸ்கரன்
ஆசிரிய பீட ஆலோசகர்:
டி. பி. எஸ். ஜெயராஜ்
கட்டுரையாசிரியர்:
சி. சிவகுமார்
ஏனைய ஆசிரிய பீடத்தினர்:
எம். எச். எம். ஷம்ஸ்
எம். எஸ். எம். ஹிஷாம்
பிரதம வடிவமைப்பாளர்:
சி. முரளிதரன்
ஓவியர், கார்டூனிஸ்ட்:
இ. ப்ரகீத்
பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்
விளம்பர முகாமையாளர்:
வருண மல்லவஆராச்சி
தயாரிப்பு முகாமையாளர்:
அபய அமரதாஸ
அச்சமைப்பு முகாமையாளர்:
நவரட்ணம் சற்குணநாதன்
விற்பனை முகாமையாளர்:
அனுர அபேரத்ன
அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

**Chief Editor:**
*S. Manoranjan*
**Associate Editor:**
*T. Baskaran*
**Editorial Consultant:**
*D. B. S. Jeyaraj*
**Features Editor:**
*S. Sivakumar*
**Other Editorial Staff:**
*M.H.M. Shums*
*M.S.M. Hisam*
**Chief Designer:**
*C. Muralitharan*
**Computer Graphic Artist/Cartoonist:**
*P.R.B.Ekkneligoda*
**Computer Page make-up:**
*Gerald S. Nadesan*
**Computer Typeset:**
*S.M. Premkumar*

# நல்லதோர் வீணை செய்தே....

பொய்மை!
- அது எம் மானுட வாழ்வில் வியாபித்து நிற்கும் ஓர் உண்மை. பொய்மையின் இருப்பு உண்மையாகிவிட்ட பின் பொய்மையே உண்மையாகவும் தோன்றுகிறது.
இல்லாமையை இருப்பதாகக் காண்பிக்கும் பொய்மை இருப்பதையும் இல்லையென நம்ப வைக்கிறது.
ஒளியின் இல்லாமையே இருளாகிறதேயன்றி இருள் என்று எதுவும் இல்லை. எனினும் இரவு தோன்றும்போது இருள்தான் எம்மைச் சூழ்ந்துகொள்வதான போலிப் பிரமையே எமக்கு உண்மைபோலப் புலப்படுகிறது. அதுபோல் உண்மையின் வெற்றிடத்தை நிரப்பும் பொய்மையும் ஒரு உண்மையாகவே தோன்றி நிற்கிறது.
ஒன்றை இன்னொன்றின் வாயிலாகப் புரிய முனையும் எமது அறிதல் செயற்பாட்டில் பொய்மை மிகச் சுலபமாக ஊடுருவிக்கொள்ள முடிகிறது.
கண்டறியப்படாத யாவற்றையும், ஏற்க முடியாத யாவற்றையும், திருப்தியளிக்காத யாவற்றையும், மாற விரும்பாத யாவற்றையும் பொய்மை இலகுவாக சுவீகரித்துக் கொள்கிறது.
உண்மையில் விரிசல் ஏற்படும் எவ்விடத்தையும் பொய்மை ஓடிச்சென்று ஒரு திரவம்போல உடனே நிரப்பி விடுகிறது.
நம்பிக்கைகள், கொள்கைகள், இலட்சியங்கள், போராட்டங்கள், தியாகங்கள் முதலான எவையுமே இதற்கு விதிவிலக்கில்லை.
நம்பிக்கைகள் மூடத்தனங்களாவதும், கொள்கைகள் வறட்டுத்தனங்களாவதும், இலட்சியங்கள் போலித்தனங்களாவதும், போராட்டங்கள் திசை மாறிப் போவதும், தியாகங்கள் மதிப்பிழந்து போவதும் அவை பொய்மைகளால் பீடிக்கப்படுவதால்தான்.
பனை மர உச்சியில் விழுந்த ஆலம் வித்து காலப்போக்கில் பனையையே கபளீகரம் செய்து புசித்துவிட்டு ஆலாகி நிற்பதைப்போல,
எந்த உயர் சிந்தனைகளுக்குள்ளும் ஊடுருவி விடுகின்ற பொய்மைகள் ஈற்றில் அவற்றையே பொய்மையின் முகங்களாக மாற்றி விடுகின்றன.
பின்னர் அப்போலி முகங்களைக் காப்பாற்றுவதற்காகவே மேலும் மேலும் பொய்மைக்குள் சரணடைய நேரிடுகிறது.
பொய்மையிலிருந்து மீளவேண்டுமாயின் பொய்மை தரும் சௌகரியத்தை மறுதலிக்கத் துணிய வேண்டும்!
பொய்மைகளைக் களைந்து விட்டு அம்மணமாய் உண்மைகளைத் தரிசிப்போம்!



ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**11%**

**செமிப்பு கணக்குகளுக்கு**

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 - 331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK
பிரமுக
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
வங்கி
லி மி ட ட்
வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி

NETWORK

316, காலி வீதி, கொழும்பு - 3 பிரதான நகரக் கிளை தொலைபேசி : 565220 - 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 - 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்த சுற்றுலாவொன்றில் நானும் இணைந்து கொண்டேன். எமது வாகனம் கொழும்பிலிருந்து புறப்படத் தயாரானது. திடீரென்று இருவர் வாகனத்தின் கதவைத் திறந்துகொண்டு வெளியே பாய்ந்தனர். அடுத்து வாகனத்தில் இருந்த எல்லோரும் 'பாம்பு, பாம்பு' என்று கத்தியபடியே வெளியேபாய்ந்தார்கள். பின் ஆசனத்திலிருந்து அவசரமாக வெளியேற முடியாமல் தடுமாறியபடி வாகனத்தினுள் பார்த்த பொழுதுதான் எனக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. அது ஒரு ரப்பர் பாம்பு!



பாம்பைக் கண்டதுதான் தாமதம்.... இவ்விடத்துக்கு வருவதற்கு சாத்தியமில்லையே என்று கூட சிந்திக்க நேரமிருக்கவில்லை. பாம்பு என்ற சொல்லை மட்டுமே கேட்டுவிட்டு எல்லோரும் குதித்து ஓடிய விதம்....

பின்புதான் எல்லோரும் சேர்ந்து சிரித்தோம்.

ஆம்....

பாம்பென்றால்தான் படையும் நடுங்குமே!

பாம்பு என்றதும் நம் நினைவுக்கு வருவதெல்லாம் விஷம்தான். பாம்பு வந்துவிட்டதென்றால் மரணம் வந்துவிட்டதாகவே அஞ்சுகிறோம். அதனால் பாம்பைக் கண்டுவிட்டால் நாம் தேடுவது தடியொன்றைத்தான்.

தமது இரையைத் தேட புற்றுக்குள்ளிருந்தும் புதர்களுக்குள்ளிருந்தும் வெளிவந்து மெதுவாகத் தலைகாட்டும் எத்தனையோ பாம்புகள் - அவை விஷப் பாம்போ, விஷமற்ற பாம்போ - உடனே எம்மால் விடை கொடுத்து இவ்வுலகிலிருந்து அனுப்பி வைக்கப்படுகின்றன.

இப்படி அடிபட்டுச் செத்துவிடும் பாம்புகள் எல்லாமே நச்சுத்தன்மையான பாம்புகளல்ல.

இன்றுஉலகிலே2700வகையானபாம்புகளே இருக்கின்றன. அவற்றில் 250 வகை மாத்திரமே விஷமுள்ளவையாகும். நமது நாட்டில் 93 வகையான பாம்புகள் இருக்கின்றன. அவற்றில் 13 வகையான பாம்புகள் தலையை வெளியே காட்டாமல் நீருக்குள்ளேயே நீந்திக் கொண்டிருக்கின்றன. நாகம், புடையன், விரியன் போன்ற சிலவற்றைத் தவிர இங்குள்ள அநேகமானவை விஷப் பாம்புகளல்ல.

சின்னச் சின்ன விலங்கினங்களை ஊர்ந்து சென்று பிடித்துக் கொள்ளும் இவை தம் உடம்பை விடப் பெரிய இரை அகப்பட்டால் அதையும் அப்படியே வாய்க்குள் திணித்து விடுகின்றன - தலை இரைக்கேற்ப விரிவாகும் தன்மை கொண்டது.

செதில்களால் மூடப்பட்டுள்ள தன் உடம்பின் சுரலிப்புத் தன்மை அகன்றதன் பின்னால் செதிலைக் கழற்றி விடுகின்றன. அதைத்தான் நாம் 'பாம்புச் சட்டை' என்கிறோம்.

உலகிலே மிக நீண்ட, பயங்கரமான பாம்பு மலைப் பாம்பு.. எவ்வளவு நீளம் இருக்கும் தெரியுமா? 9 மீற்றர் வரையில்.... 125 கிலோ கிராம் வரையில் பாரம் கொண்ட இது சினம் கொண்டு சீறி எழுவதில்லை. மாறாக பசியெடுத்தால் மாடொன்றையும் முழுசாக விழுங்கிவிடும்.

பாம்பு என்றதும் இயற்கையாகவே நம்மிடம் ஒட்டிவிட்ட இந்தப் பயம் எப்படி வந்தது? ஒரு நச்சுப் பாம்பு மனிதனைக் கொத்திவிட்டதென்றால் உடனடி சிகிச்சை எடுக்கப்படாவிட்டால் 20 நிமிடங்களுக்குள் மனிதன் இறந்துவிடும் அபாயம் உண்டு. அது மட்டுமல்ல இதன் நச்சுத் தன்மை யானையொன்றைக் கூட கொன்றுவிடுமென்றால்..... பயம் வராமலா இருக்கும்?

# விடைபெறும் பாம்புகள்



அதுமட்டுமல்ல இவை நமது காலடிக்கு வரும் வரையில் ஊகித்துக் கொள்ளவும் முடியாது. சப்தமின்றி ஊர்வனவல்லவா....

காடழிப்புகளால் பாம்புகள் நாட்டுக்குள் நகர அங்கும் வேட்டை... பாம்பு வேட்டைகள்....

சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளில் பாம்பையும் விரும்பிப் புசிக்கிறார்கள். அதனால் ஏராளமான பாம்புகள் மனிதனின் இரைக்காக விலைபோகின்றன.

ஒருபோதும் பாம்பு மனிதனுக்கு தானாகத் தீங்கு செய்வதில்லை. அதன் செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கும்போதுதான் அது நம்மைத் தீண்டுகிறது. பெரும்பாலும் அச்சத்தினால்தான் தீண்டுகிறது. நாம் பாம்பை எண்ணி அஞ்ச பாம்பு எம்மைக் கண்டு அஞ்சுகிறது.

எலிகளால் ஏற்படும் பல நோய்களிலிருந்து மனிதனைக் காப்பாற்றுவதோடு, விவசாயத் துறையில் எலிகளின் தொல்லையைக் குறைப்பதிலும் பாம்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தற்போது தாய்வான் போன்ற நாடுகளில் எலிக் கட்டுப்பாட்டுக்காக பாம்புகளை சேகரித்து வயலில் விடுகிறார்கள்.

அதுமட்டுமன்றி, புவியின் வெப்பத்தைக் குறைப்பதிலும் பாம்புகள் உதவுகின்றனவாம்.

10-12 ஆண்டுகள் வரையில் மாத்திரம் இவ்வுலகில் உயிர்வாழும் இவ்விரவுநேர உயிரினங்கள், உண்மையில் எமக்குப் பயந்து உயிரைக் கையில் பிடித்தவண்ணமே வாழ்கின்றன.

கண்டபடி பாம்புகளை அடித்துக் கொல்லுவதால் நச்சுப் பாம்புகளோடு நல்ல பாம்புகளும் பல அழிந்து செல்கின்றன.


பாம்புக்குப் பால் வார்க்காவிட்டாலும் அதன் பாட்டிலாவது அதை வாழவிடலாமல்லவா? •

- எச். எஸ். மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவரை இந்த எலும்புக்கூட்டு அரசியல்?




நக்கீரன்

கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதெனக் கூறுவதைநாம் கேட்டுள்ளோம். ஆனால் இப்போது கிடங்கு வெட்ட எலும்புக்கூடு கிளம்புவதுதான் எம் மண்ணின் கதை.

மனிதம் எவர் கண்ணுக்கும் தெரியாமல் புதைக்கப்படும் தர்மம்தான் எம் நாட்டில் ஆயுதம் தரித்தவர்கள் எமக்குப் பெற்றுத் தந்த உரிமையாகிவிட்டது.

ஆயுதபாணிகளின் காலடியில் சரணடைந்த பின் மௌன சாட்சியங்களாக மண்ணினுள்ளே உறங்கிக் கிடக்கும் உண்மைகள் எப்போதாவது இப்படித்தான் மலசலகூடமோ, கிணறோ வெட்டும்போது எதேச்சையாக வெளிக்கிளம்பிவிடுகின்றன.

ஆம்! இப்போது களம் துரையப்பா ஸ்டேடியம்.... மலசலகூடம் கட்டுவதற்காக ஸ்டேடியத்தின் ஒருபுறத்தைக் கிண்டியபோதுதான் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கிய எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை வரவரப் பெருகி 25 வரை வந்து, கிண்டுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

முன்பு பரபரப்பாக இருந்தது செம்மணி! அங்கு பல உடல்கள் புதையுண்டுள்ளதாக இருந்துவந்த ஊகம், கிருஷாந்தி கொலைக் குற்றவாளியான ராஜபக்ஷ, கூறிய சாட்சியத்தையடுத்து உக்கிரமடைந்திருந்தது. செம்மணியைக் கிண்டும்படியான வற்புறுத்தல் தமிழ் அரசியல் வட்டாரங்களில் கடுமையாகக் கிளம்பியது. கிண்டும்போது கிடைக்கும் தடயங்களை டி. என். ஏ. பகுப்பாய்வுக்கு உள்ளாக்கவேண்டுமென்றும் அதற்கு வெளிநாட்டு நிபுணர்களை வரவழைக்க வேண்டுமென்றும் குரல்கள் எழுந்தன.

ஆனால் அது பிற்போடப்பட்டுச் செல்கிறது. அதற்காகச் செயலாற்ற இருந்த யாழ். மேலதிக நீதவான் எஸ்.ஏ..ச. ஏகநாதன் புலிகள் அனுப்பிய எதிர்ப்புக் கடிதத்தையடுத்து செயற்பட மறுத்துவிட்டார். அதனால் கொழும்பிலிருந்துநீதவானொருவரை அழைத்துச் செல்லும் நிலை அரசாங்கத்திற்கு....!

ஆனால் துரையப்பா ஸ்டேடிய விடயத்தில் அதே நீதிபதி செயலாற்றத் தயக்கம் தெரிவிக்கவில்லை. இதற்கு அவர் புலிகளிடமிருந்து எதிர்ப்பு ஏதும் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கிறார். ஒரு புதைகுழியைக் கிண்ட எதிர்ப்பு இன்னொன்றைக் கிண்டத் தடையில்லை என்று மரணங்கள் பற்றிய மர்மத்தைத் துலக்குவதிலும் குழப்பநிலை....

இறப்பைக்கூட அரசியலாக்கும் முனைப்பில் மக்களின் விடுதலைக்குப் போராடுவதாகக் கூறுபவர்களும் மக்களைப் பாதுகாப்பதாகக் கூறுபவர்களும் வெதும்பும் மக்களின் மன உணர்வுகளைப் பந்தாடுகிறார்கள்.

செம்மணியைப் போலன்றி துரையப்பா ஸ்டேடியத்திலிருந்து எலும்புக்கூடுகள் வெளிவரத் தொடங்கியதையிட்டு சற்று வித்தியாசமான பிரதிபலிப்புகளையே தமிழ் அரசியல் வட்டாரங்களில் காணக் கூடியதாகவுள்ளது. செம்மணி விவகாரத்தில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளதான சந்தேகத்திற்கு இடமிருந்தது. ஆனால் துரையப்பா ஸ்டேடியப் புதைகுழிகளில் இராணுவம் மீது சந்தேகிப்பதற்கான சாத்தியம் மிகவும் குறைவு. ஏனெனில் இப்பகுதிக்கு அருகில் இருந்த கோட்டை, குருநகர் இராணுவ முகாம்களிலிருந்து நீண்டகாலமாக இராணுவம் வெளியே வரவில்லை.

எனவே இவ் விவகாரத்தில் சந்தேகக் கண் தமிழ் ஆயுத இயக்கங்கள் பக்கம் திரும்பச் சாத்தியம் அதிகம் இருக்கிறது. அதனால்தான் இவ் விடயத்தில் செம்மணி போன்று உரத்த எதிர்ப்புக்குரல் கிளம்புவதில் ஒருவிதத் தயக்கம் தமிழ் வட்டாரங்களில் நிலவுகிறது.

வகை தொகையாக மக்கள் கொல்லப்படும் சம்பவங்கள் எமக்குப் பழகிப் போனவையே. ஆனால் எமது கோணல் மனப்பான்மையால், யார் செய்தது, யாருக்குச் செய்தது என்று பார்த்தே கண்டிப்பதா விடுவதா எனத் தீர்மானிக்க நாம் பழகிவிட்டோம். இம்மனப்பாங்குள்ளோருக்கு, ஸ்டேடியத்தில் புதைக்கப்பட்டவர்கள் யார்? அவர்களைக் கொன்றவர்கள் யார்? என்பது பற்றி அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில் அது ஒருவேளை தங்களுக்குச் சார்பானவர்களுக்குப் பாதகமாக அமைந்துவிடுமோ என்ற அச்சமே மனத்தடையாக இருக்கிறது. இம் மனநிலையை உடனடியாக நாம் மாற்ற வேண்டும்.

தனித்தனிமனிதர்களில் ஆரம்பித்து, பின்னர் வகை தொகையின்றிக் கொல்லுவது பொதுவான நிகழ்வாக வளர்ச்சி கண்டது. இத்தகைய கூட்டமான கொலைகளில் இராணுவமே முதலில் ஈடுபட்டது. அது தமிழ்ப் போராட்டத்தை முறியடிப்பதில் மட்டுமன்றி சிங்கள இளைஞர் கிளர்ச்சிகளை அடக்கவும் இவ் வகை தொகையற்ற கொலைகளைச் செய்தது. ஆனால் இதே பாங்கு தமிழ்ப்போராட்டத்திலும் பற்றிக்கொண்டது. இயக்க மோதல்கள் ஏற்பட்டபின் இத்தகைய பல சம்பவங்கள் தமிழ்ப் பகுதிகளில் இயங்கங்களால் நிகழ்த்தப்பட்டுள்ளன.

1985 ல் புலிகள் ரெலோ அமைப்பினர்மீது தொடுத்த தாக்குதலுடன் கூட்டமான படுகொலைகளை தமிழ் அரசியல் களத்தில் அறிமுகப்படுத்தினர். பின்னர் இதேவகைத் தாக்குதலை 1986ல் ஈ.பி.ஆர்.எல்.எ ஃப். இயக்கத்தின் மீதும் நடந்தது. கந்தன் கருணை என்ற நல்லூர் இல்லத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சரணடைந்த இளைஞர்கள் 57 பேரை ஒட்டுமொத்தமாகச் சுட்டுப் படுகொலைசெய்த அதிர்ச்சிகரமான சம்பவமும் அப்போதுதான் நிகழ்ந்தேறியது.

இதன்பின் வட - கிழக்கு மாகாணசபை ஆட்சிக் காலத்தில் அதிகாரத்திலிருந்த ஈ.பி.ஆர். எல்.எ ஃப், ஈ.என்.டி.எல்.எ ஃப். ஆகிய கட்சிகளாலும், ஐ.பி.கே.எ ஃப். இராணுவத்தாலும் மேற்கொள்ளப்பட்ட புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளிலும் பலர் காணமற் போயினர்.

1990இல் இந்திய ராணுவம் வெளியேறிய பின் 1995 இறுதியில் இலங்கை ராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வரை அது புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அக்காலத்தில் டெங்கோ-1, டெங்கோ-2, டெங்கோ-3... என்ற பெயர்களில் பல சித்திரவதை முகாம்களும், மேலும் பல நிலக்கீழ் வதைமுகாம்களும் அங்கு இருந்ததை சாதாரண மக்கள் அறிவர். அதேவேளை சுமார் 2,000க்கு மேற்பட்டோர் காணமல் போயுள்ளதாகவும் மனித உரிமை அமைப்புக்கள் முறையிட்டுள்ளன. யாழ் கோட்டைக்குள் விசேட சிறைச்சாலை ஒன்றை புலிகள் வைத்திருந்தார்கள் என்பதும் பலர் அறிந்ததே.

எனவே, கோட்டைக்குக் கூப்பிடு தொலைவில் உள்ள துரையப்பா ஸ்டேடியத்தில் இப்போது கிண்டி எடுக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் இவர்களில் யாருடையவை?

அவை பத்து வருடங்களுக்கு முற்பட்டவை என்கிறார் சட்ட வைத்திய அதிகாரி எஸ். வி. ஸ்ரீராஜேஸ்வரன். ஆனால் அப்படி ஆதரமில்லாமல் ஒரு கூற்றைக் கூறுவது தவறு என்கிறார் நீதிபதி எஸ்.ஏ.ச. ஏகநாதன்.

இப்படியிருக்க இப் புதைகுழிகள் கிண்டப்பட்டு விரிவான ஆராய்ச்சி தொடங்கு முன்னரே, அவசரமாக, பத்து வருடத்துக்கு முற்பட்ட புதைகுழிகள் என எந்த ஆதாரமுமில்லாமல் தெரிவிப்பதுகூட விடயத்தைத் திசை திருப்பி பழியை எவர்மீதாவது சுமத்துவதன் மூலம் யாரையாவது காப்பாற்ற முனையும் முயற்சியா என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கிறது.

எம் நாட்டில் நிகழ்ந்துவரும் உள்நாட்டு யுத்தத்தில், உருவாகியுள்ள பல்வேறு பகை முகாம்களுக்கிடையில் எல்லாத் தரப்பினருக்கும் இலகுவான இலக்காக அமைந்துள்ளவர்கள் பொதுமக்கள்தான். துரையப்பா ஸ்டேடியத்தில் கிண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் சிறு குழந்தைகளதும் பெண்களதும் தடயங்கள் பெறப்பட்டுள்ளமை இங்கு கொன்று புதைக்கப்பட்டவர்களும் பொதுமக்களாக இருப்பார்களென்ற ஐயத்தையே தோற்றுவிக்கிறது.

செம்மணிப் புதைகுழிகளை ஆராயவேண்டுமென்பதில் தமிழ் அரசியல் வட்டாரங்கள் காட்டும் அக்கறை அவசியமானதே. ஆனால் அதே போல் துரையப்பா ஸ்டேடியப் புதைகுழி விவகாரத்தையும் விரிவாக ஆராய்ந்து அதில் பலியானவர்கள் யார் என்பதையும், உண்மைக் குற்றவாளிகள் யார் என்பதையும் கண்டறிய முன்னிற்க வேண்டும். அது யாராயிருந்தாலும் அம்பலப்படுத்தத் துணிய வேண்டும்.

அதுமட்டுமன்றி இன்னும் இதுபோல தமிழ் பிரதேசமெங்கும் மூடி மறைந்திருக்கும் மனிதப் புதைகுழிகளின் சூத்திரதாரிகளை தேடி, பாரிய ஒரு வேட்டைக்கு நாம் தயாராக வேண்டும். வெளிநாடுகளில் நம்மவர் யாராவது அகழ்வாராய்ச்சித் துறையில் நிபுணத்துவம் பெற்றிருந்தால் இங்குவந்து இப்படியான புதைகுழிகளை ஆராய்ந்து, கம்பூச்சியாவைப்போல் இங்கும் ஒரு நூதனசாலையை நிறுவி தமிழ் ஆயுதக் கலாசாரப் பெருமைகளை ஆவணப்படுத்தலாம்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசலைத் தாண்டிய கடிதம்

## எமது அன்றாட வாழ்வுத் தேவைகளை மதியுங்கள்! அத்தியாவசிய சேவைகளைச் சீர்குலைக்காதீர்கள்!!

அன்பார்ந்த புலிகளே,

"எமது மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தும் எதிரியின் நடவடிக்கையைமுறியடிக்க ஒன்றிணைவோம்" எனும் தலைப்பில் விடுதலைப் புலிகள் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களின் அறிவித்தல் பலகைகளிலும் ஒட்டப்பட்டிருந்தது. (பார்க்க... மறு பிரசுரம் 20.02.1999 சஞ்சீவி, பக்கம் 11)

மக்களை நோக்கி இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தாலும், இங்கு நடைமுறையில் உள்ள அனைத்து நெருக்கடிகளையும் அனுபவிப்பவர்கள் என்ற வகையிலும் எமது அபிப்பிராயங்களை தெரிவிக்க விழைகிறோம். ஆயுதபாணிகளான உங்கள் கருத்துக்களுக்குக் கிடைக்கும் முக்கியத்துவம் எமது கருத்துக்களுக்கு இங்குள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் கிடைக்காது என்பதனை அறிவோம். ஆயினும் எமது கருத்தை வெளிப்படுத்த விரும்பி ஆபத்துக்களுக்கு மத்தியிலும் இதனை வெளியிடுகிறோம்.

வடக்கு கிழக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் செவ்வனே நடைபெறுவதில்லைஎன்பதனை ஆளுநர் நாற்காலியிலிருந்து இறக்கப்பட்ட காமினி பொன்சேகா சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் நாம் இல்லை. அபிவிருத்திச் செயற்பாடுகளின் முடக்கநிலையை இம்மண்ணில் வாழுகின்ற ஒவ்வொரு தமிழரும் அறிவர். இதற்கும் மேலாக இம்மண்ணில் நிகழும் இராணுவ வாதச் செயற்பாடுகளினால் சமாதானத்திற்கான சாத்தியப்பாடுகள் அண்மையில் இல்லை என்பதையும் தெட்டத் தெளிவாக அறிவோம்.

எமது அரசியல் பிரச்சினைக்கு உறுதியான தீர்வை முன்வைப்பதில் இழுத்தடிப்புக்களை மேற்கொள்ளும் அரசு எமது அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் பாதுகாப்புக் காரணங்களை காட்டி இழுத்தடித்து வருகிறது. கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இன முரண்பாட்டை வளர்த்துவிட்ட தென்னிலங்கை அரசியல்வாதிகளின் நோக்கமும் செயலும் அதுவெனில், தமிழர்களின் அரசியல் பொருளாதார சமூக செயற்பாடுகளில் புலிகளின் நிலைப்பாடு என்ன? புலிகளின் நிலைப்பாடு மரத்திலிருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாக அல்லவா இருக்கிறது.

யாழ். குடாநாட்டில் அபிவிருத்திச் செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படலாகாது எனவும் சிவில் நிர்வாக செயற்பாடுகளைத் தடுக்கும் வகையிலும் அனைத்து அரச திணைக்கள அதிகாரிகளுக்கும் மிரட்டல் கடிதங்களை அனுப்பிவிட்டு, (இதனை எழுதிக்கொண்டிருக்கும்போதே 3வது தடவையாக நீதிமன்றங்கள் இயங்கக் கூடாதென அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது) "அரசு, குடாநாட்டைக் கைப்பற்றி 3 வருடங்கள் ஆகிவிட்டது. தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளையாவது தீர்க்க முடிந்ததா?" என கேள்வி எழுப்புவதில் என்ன அரசியல் நேர்மை இருக்கின்றது.

எமது போக்குவரத்திற்கு தரை வழி, கடல் வழி, ஆகாயவெளி எதையுமே பயன்படுத்த முடியாதவாறு முட்டுக்கட்டை போடுவதோடு, கிழக்கில் தொடர்ச்சியாக மின்மாற்றிகளையும் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களையும் குண்டு வைத்துத் தகர்த்து வரும் நீங்கள் வடக்கு கிழக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி அல்லது எமது அன்றாட தேவைகள் பற்றி கண்ணீர் விடுவது வேடிக்கையாய் உள்ளது. பல்வேறு அழுத்தங்களுக்கும் அஞ்சி எம்மீது அரசுக்கு இருக்கும் சொற்ப அக்கறைகூட விடுதலைப்புலிகளுக்குஇருக்கிறதா என்ற கேள்வியே எம்முன் எழுகிறது.

நீண்டகாலப் போரினாலும், இடப்பெயர்வினாலும் சோர்வுற்ற எமக்கு அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் தற்போது மேற்கொண்டு வரும் அபிவிருத்திச் செயற்பாடுகளால், சுமைகள் ஓரளவு குறையத் தொடங்கியுள்ளது. "1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்து 3 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. முன்னர் தடை செய்யப்பட்டிருந்த பொருட்கள் யாழ்ப்பாணத்துக்கு வரத் தொடங்கின. முக்கியமாக எரிபொருட்கள் ஓரளவு தட்டுப்பாடற்ற நிலையில் விநியோகிக்கப்படுகின்றன. மின்சாரம் முன்போலல்லாது குறிப்பிட்ட சில பகுதிகளுக்காவது சீரான முறையில் வழங்கப்பட்டுவருகிறது. தொலைத்தொடர்பு அபிவிருத்தி அடைந்து வருகின்றது. உள்ளூர் பஸ் போக்குவரத்து சீரடைந்து வருகின்றது" இவ்வாறு யாழ்ப்பாண நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் தனது அண்மைய அறிக்கையில் யாழ் குடாநாட்டு நிலையை, சார்புகளின்றி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் மக்கள் எப்போதும் ஒரு இராணுவ நெருக்கடிக்குள் இருந்துவர வேண்டும் எனும் புலிகளின் கோட்பாடு, நிலைமை சீரடைவதற்குத் தடையாய் உள்ளது என்பதே எமது அபிப்பிராயமாகும்.

பயணிகள் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்பு விமானச் சேவைகள் தடைப்பட்டதன் காரணமாக, ஏற்கனவே சொல்லொணா கஷ்டங்களை அனுபவித்து வரும் நாம், அரச ஆதரவிலான விமான, கப்பற் சேவைகளில் பயணம் செய்ய வேண்டாமென இப்போ நீங்கள் விடுத்துள்ள எச்சரிக்கையினால் மேலும் கஷ்டத்திற்குள்ளாகும் நிலையில் உள்ளோம். அதுமாத்திரமல்ல, சீரான போக்குவரத்து வசதியில்லாவிடில் வெளிநாடுகள் நேரடியாக இங்கு மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகள் கூடப் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது. ஜேர்மனியின் பிரதி தூதுவர் ஹான் ஸ்வோன் பொத்மர் சீரான போக்குவரத்து இன்மையால் தமது நாடு இங்கு செய்வதற்குத் திட்டமிட்டிருந்த பணிகளில் 25% குறைக்க நேரிடும் என்று தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆதலால், கருணையோடு தங்கள் முடிவை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த கோருகிறோம்.

அரசாங்கம் புலிகளின் செயற்பாடுகளை முடக்குவதற்கென விதித்த பொருளாதாரத் தடை யாரைப் பாதித்தது? எம்மைப் போன்ற பொதுமக்களையே அன்றி உங்களை அல்ல. அதுபோல் நீங்கள் விதிக்கும் பிரயாணத் தடை தமிழ் மக்களைப் பாதிக்குமே அல்லாமல் இராணுவத்தினரை அல்ல.

அரசு தனது இராணுவ விநியோகப் பாதைக்கு மக்களைப் பயன்படுத்துகிறது என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் மக்கள் பயணம் செய்யாவிடில் இராணுவ விநியோகப் பாதை முடக்கப்பட்டுவிடுமா? குடாநாட்டைக் கைப்பற்ற அரச படைகள் எந்த மக்களை கேடயமாக பயன்படுத்தினர்? லயன் எயார் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னரும் பயணிகள் விமானச் சேவை தடைப்பட்டதேயன்றி இராணுவத்தினரை ஏற்றியிறக்கும் பணியில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதுதானே உண்மை.

உங்கள் துண்டுப்பிரசுரத்தில் எமக்கு ஏற்படும் அசௌகரியங்களையிட்டு மனம் வருந்துவதாக தெரிவித்துள்ளீர்கள். எமக்கு ஏற்பட்டிருக்கும் பாரிய நெருக்கடியை அசௌகரியம் என்று எளிமைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளீர்கள். வெறுமனே மனம் வருந்துவதால் மட்டும் எமது துன்பங்கள் அகன்று விடாது. மக்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளை போக்குவதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பும் மக்களுக்காகப் போராடுபவர்களுக்கு உண்டு.


எனவே மாற்று வழி ஏதுமற்ற நிலையில், எமது அன்றாட வாழ்வுத் தேவைகளை மதிக்காமலும், எமது வாழ்விற்கு அடிப்படையான அத்தியாவசிய சேவைகளை சீர்குலைக்கும் வகையிலும் செயற்பட வேண்டாமென... உங்கள் போராட்ட நடவடிக்கைகளிற்கு பல்வேறு வழிகளிலும் பங்களிப்பு செய்தவர்கள் என்ற உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம்.

**- பாதிக்கப்பட்ட மக்கள்**

(யாழ்ப்பாணத்திலிருந்து கணனியில் அச்சிடப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது இக்கடிதம். அதை அப்படியே இங்கு முழுமையாகத் தந்துள்ளோம்.
- ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமையை மதிப்பதா? கொசோவோ கொடுமையை தடுப்பதா?



குருக்ஷேத்திரன்

மீண்டுமொருமுறைஅமெரிக்கா தன் அடாவடித்தனமான அரசியலை உலக அரங்கில் பகிரங்கமாக அரங்கேற்றியிருக்கிறது. இம்முறை நேட்டோ (NATO) என்கிற அமைப்பின் பெயரை முன்னாலுரைத்து அமெரிக்கா யூகோஸ்லாவியா மீது தனது இராணுவத் தாக்குதலை மேற் கொண்டிருக்கிறது.

மொண்டிநீக்ரோ, சேர்பியா ஆகிய அரசுகளின் கூட்டமைப்பான யூகோஸ் லாவியா மீது நேட்டோ இராணுவம் தொடுத்திருக்கும் தாக்குதலானது படு மோசமானது என அமெரிக்க எதிர்ப் பாளர்கள் எல்லோரும் குரல் கொடுக் கின்ற அதே நேரத்தில் இத்தாக்குதல் சரியானதே எனவும் பலரால் அபிப்பி ராயமொன்று முன்வைக்கப்படுகிறது.

சேர்பியஅரசுத்தலைவரானஸ்லோ படான் மெலோசெவிக் என்னும் சேர் பிய இனவாதத்திற்கு இதைத் தவிர வேறு பதி லடி ஏதும் கொடுப்பதில் பயனில்லை என்பதே இத்தாக்குதலை ஆதரிப்பவர்களின் வாதம்.

சேர்பியரின் கொசோவோ என்னும் பிராந்தி யத்தில் வாழுகின்ற அல்பேனிய வம்சாவளி மக்களை முற்று முழுதாகத் துடைத்தழித்து விடும் நோக்கில் அவர்களை சேர்பியாவிலி ருந்து கலைத்துவிடுவதற்கு ஸ்லோபடான் மெலோசெவிக் எடுத்த தொலைநோக்கற்ற இன சுத்திகரிப்பு முயற்சி 21ம் நூற்றாண்டில் மிக வும் பெருமையோடு கால் பதிக்கக் காத்திருந்த ஐரோப்பாவிற்கு பாரிய அவமானத்தை ஏற்படுத் திவிட்ட செயலாகக் கருதப்படுகிறது.

எனவே நேட்டோ இராணுவம் யூகோஸ்லா வியா மீது நடத்திய தாக்குதல் ஐரோப்பியர்கள் மட்டத்தில் பெரும் ஆதரவைப் பெற்றிருக்கிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்பு 1946ஆம் ஆண்டிலிருந்து குரோசிய இனத்த வரான **மார்ஷல் ஜோசப் டிட்டோ** யூகோஸ் லாவிய ஜனாதிபதியாக இருந்த காலத்தில் யூகோஸ்லேவியா பல்வேறு துறைகளிலும் உலகிற்கு முன்மாதிரியான ஒரு கூட்டு அரசாக மிளிர்ந்தது. 1981இல் டிட்டோ அவர்கள் இறக் கும் வரை யூகோஸ்லாவியா சமூகப் பொருளா தார முறையில் குறிப்பிட்ட முன்னேற்றத்தைக் காண்பித்தது மட்டுமல்லாமல் சர்வதேச உறவு களைப் பேணுவதில் முக்கியமாக அணிசேரா நாடுகளுக்கு தலைமைத்துவத்தையும், வழிகாட் டுதலை வழங்குவதிலும் மிக முக்கிய பாத்தி ரத்தை வகித்தது.



மார்ஷல் டிட்டோ

அக்காலத்தில் ஸ்லோவேனியா, குரோசியா, மஸ்டோனியா, சேர்பியா, பொஸ்னியா, ஹர்ஸ கோவினா, மொண்டிநீக்ரோ என்னும் பல பிராந் திய அரசுகள் இணைந்த கூட்டு இராச்சியமா கவே யூகோஸ்லேவியா விளங்கியது. ஒரு இன த்தை இன்னோரினம் அடிமைப்படுத்தி விடாத முறையில் பல்வேறு இனங்கள் சமத்துவமாக வாழ்வதற்கு அன்று அத்தேசத்தில் பின்பற் றப்பட்ட அரசியல் கொள்கை காரணமாக இருந் தது. அதன் பிரதான காரணகர்த்தராக மார்ஷல் டிட்டோ இருந்தார். குரோசிய இனத்தவரான மார்ஷல் டிட்டோ நான்கு தசாப்தங்களுக்கு மேலாக அந்நாட்டின் அரச தலைவராக இருந் தார் என்பது இதை நன்கு விளக்கும்.

ஆனால் அவரின் மறைவோடு நிலைமை தலைகீழாக மாற ஆரம்பித்தது.

அத்தனை காலமும் அக்கட்சிக்குள் தலை தூக்காமல் இருந்த இனவாதம் சேர்பியத் தலை வரான ஸ்லோலபடான் மெலோசெவிக்கின் தலைமையின் கீழ் சேர்பியாவில் வேகமாக பரவ ஆரம்பித்தது. சேர்பியப் பிராந்தியத்தின் தலை வரான ஸ்லோபடான் பதவியேற்றவுடன் அக் கூட்டாட்சியில் இருந்த பல பிராந்தியங்கள் கூட் டாட்சியை விட்டு விலகி தனித்தனி இராச்சி யங்களாக அமைத்துக் கொள்ள முயற்சித்தன.

1990ஆம் ஆண்டில் இந்நிலைமை மிக மோச மடைந்தது. ஸ்லோவேனியா, குரோசியா, பொஸ் னியா, ஹர்ஸதோனியா ஆகிய நான்கு பிராந் தியங்கள் தம்மைத் தனித்தனி இராச்சியங் களாக பிரகடனப்படுத்தின.

அந்நாடுகளில் வாழ்ந்த சேர்பிய இன மக்க ளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட் டதென்ற காரணத்தை முன்வைத்து சேர்பியா பிரிந்து சென்ற இராச்சியங்களின் மீது மோச மான இராணுவப் பாய்ச்சலை மேற்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்பியப் பேரினவாதத்தின் இனச் சுத்திகரிப்பு (*Ethinic Cleaning*) போராட்டம் என வர்ணிக்கப்பட்ட இத்தாக்குதலால் குரோசியா, பொஸ்னியா, ஹர்ஸதோவினா ஆகிய நாடுகளில் இரண்டரை இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் மிகக் குறுகிய காலத்தில் படுகொலை செய்யப்பட்டதுடன் மூன்று மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் சேர்பிய இராணுவத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் அகதிகளாக்கப்பட்டனர்.

ஐரோப்பிய நாடான நாஸி ஜெர்மனியில் ஹிட்லர் மேற்கொண்ட லட்சோப லட்சம் கொலைகளுக்குப் பின்பு வெட்கித் தலை குனிந்திருந்த ஐரோப்பா, உலகில் தங்களுடைய நாகரிகத் தன்மையையும், மனித நேயத்தையும் பறைசாற்றுவதற்காக எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் 1990களில் யூகோஸ்லாவியாவின் சேர்பிய இராணுவம் மேற்கொண்ட இப்படுகொலை செயற்பாடானது முற்று முழுதாக ஐரோப்பாவை மீண்டுமொருமுறை ஆட வைத்துவிட்டது.

சேர்பிய இராணுவம் எவ்வளவு மோசமாக நடந்துகொண்டது என்று சொன்னால், இனிமேல் யூகோஸ்லாவியாப் பிரதேசமெங்கும் பிறக்கும் குழந்தைகள் கூட சேர்பியர்களாகவே பிறக்க வேண்டும் என்ற வெறியில் பல்லாயிரக்கணக்கான பொஸ்னியமுஸ்லிம் பெண்களை துப்பாக்கி முனையில் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தியதுடன் அவர்களை நாலுமாத காலத்திற்குத் தங்கள் கட்டுப்பாட்டிலேயே அடைத்து வைத்திருந்து கருவைக் கலைக்க முடியாதவாறும் பார்த்துக் கொண்டனர்.



அல்பேனியராய் பிறந்த பாவம்

இறந்துபோன பொஸ்னியர்களின், குரோசியர்களின் மண்டைகளைப் பிளந்து மூளைகளை எடுத்து தங்கள் நாய்களுக்கு உணவாக்கினார்கள். இதுநாகரிக சமூகம் எனப் பறைசாற்றிக் கொள்கின்ற ஐரோப்பாவிலேதான் நடக்கின்றதா எனப் பலரும் மூக்கில் விரலை வைக்கக் கூடியளவுக்கு சேர்பிய இராணுவம் நடந்து கொண்டது.

இந்த மனித அழிப்பு செயற்பாட்டைத் தடுக்கவும், அதைப் பற்றி நீதி விசாரணை செய்யவும் சர்வதேச மட்டத்தினாலான குற்றவியல் நீதிமன்றமொன்றும் ஐ. நா. சபையினால் உருவாக்கப்பட்டது. எவ்வாறாயினும் சேர்பிய யுத்த வெறியின் முன்னால் ஐ. நா. சபையினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதன் பின்பு நேட்டோ இராணுவத்தின் தலையீட்டோடு குரோசியாவும் பொஸ்னியாவும் சேர்பியாவோடு *Daytone* என்னும் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். நேட்டோ இராணுவத்தின் மேற்பார்வையிலே மீண்டும் தற்காலிக அமைதி நிலைநிறுத்தப்பட்டது.



இப்போது மீண்டும் சேர்பியாவுக்குள் அல்பேனிய மக்கள் வாழ்ந்து வந்த கொசோவோ பிராந்தியத்தின் மீது தாக்குதல் ஆரம்பித்திருக்கும் மெலோசெவிக்கின் நடவடிக்கை மீண்டும் சேர்பிய இனவாதத்தின் அருவருப்பான செயற்பாட்டைத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

கொசோவோ பிரதேசம் சுமார் 10,887 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள நிலப்பரப்பாகும். இது சேர்பிய நாட்டு நிலப்பரப்பின் எட்டில் ஒரு பங்கான, மலைகள் சூழ்ந்த பகுதியாகும்.

1991ஆம் ஆண்டிலே இப் பிரதேசத்தில் 19 இலட்சத்து 56 ஆயிரம் மக்கள் வாழ்ந்தார்கள். அதில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானோர் அல்பேனிய வம்சாவளி மக்களே. இது மொத்த சேர்பிய ஜனத்தொகையோடு ஒப்பிடுகையில் 17 சதவீதமாகும்.

அல்பேனிய வம்சாவளி மக்கள் வாழும் நிலப் பிரதேசமானது இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு முன்பு அல்பேனியாவுக்குச் சொந்தமானதாக இருந்தது. ஆனால் 1946 இற்குப் பின்னர், அது சேர்பியாவின் ஒரு பிரதேசமாகக் கணிக்கப்பட்டு 1987ஆம் ஆண்டு வரை ஒரு சுய ஆட்சிப் பிரதேசமாக இருந்தது.

1981ஆம் ஆண்டுபதவிக்கு வந்த மெலோசெவிக் தனது இனவாத நடவடிக்கைகளை கொசோவோ பிரதேசத்தின் மீது கட்டவிழ்த்துவிட்டார். அதற்கு எதிராக அல்பேனிய மக்கள் கொதித்தெழுந்தார்கள். அம்மக்களின் எழுச்சியை சட்டவிரோதமானது எனக் கூறிய மெலோசெவிக் அரசு, கொசோவோ பிரதேசத்தின் சுயாட்சி முறையைக் கலைத்து அங்கு இராணுவ ஆட்சியை நிறுவியது.

அதன் பின்பு அங்கு சிவில் யுத்தம் ஆரம்பமாகியது. பல அல்பேனியத் தலைவர்கள் கொசோவோவிலிருந்து வெளியேறி முன்னர் யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்து சென்ற மஸிடோனியாவில், 1990இல் தமக்கென ஒரு பாராளுமன்றத்தை அமைத்துக் கொண்டனர்.

மிகச் சமீப காலத்திலும், கொசோவோ பிரதேசத்தில் வாழ்ந்த அல்பேனிய வம்சாவளி மக்கள் அல்பேனிய மொழியில் கல்விகற்பதை மெலோசெவிக் அரசு தடை செய்ததுடன், போராட்டம் உக்கிரமடையத் தொடங்கியது. அப்பொழுது சேர்பிய அரசின் இராணுவம் அல்பேனிய வம்சாவளி மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான தாக்குதல்களை கடுமையாக ஆரம்பித்தது. அதற்கு எதிராக நேட்டோ இராணுவம் சேர்பியாவின் இலக்குகள் மீது கடுமையான குண்டு வீச்சுக்களினால் பதிலடி கொடுத்து வருகிறது.

ஒருபுறம், உள்நாட்டுப் பிரச்சினைக்குள் பல வெளிநாடுகளின் கூட்டு இராணுவங்கள் சேர்ந்து தாக்குதல் நடத்துவதை விமர்சித்தேயாகவேண்டும். குறிப்பாக அமெரிக்காவின் தலைமையில் இவ்வாறான அடாவடித் தலையீடுகள் பல்வேறு நாடுகளின் வரலாற்றில் நடந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேர்பியா நாட்டின் இராணுவ இலக்குகள் மீதுதான் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அமெரிக்கா கூறிக் கொண்டாலும் அங்கு வாழ்கின்ற சாதாரண சேர்பிய மக்கள் கொல்லப்பட்டு அகதிகளாக்கப்படுவதும், அவர்களின் சொத்துக்கள் அழிவதும் மறுபுறம் நடைபெறத்தான் செய்கிறது. அதேவேளை தேசிய அரசுகளின் தனித்துவம், சுயாதிக்கம் என்பவற்றின் மீது வெளிநாடுகள் தாம் நினைத்த விதத்தில் கை வைக்க அனுமதிப்பதும் மிகப் பாரதூரமானதாகும்.

ஆனால், தமது சொந்த நாட்டுக்குள் வாழ்கின்ற, வாழ்ந்து வருகின்ற மக்கள்மீது எந்தக் காரணத்தை முன்வைத்தும் தாக்குதல் நடத்துவதையோ, அழிப்பதையோ, அல்லது அந்த மண்ணை விட்டு விரட்டுவதையோ சர்வதேச சமூகம் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது 21ம் நூற்றாண்டின் படு முட்டாள்தனமாகும்.

எனவே கொசோவோ பிராந்தியத்தின் மீது சேர்பியா ஆரம்பித்திருக்கும் இச்சுத்திகரிப்பு யுத்தத்தை எந்த வகையிலும் நியாயப்படுத்தவோ, வக்காலத்து வாங்கி அது உள்நாட்டுப் பிரச்சினை, எனவே தலையிட்டது தவறு என கூக்குரலிடுவதோ இன்று அர்த்தமற்றது.

அமெரிக்கக் கைகளில் மாத்திரம் இதனை ஒப்படைக்காது சேர்பியாவின் இந்தப் பிரத்தியேக நிலவரத்தைக் கையாளும் தார்மீக உரிமையை சர்வதேச சமூகம் ஏற்பதாயின் அதற்கு முன் சில தீர்க்கமான வரையறைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சர்வதேச சமூகத்தின் தீர்மானங்களுக்கு அமெரிக்கா இணங்கி நடக்குமென்பது முதலில் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். மாறாக அமெரிக்க நலன்களுக்கேற்ப சர்வதேச சமூகம் செலுத்திச் செல்லப்பட இடமளிக்கக் கூடாது.

அமெரிக்காவுக்கு எதிரான கம்யூனிஸ கூட்டு நாடாக இருந்த முன்னைய யூகோஸ்லாவிய ஆட்சிமுறையைக் குலைக்க அமெரிக்க முகாம்கள் மேற்கொண்ட கபடத்தனமான நடவடிக்கைகளையும் சர்வதேச சமூகம் அப்போது கண்டுகொள்ளவில்லை. அவற்றின் மோசமான விளைவுகளே இன்றைய நெருக்கடிக்கு அத்திவாரமிட்டன என்பதையும் எண்ணிப் பார்க்க விழையவில்லை. இதேபோல் கியூபா, வட கொரியா, ஈரான், லிபியா போன்ற நாடுகளையும் நெருக்கடிக்குள் தள்ளவிரிக்கப்படும் சதிவலைக்கும் சர்வதேச சமூகம் எடுபட்டுவிடக்கூடாது.

உலக அதிகாரம், எதிர்த்தரப்பற்ற நிலையில் அமெரிக்காவின் ஏகபோகமாக மாறியுள்ளது. இதனால் 21ம் நூற்றாண்டில் உலகம் புதிய அரசியல் சவாலொன்றை எதிர்கொண்டுள்ளது.

நாடுகளுக்குள் நிகழும் எதேச்சாதிகாரங்கள் இனப் படுகொலைகளாகவும் இரத்தக் களரிகளாகவும் மாறி, ஒரு எல்லையைத் தாண்டும் போது சர்வதேச சமூகம் தலையிடலாமா என்பதற்கு சாதகமான பதில் ஒன்று தேவையாகியுள்ளது.

தலையிட அங்கீகரிப்பதாயின் அதில் முடிவுகளை மேற்கொள்ளும் உலக நாடுகளின் குழுவுக்கான (*Panal*) அங்கத்துவத் தகுதி என்ன?

அதில் அமெரிக்கா போன்ற எந்தவொரு வல்லரசும் பலவந்தம் செலுத்தாத பொது முடிவொன்றை எடுப்பதற்கான பொறிமுறை என்ன?

இவ்வாறான நடவடிக்கைகளை எந்தவொரு தனிப்பட்ட நாட்டுக்கும் அரசியல், பொருளாதார லாபத்தைப் பெற்றுக்கொள்ள வழிசெய்யாத வகையில் அமுலாக்குவது எப்படி?

நீதியான தீர்வொன்றைக் காணுவதேயன்றி நாடுகளின் இறைமையையும் சுதேசத் தன்மைகளையும் சிதைத்துவிட வழிகோலாதவாறு விடயங்கள் கையாளப்படுவதை உத்தரவாதப்படுத்துவது எப்படி?

இவை இருபத்தியோராம் நூற்றாண்டு விடைகண்டாக வேண்டிய பொதுச் சவால்களாக இன்றைய உலக அரங்கில் முளைவிட்டிருக்கும் புதிய சிக்கல்கள். இவை தீர்க்கப்படாத வரை உலக நாடுகளின் இறைமைக்கு கேள்விக்குறியொன்று அச்சுறுத்தலாக இருந்துகொண்டுதான் இருக்கப் போகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நாக்கைக் கடிக்காதீர்!

உறுப்பின் இழப்பைத்தான்
ஊனம் என்றறிவோம்
இதயமற்ற பல பேர்கள்
முழு மனிதரென்று
நடமாடப் பார்த்து நிற்போம்!

ஆறாம் அறிவு
உள்ளதாகப்
பெருமைப்படுவோம்
மற்ற ஐந்தறிவும் உள்ளதற்கு
அறிகுறி எதையும் காட்டோம்!

பேசத் தெரிந்த மிருகம்
என்றும் புகழ் நமக்கு
தடுமாறி நாம் எமது
நாக்கைக் கடித்தால்
இறந்து விடுவோம்
அத்தனை நஞ்சு!

மனிதர் என்று பேர் சொல்லி
வாழும் எம்மில்
மனிதராக வாழ்பவர்கள்
எத்தனை பேர்?

- நாச்சியாதீவு பர்வீன்

## நான் கவிமகனல்ல

பஞ்சுப் பாதந் தொட்டு
பாதையல் நடக்கையிலே
நெஞ்சில் ஆயிரம்
நினைவுகள் தேன் வார்க்கும்

அத்தி இதழிடையில்
அழகு மின்வெட்டும்
பல் வரிசை பவளமென
கண் கூசும்

ஒய்யாரப் பார்வை
உயிரை வருத்தும்
எத்தனை மின்னலை
விழுங்கினாய்
இப்படி மனதில்
அதிர்ச்சியைப் பாய்ச்சுகிறாய்

பார்க்குமிடமெல்லாம்
உன் முகம் தோன்ற
என் முகம் தொலைக்கின்றேன்
கானலைத் தொட்டுக்
கை நொந்த கதையாய்
கலங்குகின்றேன்

நிலவுக்கு ஒளி தந்தவளே
நிமிர்ந்து பார்
நைந்த என் இதயத்தை
உன் விழிக் கரங்களால்
வருடு, சீர் செய்!

நான் கவிமகனல்ல
உன் விழிகளை
மொழிபெயர்த்து
பெயர் சூடிக் கொள்கிறவன்.

- புத்தளம் கே. நாகேந்திரன்

## பட்டாம் பூச்சியாய்....

உன் இதழ்களில் பூத்த
மலர்கள்
என இதயத் தில
மாலையாக விழுந்தது....

உன் விழிகளாய் சுழலும்
கருவண்டுகளின்
ரீங்காரம்
என் செவிகளுக்குள்
காதல் கீதத்தை
முணுமுணுக்கும்....

உன் மௌன பாஷையும்
உதடுகளுக்குள் மின்னும்
மெல்லிய முறுவலும் காட்டிய
பச்சைக் கொடியில்
என் உள்ளம்
பட்டாம் பூச்சியாகப் பறக்கிறது.

- நெடுந்தீவு லக்ஸ்மன்

## தத்துவத்தின் உதவி

அழகின் உபாசகனாய்
மயங்கித் திரிந்ததொரு காலம்

என் திருமணம்
பகலில்தான் நடந்தது
பின்னால்
தங்கைகளின் வரிசை
பார்வையை மூடிக்கொண்டேன்

எல்லாப் பெண்களும்
இருளில் அழகிகள்தான்
தத்துவமே இனி எந்தன்
வாழ்க்கையைச் சுமக்கும்.

- காத்தான்குடி எஸ். எஸ். ஹமீது

## பக்தகோடிகள்

குருந்தமர நீழலையும்
கல்லால விருட்சத்தின்
நல்லுபதேசங்களையும்
ரசிக்கவும்
பரப்பவும்
செல்லும் பக்தகோடிகளே
உங்கள் அயலில் உள்ள
செடிகளுக்கு
நீரூற்ற மறப்பதேன்?

- மட்டுவில் ச. வாசுகி

## கசந்த மழலை

யாழினும் குழலினும்
இனிதென்ற போதும்
மழலைச் சொல்லில்
மனம் கசந்தது
கையில் தட்டுடன்
வாசலில்
'அம்மா' என்றபோது!

- கடுகண்ணாவ பாத்திமா ரிஸ்லினா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலிகளின் போராட்டத்தை வைத்து பிறர் அரசியல் செய்வது தவறு

அமுதுக்கு பிரத்தியேக பேட்டி

அடைக்கலநாதன்
டெலோ தலைவர்
சந்திப்பு: பாஸ்கரன்

**கேள்வி:** நீங்கள் ரெலோ அமைப்பின் தலைவரானது எவ்வாறு?

**அடைக்கலநாதன்:** நான் 1979ம் ஆண்டு இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் மாணவனாக இருந்த போது எனது 12 ஆவது வயதில் தமிழீழ விடுதலை இயக்கத்தில் இணைந்தவன். அப்போது தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் இயக்கத்தை வழிநடத்தி வந்தனர். 1983 ஜுலை வெலிகடைச் சிறைப் படுகொலைகளில் அவர்கள் கொல்லப்பட்ட பின்பு சிறீசபாரத்தினம் தலைவரானார்.

1995 ஏப்ரலில் புலிகள் இயக்கத்தினர் எம் மீது தொடுத்த தாக்குதலில் பல இளைஞர்களுடன் தலைவர் சிறீசபாரத்தினமும் கொல்லப்பட்டார். அதனையடுத்து நான் ரெலோ அமைப்புக்குத் தலைமை தாங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானேன்.

**கேள்வி:** அதன் பின், இப்போது ரெலோவின் தலைமைப் பீடம் எவ்வாறு அமைந்துள்ளது?

**அடைக்கலநாதன்:** ஆரம்பத்தில் தனி மனிதத் தலைமையாலேயே இயக்கம் வழிநடத்திச் செல்லப்பட்டது. ஜனநாயக நீரோட்டத்தில் நாம் கலந்து கொண்டதன் பின் ஜனநாயக வடிவத்தைப் பெறவேண்டுமென்ற காரணத்தால் தனி மனித தலைமையை மாற்றி, அதிகாரத்தைப் பரவலாக்கி, ஒரு மகாநாட்டை நடத்தி புதிய வடிவத்தைத் தோற்றுவித்துள்ளோம்.

எமது இயக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தும் பொறுப்பை *President* - தலைவர் - வகிப்பார், அதாவது நான். அரசியல் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் பொறுப்பை முதல்வர் வகிப்பார்.

**கேள்வி:** உங்கள் இராணுவப் பிரிவு யாரின் கட்டுப்பாட்டுக்குள் செயற்படுகிறது?

**அடைக்கலநாதன்:** தலைவரின் கட்டுப்பாட்டில்தான் இராணுவம் இருக்கும்.

**கேள்வி:** உங்கள் இராணுவத்தின் குறிக்கோள் என்ன?

**அடைக்கலநாதன்:** '83 காலகட்டத்தில் இருந்ததுபோல் எமது இராணுவச் செயற்பாடுகள் இப்போது இல்லை. ஜனநாயகத்தில் இணைந்து கொண்டதன் பின் இராணுவம் எமது பாதுகாப்புக்காகவே செயற்பட்டு வருகிறது.

ஏனெனில் எமது நாட்டைப் பொறுத்த மட்டிலே உயிராபத்துகள் நிலவுகின்றன. உண்மையான, நேர்மையான ஜனநாயகம் இன்னும் ஏற்படவில்லை. அப்படியான சுமுக சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் நாம் ஆயுதங்களைக் கையாளப் போவதில்லையெனச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**கேள்வி:** தமிழ் இயக்கங்களின் இராணுவங்கள் அரசின் இராணுவத்துக்குத் துணைபோவதாகவும், மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு மக்களுக்கு ஆயுத அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாகவும் அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. உங்கள் இராணுவ செயற்பாடுகளைப் பொறுத்தவரை இக் குற்றச்சாட்டுகள் குறித்து என்னபதில் கூறுகிறீர்கள்?



**அடைக்கலநாதன்:** ரெலோவைப் பொறுத்தவரை எமது இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எந்தக் காரணங் கொண்டும் இலங்கை அரச படைகளுடன் இணைந்து செயற்படுவதை நாங்கள் நிறுத்திக் கொண்டோம். காரணம் இவ் அரச படைகளுடன் சேர்ந்து செயற்படுவதால் மக்களுக்கு ஏற்படும் பலஇன்னல்கள் குறித்தபழியைநாமும் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் கூட அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவே நாம் வாக்களித்து வருகிறோம். இது எமது மக்களின் அடிப்படை உரிமையென்று நாங்கள் நினைக்கிறோம். இவ்வகையில் அரசுடனும் அரச படைகளுடனுமான ஒத்துழைப்பை நாம் மிக மிகக் குன்றத்து வந்திருக்கிறோம்.

எமது ஜனநாயக செயற்பாடுகளை விஸ்தரித்து எம்மை ஜனநாயக அரசியலில் ஈடுபடுத்தவே நாட்டம் செலுத்தி வருகிறோம். இதேவேளை நாம் எமது பாதுகாப்புக்கு ஆயுதம் ஏந்த வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் எமக்கு ஆயுதப் பற்றாக்குறை நிலவுகிறது. எனினும் அரசாங்கம் கேட்டுக்கொண்டவாறு தீருவை தரித்து ஆயுதம் பெறவும் நாம் விரும்பவில்லை. அதேவேளை ஒரு துணைப்படை என்றவாறு இயங்கவும் நாம் விரும்பவில்லை.

> **உண்மையான, நேர்மையான ஜனநாயகம் இன்னும் ஏற்படவில்லை. அப்படியான சுமுக சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் நாம் ஆயுதங்களைக் கையாளப் போவதில்லை.**

எமக்கு அதிக ஆயுதங்கள் பெற நாம் விரும்பியிருந்தால் இவ்வாறு பெற்றிருக்கலாம். அது எமது நோக்கமல்ல.

**கேள்வி:** உங்கள் ஆயுதப் பிரிவினரின் நடவடிக்கைகள் மக்களைப் பாதிக்கவில்லையென உறுதியாகத் தெரிவிக்க முடியுமா?

**அடைக்கலநாதன்:** நாம் எதையும் மறைக்க விழையவில்லை. சில வேளைகளில் எமது இராணுவ உறுப்பினர்கள் சிலரது செயற்பாட்டால் மக்களுக்கு சில இன்னல்கள் ஏற்பட்டதும் உண்டு. அவற்றை எமது தவறுகள் என்றே நாம் எடுத்துக்கொள்கிறோம். அவற்றிற்காக நாம் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

உலகில் எல்லா மனிதர்களிடமும் பலஹீனங்கள் உண்டு. சாதி, மத வேறுபாடுகளின்றி ஒரு கொள்கைக்காக ஒரே குடும்பமாகச் சேர்ந்து செயற்படும் எங்கள் அமைப்பின் இளைஞர்களிடையேயும்கூட இத்தகைய பலஹீனங்கள் உண்டு. இதை மனித சுபாவமென்றே நினைக்கிறேன். ஆனால் அவற்றை நான் நியாயப்படுத்த முனையப் போவதில்லை. நிச்சயமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org

அவற்றிற்காக மக்கள் மத்தியில் மன்னிப்புக் கோருகின்ற மனநிலைக்கு நாம் வந்திருக்கிறோம் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி:** வன்னி போன்ற பகுதிகளில் நீங்கள் பொருட்களுக்கு வரி அறவிடுவது நெருக்கடிக்குள் வாழும் மக்களுக்கு மேலும் சுமையை அதிகரிப்பதாக இருக்குமல்லவா?

**அடைக்கலநாதன்:** எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் மேற்கொள்ளுவது வரியல்ல. ஒரு வியாபாரம்தான் நாங்கள் செய்கிறோம். எந்தப் பொருளுக்கும் நாங்கள் வரி கேட்கவில்லை.

உதாரணமாக தேங்காயை நாங்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்து அதற்கு லாபமாக - அதிகமல்ல - ஒரு ரூபாய்தான் வைத்து சில்லறை வியாபாரிகளுக்குக் கொடுக்கின்றோம். இதுசாதாரண வியாபார நடைமுறைதான். இதன் மூலம் அபரிவிதமான விலை அதிகரிப்பு ஒன்றும் ஏற்படவில்லை. அவ்வாறு யாரும் பிரசாரம் செய்தால் அது பொய்.

இதை வரியென்று சொல்ல முடியுமா? வரியென்பது கொள்முதல் செய்யும் முதலாளிகளிடம் சென்று ஒரு தேங்காய்க்கு இவ்வளவு பணம் வீதம் கட்டும்படி கேட்பது. அதை நாம் செய்யவில்லை.

**கேள்வி:** ஆனால் உங்கள் அமைப்பின் ஒரு அறிக்கையில் உங்கள் உறுப்பினர்களைப் பராமரிப்பதற்காக இவ்வாறு பணம் திரட்டப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததே.

**அடைக்கலநாதன்:** ஆமாம். அது உண்மைதான். எங்கள் இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும் இயக்க உறுப்பினர்களின் எதிர்காலத்தை மனதிற் கொண்டும்தான் இம் முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன. ஆனால் அவை வரி என்று கூறப்படும பண அறவீடுகளல்ல. வியாபாரமே. இது ஒன்றும் தவறான மார்க்கமுமல்ல.


**கேள்வி:** தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வாக நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

**அடைக்கலநாதன்:** வடக்கு கிழக்கு இணைந்த, எங்களுடைய மரபுத் தாயகம் பாதுகாக்கப்படும் ஒரு தீர்வைத்தான் நாம் வலியுறுத்தி வருகிறோம். வடக்கு கிழக்கு பிரிக்கப்படவேண்டும், அம்பாறையில் முஸ்லிம்களுக்கு என்றொரு தனித்துவமான நிர்வாக அலகு அமைக்கப்படவேண்டும் என்றெல்லாம் கதைக்கப்படுகின்றது. வடக்கு கிழக்கு இணைந்த ஒரு தீர்வையே ஏற்கமுடியும் என்பது எமது நிலைப்பாடு.

> **நாங்கள் மேற்கொள்ளுவது வரியல்ல. ஒரு வியாபாரம்தான் நாங்கள் செய்கிறோம். எங்கள் இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும் இயக்க உறுப்பினர்களின் எதிர்காலத்தை மனதிற் கொண்டும்தான் இம் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.**

**கேள்வி:** உங்கள் நிலைப்பாட்டை அரசாங்கம் ஏற்பதற்கான அழுத்தத்தை மேற்கொள்ள என்ன முயற்சிகள் எடுத்துள்ளீர்கள்?

**அடைக்கலநாதன்:** இந்த விடயத்தில் நாங்கள் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலை இயக்கம் மட்டும் மேற்கொள்ளும் அழுத்தத்தை அரசாங்கம் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டாது.



தமிழ் கட்சிகள் எல்லாம் தத்தமது தனித்துவத்தைக் கைவிடாதபட்சத்திலும் முக்கியமான பிரச்சினைகளிலாவது ஒன்றுபட்டுச் செயற்பட்டால்தான் அரசாங்கத்துக்கு எமது நிலைப்பாடுகளை ஆணித்தரமாக வலியுறுத்த வழியேற்படும். அவ்வாறில்லாவிட்டால் இத் தமிழ் கட்சிகளைப் பிரித்துக் கையாளும் யுக்தியை அரசாங்கம் நிச்சயமாகப் பயன்படுத்தும். அதனால் தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டால்தான் இது சாத்தியமென நான் நினைக்கின்றேன்.

**கேள்வி:** சில தமிழ் அரசியல்வாதிகள் புலிகளின் போராட்டத்தை, தாம் அரசாங்கத்துடன் பேரம் பேசுவதற்கான பலமாகப் பயன்படுத்தலாமெனக் கருதுகிறார்கள். உங்கள்கருத்தென்ன?

**அடைக்கலநாதன்:** எம்மைப் பொறுத்தவரை நாம் எமது அரசியல் நடவடிக்கைக்கூடாகவே அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். புலிகளின் போராட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க நினைப்பது தவறு.

ஜனநாயக அரசியலுக்கு வந்த தமிழ் கட்சிகள் எங்கள் மக்களின் உரிமைகளுக்காக ஒற்றுமையாக இணைந்து மக்களின் ஆதரவுடன் அரசியல் ரீதியாகக் குரல் கொடுத்தால் அரசாங்கத்துக்கு தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுக்கலாம் எனக் கருதுகிறோம். ஆதலால், புலிகளின் போராட்டத்தை வைத்துக்கொண்டு பிறர் அரசியல் செய்ய முனைவது தவறு.

**கேள்வி:** புலிகள் தொடர்பான உங்கள் கருத்து என்ன?

**அடைக்கலநாதன்:** பிரபாகரன் தனது அண்மைய மாவீரர் உரையில் தெரிவித்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைகள் ஆகிய இரு கோரிக்கைகளையும் நாம் வரவேற்கிறோம். இவை இரண்டும் தீர்வு முயற்சியில் அவசியமானவை என வலியுறுத்துகின்றோம். அரசாங்கமும் சரி புலிகளும் சரி நிபந்தனைகளை வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு வருவதென்பது ஒரு நல்ல அறிகுறியாக இருக்காது.அதேவேளை மூன்றாம் தரப்புமத்தியஸ்தம் என்ற ஒன்றும் அவசியமானதாகவே நாம் கருதுகிறோம். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண விளையுமாறே இரு தரப்பையும் கோருகின்றோம்.

**கேள்வி:** இதே வேளை புலிகள் தாங்களே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் இப் பேச்சுக்களுக்கு வருவதை நீங்கள் அங்கீகரிப்பீர்களா?

**அடைக்கலநாதன்:** போராட்டத்தை விட்டுப் பேச்சுவார்த்தைக்குப் புலிகள் வருவார்களேயானால் அரசாங்கமும் அவர்களோடு பேசலாம் என்றே நாம் கருதுகின்றோம். ஆனால் ஏனைய தமிழ் கட்சிகளையும் கலந்தாலோசித்தே இறுதி முடிவை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அப்படி அமையும் தீர்வுதான் சகல தரப்பையும் திருப்தி செய்யும் முழுமையான தீர்வாக அமையும். ஆனால் ஜனநாயகத்துக்கு வந்ததன் பின்பு மக்கள் தான் யார் தங்களுக்காகச் செயற்படுவார்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

**கேள்வி:** மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நீங்கள் வலியுறுத்தும் போது அதற்கு எந்த நாட்டை நீங்கள் முன்மொழிகிறீர்கள்?

**அடைக்கலநாதன்:** இந்தப் பிரச்சினையை புதிதாக அணுகும் ஒரு நாட்டைத்தான் நாம் விரும்புகிறோம். ஆனால் இந்தியாவின் பங்களிப்பையும் நாம் மறுதலிக்க முடியாது. அதனால் எங்கள் பிரச்சினையைப் புதிதாகப் பார்க்கும் ஒரு நாடு மத்தியஸ்தத்துக்கு முன்வந்தால் அதில் இந்தியாவும் ஒரு பங்களிப்பை வழங்க வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

**கேள்வி:** தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல்தலைமைக்குஏற்பட்டுள்ளவெற்றிடத்தைப் போக்க ஒரு ஐக்கிய முன்னணியை அமைப்பது அவசியமென நீங்கள் கருதவில்லையா?

**அடைக்கலநாதன்:** இன்றைய அரசியல் சூழ்நிலையில் - யாழ்ப்பாணத்தில் எமது நிலம் இராணுவத்தால் சுவீகரிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது. வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் உணவு உறைவிடம் போன்ற அத்தியாவசியத் தேவைகள் கூட கிடைக்க முடியாத நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

எங்களுடைய மக்களுக்காக, நம் பிரதேசம் பறிபோய்விடக் கூடாது என்ற விடயங்களிலாவது நாங்கள் ஒற்றுமையாக செயற்படுவதும் இணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் அவசியம். அதை நாங்களோ மற்ற தமிழ் கட்சிகளோ முன்னின்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தமிழ்க் கட்சிகளும் தமது தனித்து வத்தை விட்டுவிட்டு வரவேண்டுமென்று நான் கூறவில்லை. தத்தம் தனித்துவங்களுடனேயே ஐக்கியப் படலாம். இதிலே எங்களுக்கிடையில் ஒற்றுமை வரவில்லையென்றால் நாம் மக்களுக் காக சேவை செய்கிறோமென்று கூறுவது மக் களை ஏமாற்றும் முயற்சியாகவே அமையு மெனக் கருதுகிறேன்.

**கேள்வி:** இதற்குத் தடையாக இருப்பது என்னவென்று கருதுகிறீர்கள்?

**அடைக்கலநாதன்:** ஒன்றும் இல்லை. பார்க் கப் போனால் பெரிய தடையென்று இதில் எது வும் இல்லை. யார் இதை ஏற்படுத்துவது என்பது தான் கேள்வியாக உள்ளது. தமிழ் கட்சிகளின் தலைவர்களோடு கதைத்து ஒற்றுமையை ஏற் படுத்தும் முயற்சியில் நாங்கள் தற்போது ஈடு பட்டிருக்கின்றோம். நாங்கள் மட்டுமல்ல யார் இம் முயற்சியை மேற்கொண்டாலும் நாங்கள் எங்கள் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இரு க்கிறோம்.

இவ் ஒற்றுமை அவரவர் தனித்துவத்தைப் பேண வழிவிடும் வகையில் விட்டுக்கொடுப்புக ளுடன் அமைந்திருப்பதை நாம் விரும்புகிறோம். இது இன்றைய காலத்தின் தேவை.

**கேள்வி:** கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நீங் கள் யு.என்.பி.க்கு ஆதரவளித்த காரணம் என்ன?

**அடைக்கலநாதன்:** ஏனெனில் அன்று ஜனா திபதித் தேர்தலில் யு.என்.பி. யில் போட்டியிட் டவர் எமது மக்களின் பிரச்சினைகளில் நேர் மையாகச் செயற்படுவார் என்ற எண்ணத்தினால் தான் அவரை ஆதரித்தோம். வேறு காரணங்கள் அதில் இல்லை.

**கேள்வி:** இன்றைய யு.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் உட்கட்சிக் கூட்ட மொன்றில், 1981ம் ஆண்டு யாழ். மாவட்டசபைத் தேர்தலில் தமது அரசாங்கம் மோசடிகள் புரிந் ததை ஏற்றிருந்தார். யாழ். நூல் நிலையம் தீக் கிரையாக்கப்பட்டதும் அப்போதுதான். அச் செய ல்களுக்கு நீங்கள் ஆதரித்த யு.என்.பி. ஜனா திபதி வேட்பாளரும் பொறுப்புடையவராக இருந் தாரல்லவா?

**அடைக்கலநாதன்:** இவற்றில், தான் நேரடி யாகச் சம்பந்தப்படவில்லை எனவும் தமிழ் மக் களுக்கு நிகழ்ந்த அனர்த்தங்கள் குறித்து தான் வருந்துவதாகவும் எம்மிடம் அவர் தெரிவித்தி ருந்தார்.

**கேள்வி:** இன்றைய அரசாங்கம் வைத்தி ருக்கும் உத்தேச தீர்வுத் திட்டம் பற்றி உங் கள் அபிப்பிராயம் என்ன?



**எல்லாத் தமிழ்க் கட்சிகளும் தத்தம் தனித்து வங்களுடனேயே ஐக்கியப்படலாம். எங்க ளுக்கிடையில் ஒற்றுமை வரவில்லையென்றால் நாம் மக்களுக்காக சேவை செய்கிறோமென்று கூறுவது மக்களை ஏமாற்றும் முயற்சியாகவே அமையுமெனக் கருதுகிறேன்.**

**அடைக்கலநாதன்:** இது ஒரு முழுமையான தீர்வாக அமையவில்லை என்பதுதான் எமது கருத்து. இத் தீர்விலே பல விடயங்கள் மறைக் கப்பட்டிருக்கிறது. இதில் தமிழ் கட்சிகளின் கருத்துக்களை உள்வாங்கி மறு பரிசீலனை செய்யவேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை.

இதே வேளை இத் தீர்வை அமுலாக்க இரு பெரும் கட்சிகளும் இணக்கத்துக்கு வர வேண் டும். தமது பிரதேசங்களில் தேர்தல்களை சரிவர நடத்துவது குறித்து இரு கட்சிகளும் சந்தித்துப் பேசுகிறார்கள். ஆனால் இன்றைய தலையாய பிரச்சினையாக இருக்கும் இவ் இனப் பிரச்சி னைக்குத் தீர்வு காணுவதற்கு சந்தித்துப் பேசு கிறார்களில்லை.

இவர்கள் இருவரும் ஒத்துழைத்தால்தான் பிரச்சினை தீர்ந்து இந் நாட்டுக்கு நல்ல எதிர் காலம் தோன்ற முடியும்.

**கேள்வி:** உத்தேச தீர்வு குறித்த விடயத்தில் முஸ் லிம்களுக்கான தென் கிழக்கு அலகு என்ற கோரிக்கையில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**அடைக்கலநாதன்:** எமது ஆணித்தரமான கருத்து யாதெனில் வடக்கு கிழ க்கு இணைந்த பிரதேச மாக இருக்க வேண்டும். இதில் முஸ்லிம்களுக்கு எங்களுடைய மாநில ஆட்சிக் குள்ளேயே சில வழிமுறைகளை நாம் பேசி ஏற்படுத்திக் கொள்ளலாம். தமிழ் பகுதிகளுக் குள் வசிக்கும் முஸ்லிம்களுக்கான ஏற்பாடுக ளைப் பற்றியும் அதேபோல் முஸ்லிம் பகுதி களுக்குள் வாழும் தமிழர்களுக்கான ஏற்பாடு களையும் நாம் சிந்திக்க வேண்டுமேயல்லா மல் தனியாகப் பிரித்துக் கொடுப்பது என்பதை நாம் ஏற்க முடியாது. வடக்கு கிழக்கு எவ்விதத் திலும் பிரிக்கப்படக் கூடாது.

**கேள்வி:** அம்பாறை மாவட்டத்தைப் பிரித்து சிங்களப் பிரதேசங்களுடன் இணைக்க சில அரசியல் தலைவர்கள் சிபாரிசு செய்கிறார்கள். இதுகுறித்து...?

**அடைக்கலநாதன்:** இப்பகுதி படிப்படியாக் குடியேற்றப்பட்டு எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட இடமென்றுதான் நாம் பார்க்கிறோம். அம் மாவட் டம் படிப்படியாக அரிக்கப்பட்டு வந்துகொண் டிருக்கிறது. ஆனால் முடிந்த அளவு இதற்கு என்ன தீர்வை ஏற்படுத்தலாம் என நாம் பேசிப் பார்க்கலாம்.

ஆனால் அதை விட்டுக்கொடுப்பதா என்பதும் விட்டுக் கொடுக்கத்தான் வேண்டுமெனில் எந்த அளவு விட்டுக் கொடுப்பதென்பதும் மாற்றாக என்னத்தைப் பெறப்போகிறோம் என்ற தெளி வோடு கடைசி நேரத்தில் மேற்கொள்ள வேண் டிய தீர்மானம் என நாம் கருதுகிறோம்.


**கேள்வி:** வன்னி மற்றும் கிழக்குப் பகுதிக ளில் விரைவில் உள்ளூராட்சித் தேர்தல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இத் தேர்தல்களில் நீங்கள் எத்தகைய சுலோகங்களை முன்வைத் துப் போட்டியிடவுள்ளீர்கள்?

**அடைக்கலநாதன்:** அரசாங்கம் பேச்சுவார்த் தைக்கு வரவேண்டும். வன்னியில் மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் உணவுகளை வழங்கவேண்டும்.

மற்றும் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களில் கூட மக்கள் பாஸ் பிரச்சினை மற்றும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். அவற்றை முன்வைத்து எமது சுலோகங்கள் அமையும்.



Photos by : Saman mendis

**கேள்வி:** உங்கள் ஆட்சியிலிருக்கும் யாழ். வல்வெட்டித்துறை நிர்வாகம் எப்படிச் செயற்படுகிறது?


**அடைக்கலநாதன்:** பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருந்தாலும்கூட அங்கு எமது நிர்வாகத்தை முன்னேற்றகரமாக செயற்படுத்தி வருகின்றோம். பல வீதிகளை அமைத்து செப்பனிட்டு வருகிறோம். இப்பொழுது வல்வெட்டித்துறை நகரசபை கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. உடைக்கப்பட்டிருக்கும் தொண்டமானாற்றுப் பாலத்தை செப்பனிட முயற்சியெடுத்திருக்கிறோம்.

எனினும் நகரசபைக்கான அரசாங்க நிதி ஒதுக்கீடு குறைவாகவே உள்ளது. கடந்த காலங்களில் பல நகரசபைகளில் நிதி சேமித்து வைக்கப்படவில்லை. வல்வெட்டித்துறை நகரசபையிலும் நிதி சேமிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நாம் அரசாங்கத்தின் நிதியில்தான் பெரிதும் தங்கியிருக்கவேண்டிய நிலை உள்ளது.

அதேவேளை மக்களின் கஷ்ட நிலைமையை முன்னிட்டு வரி அறவிடுவதில்லை எனவும் மிக அண்மையில் முடிவெடுத்திருக்கிறார்கள். முழுமையான வேலைத்திட்டங்களைச் செய்ய முடியாதிருந்தாலும் முடிந்த அளவு எமது நகரசபை சிலசில வேலைத்திட்டங்களைச் செய்துகொண்டு வருகிறது.

இதே வேளை நாம் அதிகாரத்தில் இல்லாத ஏனைய உள்ளூராட்சி சபைகளிலும் அந்தந்த சபைகளின் ஆளும் கட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி ஒற்றுமையாகவே செயற்பட்டு வருகிறோம்.

**கேள்வி:** திருகோணமலை மாநகர சபையில் உங்கள் ஆட்சியே உள்ளது. எனினும் அச்சபையின் தலைவருக்கும் உங்கள் கட்சிக்கும் இடையில் சுமுக உறவுநிலை இல்லையெனக் கருதப்படுகிறது. உண்மை நிலை என்ன?



**அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும். வன்னியில் மக்களுக்கு உணவுகளை வழங்கவேண்டும். மற்றும் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களில் கூட மக்கள் பாஸ் பிரச்சினை மற்றும் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகிறார்கள். அவற்றை முன்வைத்து எமது சுலோகங்கள் அமையும்.**

**அடைக்கலநாதன்:** அத்தகைய நிலைமை இருந்தது. ஆனால் நாம் இப்போது அவருடன் பேசிக்கொண்டு வருகின்றோம். முன்னையதை விட இப்போது நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

**கேள்வி:** அண்மையில் முன்னாள் முதலவர் வரதராஜப் பெருமாள் வந்ததையிட்டு அவரை வட- கிழக்கு மாகாண ஆளுநராக்க வேண்டும் என்று அவர் ஜனாதிபதியிடம்விடுத்த கோரிக்கை உங்கள் கட்சியின் சம்மதத்துடனானதா?

**அடைக்கலநாதன்:** இல்லை. அது அவருடைய தனிப்பட்ட கருத்து.

**கேள்வி:** திருகோணமலை புதிய சந்தை திறப்பது குறித்து ஏற்பட்டிருக்கும் சர்ச்சையை எப்படிக் கையாளப் போகிறீர்கள்?

**அடைக்கலநாதன்:** இந்தச் சந்தை திருகோணமலைக்குப் பயன் தரும் ஒன்று. இது திறக்கப்பட வேண்டும். இதை இனரீதியாக அரசாங்கம் பார்க்கக் கூடாது. இது பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டிய ஒரு விடயம். ஆனால் திருகோணமலையைப் பொறுத்தவரைஇவ்விவகாரத்தில் அரசாங்கம் இனரீதியாகத்தான் செயற்படுகிறதென்பது எங்களுடைய குற்றச்சாட்டு. இந்தச் சந்தையைத் திறக்க வேண்டுமென நான் பாராளுமன்றத்தில் வலியுறுத்திவருகிறேன். புதிய ஆளுநரிடமும் இதைத் திறக்கும்படி கேட்டிருந்தோம். அதற்கு அவர், தான் எவ்வாறாயினும் இதைத் திறக்க வழி செய்வதாகக் கூறியிருந்தார்.

**கேள்வி:** கிழக்கில் தனித்துப் போட்டியிடுவீர்களா, கூட்டாகவா?

**அடைக்கலநாதன்:** கிழக்கைப் பொறுத்தவரை, குறிப்பாக அம்பாறை திருகோணமலை போன்ற இடங்களைப் பொறுத்தவரை கூட்டாகப் போட்டியிடுவதுதான் உசிதமானதென நாம் கருதுகிறோம். தமிழ் மகா சங்கத்தினர் எம்மிடம் அம்பாறையில் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்படாதிருக்க தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுப் போட்டியிடும்படி கோரியிருந்தனர். அதற்கு நாம் அம்பாறையை விட்டுக்கொடுப்பதற்கு இணங்கிய கட்சிகளைத் தவிர்ந்த ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடத் தயாரெனவே தெரிவித்திருந்தோம். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த முல்லா நஸ்ருத்தீன்?



முல்லா நஸ்ருத்தீன் கதைகள் தமிழ் வாசகர்களுக்குப்புதியதல்ல. இருந்தாலும், கதைகளைஅறிந்தஅளவுக்குஅவரைப்பற்றி அறிந்திருக்க நியாயமில்லை.

சிலர் அவரது கதைகளை வாசித்துவிட்டு வயிறு குலுங்கச் சிரிக்கின்றனர். இன்னும் சிலர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி விடுகின்றனர்.

சர்வதேச நாடோடிக் கதை ஹீரோவான இந்த முல்லா நஸ்ருதீன், தனது கதைகளில் பல மாறுபட்ட பாத்திரங்களில் தோன்றி மக்களைப் பரவசப்படுத்துவதோடு குழப்பத்திலும் ஆழ்த்திவிடுவதை நாம் காணலாம். சில வேளைகளில் ஒரு முட்டாளாகவும் இன்னும் சில வேளைகளில் ஒரு ஞானியாக, அரச சபை உறுப்பினராக, வைத்தியராக, நீதிபதியாக, ஆசிரியராக, துறவியாக பல பாத்திரங்களில் அவர் சித்திரிக்கப்படுகின்றார். ஒரு புரியாதபுதிராகத் தோற்றமளித்தாலும் சிரிப்பையும் சிந்தனையையும் ஒருங்கே வழங்கி மக்கள் மனதில் அழியாத இடத்தைப் பிடித்துள்ளார்.

அவர் சம்பந்தப்பட்ட கதைகள், அவற்றில் மறைந்திருக்கும் ஆழ்ந்த ஞானத்தை அறிவதற்காக அல்லாமல் வெறும் நகைச்சுவைக்காக மட்டும்படிக்கப்பட்டாலும்கூடபடிப்பவரைபெரும் பரவசத்தில் ஆழ்த்தி நிலையான இன்பத்தை அளிக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

பல நாட்டவர்கள் அவரை உரிமை பாராட்டினாலும் இன்றுவரை அவர் வாழ்ந்த இடத்தையும் காலத்தையும் யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது.

ஆனால், துருக்கி நாட்டில் 'எஷ்கிஷஹர்' என்ற ஊரில் அவர் பிறந்ததற்கான சில குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவரது அடக்கஸ்தலம் கூட அங்குள்ளதாக நம்பப்படுகின்றது. அந்த ஊரில் இன்றும் அவரது பிறந்த தினம் கொண்டாடப்படுகின்றது. அத்தினத்தில் அங்குள்ள மக்கள் புத்தாடை அணிந்து அவரது கதைகளைக்கூறியும், அவற்றைநாடகங்களாக நடித்தும், அவரை நினைவு கூர்கின்றனர்.

துருக்கி, கிறீஸ், எகிப்து, ஈரான், மத்திய ஆசியா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இவரது கதைகள் பரம்பரை பரம்பரையாக வழங்கி வருகின்றன. எனவே முல்லா மத்திய கிழக்கு நாடொன்றில் வாழ்ந்தஓர் அறிஞர் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எவ்வாறாயினும் அவரதுபூர்வீகம், அவரது கதைகளில் மறைந்திருக்கும் தத்துவங்கள் என்பன பற்றி தொடர்ந்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய கிழக்கில் தத்துவ, சூபி, கலா நிலையங்களில் பாட போதனைகளை விளக்குவதற்காகவும் உதாரணங்கள் காட்டுவதற்காகவும் நஸ்ருத்தீன் கதைகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அத்துடன் வெறுக்கத்தக்க அதிகாரிகளை ஏளனம் செய்வதற்காகவும் நஸ்ருத்தீன் கதைகள் பரவலாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ரஷ்யாவிலும் சீனாவிலும் முதலாளித்துவத்தையும் அடக்குமுறை ஆட்சியாளரையும் எள்ளி நகையாடுவதற்கு நஸ்ருத்தீன் கதைகள் உபயோகிக்கப்படுகின்றன.

இன்று ரஷ்யாவில் "ஹோஜா கதைகள்" என்றும் சீனாவில் "அவாந்திக் கதைகள்" என்றும் இவருடையகதைகள் தொகுக்கப்பட்டுநூலுருப் பெற்றுள்ளதோடு கார்ட்டூன் படங்களாகவும், முழு நீள சினிமாப் படங்களாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

தர்வேஷ்களின் ஆதிக்கத்தை அழித்தொழித்[illegible] எனக் கருதப்படும் நஸ்ருத்தீனின் கதைகளை வரிப்படங்களாகவும் குட்டிக் கதைகளாகவும் தொகுத்து அழகிய முறையில் அச்சிட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு விநியோகிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியுடன் பரம்பரை பரம்பரையாகப் பகைமை பாராட்டிவரும் கிரீஸ் கூட முல்லாக் கதைகளில் பாதிக்கு மேல் தமது நாட்டுக் கதைகளோடு தொடர்புடையது என்கிறது. மேற்கு நாடுகளில், கிறிஸ்தவ அறிவைஊக்குவிக்கும்சங்கம்(*society for the promotion of Christian Knowledge*) திருமதி ஈவிங் என்பவருடைய முல்லாக் கதைத் தொகுதியொன்றை 1896ல் வெளியிட்டது.

அரபு நாடுகளில் 'ஜோஹா கதைகள்' என வழங்கி வரும் இவரது கதைகள் சிசிலிக்கும் அதனூடாக மேற்கு நாடுகளுக்கும் ஊடுருவியுள்ளது. மிகப் பழமை வாய்ந்த பிரான்ஸிய நூலான மேரி டீ பிரான்ஸின் நாடோடிக் கதைத் தொகுதியிலும் நஸ்ருத்தீன் கதைகள் சாயல் படிந்துள்ளது. மத்திய ஆசிய சட்டத் தொகுப்புகளில் உதாரணத்துக்காக எடுத்தாளப்பட்டுள்ள சில நஸ்ருத்தீன் கதைகள் ரஷ்யாவிலும் பிரான்ஸிலும், அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளது.

முல்லா நஸ்ருத்தீன் பலருக்கும் ஒரு கோமாளியாகத் தோற்றமளித்தாலும் அவர் தமது சமயோசித அறிவாலும் நகைச்சுவை உணர்வாலும் பல அறிஞர்களைத் திணறடித்துள்ளார். எவ்வாறாயினும் முல்லா நஸ்ருத்தீன் கதைகள் மனக் கவலைக்கு மருந்தாகவும் அறிவுக்கு விருந்தாகவும் பயன்படக் கூடியது என்பதே எல்லா அறிஞர்களதும் பாமர மக்களதும் பொதுவான கருத்தாகும்.

நஸ்ருத்தீன் சிறு வயது முதற்கொண்டே தனது சக மாணவர்களைத் தமது கதைகள் மூலம் கவர்ந்திழுக்கும் அபார சக்தியைக் கொண்டிருந்ததாகவும், இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட, கோபமடைந்த அவரது ஆசிரியர் ஒரு நாள் நஸ்ருத்தீனை அழைத்து "இன்று முதல் நீ எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும் மக்கள் உன்னைக் கண்டு நகைக்கவே செய்வார்கள். நீ கதை சொல்லும் ஒவ்வொரு தடவையும் மக்களுக்கு அதனைக் கேட்கும் ஆசை ஏற்பட்டு குறைந்தது ஏழு கதைகள் சொல்ல வேண்டி நேரிடும்" என்று சாபமிட்டதாக ஒரு கர்ண பரம்பரைக் கதை உள்ளது.

இந்த சாபம், நம்மையும் தொற்றிக் கொண்டதோ என எண்ணுமளவுக்கு அவரது ஒரு கதையைக் கேட்டால் பல கதைகளைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் நம்முள் தோன்றுகிறது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கூற்றுக்கிணங்க சில நஸ்ருத்தீன் கதைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள....

இதோ, முல்லாவின் குசும்புகளில் சில!

## கஷ்டப்படாமல் செல்வம்



ஒருமுறை முல்லா நஸ்ருத்தீன் சந்தை கூடுமிடத்தில் வந்து பிரசங்கம் செய்யத் தொடங்கினார்.

"கஷ்டப்படாமல் செல்வம் சேர்க்க வேண்டுமா? சம்பாதிக்காமலேயே உணவு உண்ண வேண்டுமா? முயற்சியின்றியே முன்னேற வேண்டுமா? என அடுக்கிக் கொண்டே போனார்.

அனைவரும் "ஆமாம்! ஆமாம்! விரைவாகச் செல்லுங்கள் முல்லா" எனக் கூச்சலிட்டனர்.

"அப்படியொன்றிருந்தால் உங்களுக்குச் சொல்லாமலிருப்பேனா? இப்போது எத்தனை பேர் அப்படிப் பட்ட வாழ்வை விரும்புகிறீர்கள் என்று தெரிந்து கொள்ளவே அவ்வாறு கேட்டேன்" என்றார் முல்லா அமைதியாக.

## நல்ல வேளை எனது தொழுகை....



முல்லா நஸ்ருத்தீன் எல்லோருடனும் சேர்ந்து பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தார். தொழுகையின் நடுவில் ஒருவன் "அடடா வீட்டுக் கதவை மூடாமல் வந்துவிட்டேனே" என்றான்.

அருகில் தொழுது கொண்டிருந்தவன், "தொழும்போது பேசக்கூடாது இப்போது நீ மீண்டுமொருமுறை தொழ வேண்டும்" என்றான். "நீயும் தான் பேசிக்கொண்டிருக்கிறாய், நீயும் இன்னொரு முறை தொழ வேண்டும்" என்றான் முன்னையவன்.

இதையெல்லாம் கேட்டவண்ணம் தொழுது கொண்டிருந்த முல்லா நஸ்ருத்தீன், "நல்ல வேளை இவர்களைப் போல நானும் பேசி எனது தொழுகையைக் கெடுத்துக் கொள்ளவில்லை" என்றார் மெதுவாக.

## நீ சொல்வது சரிதான்!

முல்லாவுக்கு நீதிபதி நியமனம் கிடைத்தது.

முதலாவது வழக்கில் வாதி தனது கட்சியை எடுத்துக் கூறினான்.

"நீ சொல்வது சரிதான்" என்று முல்லா ஆமோதித்தார்.

நீதிமன்ற அலுவலர் குறுக்கிட்டார். "பிரதிவாதியை விசாரிக்காமல் ஒரு முடிவுக்கு வரக்கூடாது" என்றார்.

"நீ சொல்வதும் சரிதான்" என்றார் முல்லா.

பிரதிவாதியும் சும்மா சொல்லக்கூடாது, தன் தரப்பு நியாயங்களை அடுக்கினார்.

முல்லா உடனே "நீ சொல்வதும் சரிதான்!" என்றார். நீதிமன்ற அலுவலர் மீண்டும் குறுக்கிட்டார். "இருவர் கட்சியும் எப்படி சரியாக ஐயா இருக்க முடியும்"

"நீ சொல்வதும் சரிதான்!"



## பாவம் கழுதை!



நஸ்ருத்தீன் தனது கழுதையின் முதுகில் ஒரு விறகுக்கட்டை ஏற்றி கழுதையின் சேணத்தில் உட்காரமல் விறகுக் கட்டின் மீதேறி வந்தார்.

வழியில் சென்ற நண்பர் ஒருவர் "முல்லா! ஏன் கழுதையின் சேணத்தின் மீது உட்காராமல் விறகுக் கட்டின் மேல் உட்கார்ந்திருக்கிறீர்கள்" என்று கேட்டார்.

"பாவம் கழுதை! ஏற்கனவே அது விறகைச் சுமந்து வருகிறது. அது போதாதென்று என்னுடைய பாரத்தையும் அது சுமக்க வேண்டுமா? அதுதான் என்னுடைய பாரத்தை விறகு தாங்கட்டுமே என்று விறகின் மீது உட்கார்ந்திருக்கிறேன்" என்றார் நஸ்ருத்தீன்.

## நினைக்கும் சுதந்திரம்!



நஸ்ருதீனுக்கு நல்ல பசி! 'சூடான ஒரு கோப்பை சூப் இருந்தால் எப்படியிருக்கும்?' என நினைத்தார்.

அதேநேரம் கதவுதட்டப்படும் ஓசைகேட்டது. ஓடிச்சென்று கதவைத் திறந்தார்.

கையில் ஒரு கோப்பையுடன் ஒரு பையன் நின்றிருந்தான். "என்னுடைய தாயாருக்குச் சுகமில்லை. சூடான சூப் இருந்தால் ஒரு கோப்பை தர முடியுமா?" எனக் கேட்டான் பையன்.

"சீ! இப்போதெல்லாம் எனக்கு நினைக்கும் சுதந்திரம் கூட இல்லை. இப்போதுதான் சூப்பைப் பற்றி நினைத்தேன் அதற்குள் அதையும் மோப்பம் பிடித்துவிட்டான் இந்த அண்டை வீட்டுக்காரன்" என அலுத்துக் கொண்டார் முல்லா.

தொகுத்தனுப்பியவர்:
**முஹம்மத் றஸீன்**
**நாவலப்பிட்டி.**

## பெரிதுபடுத்த வேண்டாம்!



முல்லா நஸ்ருத்தீன் பதறியடித்துக்கொண்டு அடுத்த வீட்டுக்குள் புகுந்தார். வீட்டுக்காரரிடம் "உங்கள் பசு எனது காளையை முட்டிக் காயப் படுத்திவிட்டது" என்றார் பதற்றத்துடன்.

அதற்கு நஷ்டஈடு கேட்டுத்தான் முல்லா வந்திருப்பதாக எண்ணிய அந்த வீட்டுக்காரன் அமைதியாக "இதோ பாருங்கள் முல்லா, விலங்குகளுக்கு நம்மைப் போல் சிந்தித்து செயலாற்ற முடியுமா? அவை முட்டிக் கொள்வதும் சண்டையிட்டுக் கொள்ளுவதும் சகஜம், அதையெல்லாம் பெரிதுபடுத்த வேண்டாம், விட்டுத் தள்ளுங்கள்" என்றார்.

"நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை!, அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் எனது காளைதான் உங்கள் பசுவை முட்டி காயப்படுத்திவிட்டது. பதற்றத்தில் மாற்றிச் சொல்லிவிட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, மெதுவாக நழுவினார் முல்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் பலியாகும்



*சிறுவர்கள்...*

***எழுதப்படாத வெள்ளைத் தாள்கள்.***

***எதையும் நம்புகின்ற - நம்ப வைக்கக்கூடிய வஞ்சனையற்ற நெஞ்சம் கொண்டவர்கள்.***

***நம்பியவற்றை அதி உச்சமாக விசுவாசிக்கவும், விசுவாசிப்பவனுக்காகத் தம்மைக் கண்மூடித்தனமாக அர்ப்பணிக்கவும் துணிந்தவர்கள்.***

***துடிப்பு மிக்கவர்கள். தூண்டி விட்டால் துளியும் பின்னிற்காமல் எதையும் செய்யக்கூடியவர்கள்.***

***தலைமைக்குக் கட்டுப்பட்டவர்கள். நன்மை, தீமை, ஆபத்து, பின்விளைவு எதையும் சிந்திக்காது கொடுக்கப்பட்ட காரியத்தைக் கச்சிதமாக நிறைவேற்றக்கூடியவர்கள்.***

***எவராலும் இலகுவில் தம் இலக்குகளுக்காகப் பயிற்றுவித்து இயக்கப்படக் கூடியவர்கள்.***

***ஆர்வமும், உத்வேகமும் தற்துணிவும் கொண்ட இச்சிறுவர் பராயமே ஒரு ஆரோக்கியமான சமுதாயத்திற்கான விளை நிலமாகிறது. இதில் எது விளைவிக்கப்படுகிறதோ அதுவே செழித்து வளரும். அது நல்லதொரு பழ மரமாகவும் இருக்கலாம் அல்லது நச்சு மரமாகவும் இருக்கலாம்.***

***நாம் நமது சிறுவர்களின் வளமான உள்ளங்களில் எதை விதைக்கிறோம்?***

***எமது நாட்டில் விளைந்த சில சிறுவர்களின் மன வளம் இங்கே! இவை (பெயர் மாற்றப்பட்ட) உண்மைச் சாட்சியங்கள்.***

"காலையும் கையையும் துண்டு துண்டாக வெட்டிச் சந்தியில் போட்டுவிட்டு தலையை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு அந்த வீட்டுக்குப் போனேன். பெண்கள் கதறியபடி என்னை நோக்கி ஓடி வந்தார்கள். ஒரு கையாலேயே M16ஐ இயக்கிக் காட்டினேன். நெருங்காமல் தூரத்திலேயே விழுந்து புரண்டு அழுதார்கள். அவர்களை விலக்கிக் கொண்டு போய் வீட்டு வாசற்படியிலே தலையை வைத்துவிட்டு "துரோகிகளுக்கு இதுதான் நடக்கும்" என்று சொல்லி விட்டு வந்தேன்.... அன்றிலிருந்து ஊருக்குள் எல்லோரும் என்னிடம் பயத்தோடும் பணிவோடும் நடந்துகொள்கிறார்கள்..." என்று பெருமை பொங்கச் சொல்கிறான் 15 வயதான தமிழ்ச் சிறுவன் ரமேஷ் (புனைபெயர்).

"வாய்க்குள் வைத்தால் பிடரிப்பக்கம் பெரிய ஓட்டையாகப் பொத்துக்கொண்டு போகும். நெற்றிப் பொட்டென்றால் கண்ணுக்கும் மூக்குக்கும் நடுவால் ரத்தக் கோடு மட்டும் வழியும். இரண்டு வெடியிலும் ஆள் கீழே விழுவதற்குள் உயிர் போய்விடும். தலைவர் சொல்லுவார்:

'எந்த இடத்தில் வெடி பட்டுக் கீழே விழுந்தாலும் செத்ததை உறுதிப்படுத்த மண்டையை வெடி வைத்து விட்டு வரவேண்டுமென்று.

'ஓட்டோ'வில் வெடியை வைத்து விழுத்துவதில் ஒன்றும் 'கிக்' இல்லை.... ஒவ்வொரு குண்டிலும் ஒவ்வொருவர் பொத்துப் பொத்தென்று விழுத்துவதில்தான் திறமை இருக்கிறது..." என்று தன் வீரத்திற்குச் சான்றிதழ் வழங்குகிறான் 14 வயது ரூபன்.

"வீட்டுக்குள்புகுந்துவெடிவைக்கப்போனால், குய்யோ முறையோ என்று கூக்குரலிட்டபடி பெண்கள் உடும்புப் பிடியாக நம்மைப் பிடித்துக் கொள்வார்கள். அரக்கத்தனமாக நம்மை உலுப்பிவிடுவார்கள். அவர்களைச் சுவர்களில் மோதி மண்டையை உடைத்தோ, சப்பாத்துக் காலால் மர்மஸ்தானத்தில் உதைத்தோ விலக்கிவிட்டு Targetஐ முடித்துவிட்டு வரவேண்டும்.... இளகிய மனம் கொண்ட தொடை நடுங்கிகளால் அது முடியாது...." என்று பெரிய தோரணையுடன் சிரிக்கிறான் ரவி (வயது 16).

"ஆண்களானால் கத்தியால் சதையைப்பிளந்துவிட்டும் பெண்களானால் மர்மஸ்தானத்திலும் பெற்றோலை எத்திவிட்டுப் பார்க்க வேண்டும்...." என்று இடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சண்டையில் சிறுவர்கள் சில தகவல்கள்

**கடந்த 10 வருடங்களில்.....**

- 1.5 மில்லியன்களுக்கு மேலான 18 வயதிற்கு உட்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்
- குறைந்தது 10 மில்லியன் சிறுவர்கள் யுத்த அழிவுகளை அல்லது அதன் கோரத்தைக் கண்டுள்ளனர்.
- 4 மில்லியன்களுக்கும் அதிகமானோர் ஊனமுற்றோ அல்லது கை கால்களை இழந்துமுள்ளனர்.
- 12 மில்லியன்களுக்கும் அதிகமானோர் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர்.
- 5 மில்லியன்களுக்கு அதிகமானோர் அகதி முகாம்களில் வாழவிடப்பட்டுள்ளனர்.
- 1 மில்லியனுக்கு அதிகமானோர் தமது குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளனர்.
- 300,000 சிறுவர்கள் ஆயுதப் போரில் பங்குபற்ற சேர்க்கப்பட்டுள்ளார்கள்.
- 1 மில்லியன் மக்கள் நிலக்கண்ணி வெடியில் உயிரிழந்துள்ளனர். அதில் பெரும்பான்மையோர் சிறுவர்.

**ஆதாரம்: "போரில் சிறுவர்கள்" -1998 சர்வதேச மன்னிப்புச் சபை.**

# பிள்ளைப் பிராயம்

சிரிப்புச் சிரிக்கிறான் சுதன். இவனுக்கும் வயது 16 தான்.

இதெல்லாம் விடுதலைப் போராட்டத்தின் நீட்சியில் இளம் தமிழ்ச் சிறுவர்களுக்குள் ஏறியிருக்கும் மன வக்கிரங்கள். ஒரு சமூகத்தின் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கான போராட்ட நியாயத்தில் இன்னமும் புனிதம் நிறைந்திருப்பதாகப் பெருமிதக் கனவுகளுக்குள் தலையைப் புதைத்திருப்பவர்கள் கண் திறந்து கண்டுகொள்ள வேண்டிய நிதர்சனம் இது.

அடுத்தவரை அழித்தொழிப்பதே வீரம் என்கிற பெருமிதமும், பிறர் துடித்துத் துன்புறுவதில் மகிழ்ச்சியடைகிற மனோபாவமும் கொண்டவர்களாக எங்கள் சிறுவர்கள் வளர்ந்து வருகிறார்கள். பெரியவர்களின் அபிலாஷைகளுக்கேற்ப வடிவமைக்கப்படும் யுத்தத்தில் எந்தவிதத்திற்கும் வளைத்தெடுக்கப்படக்கூடிய பருவத்தினராகிய சிறுவர்கள் பகடைக் காய்களாகின்றனர். இலகுவாக பதப்படுத்தவும், அதிகம் கேள்வி கேட்காதவர்களாகவும், விசுவாசம்வைத்துவிட்ட தலைமைக்குக் கீழ் எந்தக் கோரமான செயல்களைச் செய்யவும் தயக்கம் காட்டாதவர்களாகவும் இருக்கும் பிஞ்சு உள்ளங்கள் பொறுப்பற்ற தலைமைகளினால் நஞ்சூட்டப்படுகின்றன. போராளிகள் என்ற போர்வையில் குரூர வெறிபிடித்தவர்களாகின்றனர்.

'தென் ஆசியாவில் சிறார்கள்' என்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை ஓரிடத்தில் கூறுகிறது:

15 வயது ராஜா (புனைபெயர்) இலங்கையில் 1994-ல் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். நித்திரையின்மை, திடீர் திடீரென ஆத்திரப்பட்டுக் கத்துதல், வேறும் சில அசாதாரண நடைமுறைகளுக்காகச் சிகிச்சை பெற்றுக் கொள்ளவே அவன் வந்திருந்தான். 11 வயதிலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து இராணுவப் பயிற்சி பெற்ற ராஜா, தனது கடந்த காலத்தைநினைவுகூர்ந்தான். ஒருதாக்குதலில் குழந்தையொன்றின் கால்களைப் பிடித்துத் தலையை நிலத்தில் அடித்ததாகவும், தலை சிதறியதைப் பார்த்து அக்குழந்தையின் தாயார் கதறியழுததைத் தான் மகிழ்ச்சியுடன் அனுபவித்ததாகவும் கூறினான்.

இன்றைய சிறுவர்களுக்குள் இத்தகைய குரூரங்கள் வளர்ந்து வருவதை இனம், தேசம் பற்றிய பெருமித உணர்வுகளினுள்ளேயும்.... உரிமைகளை தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான ஜனநாயகச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் துணிவில்லாத நம் இயலாமைகளை மறைத்து சிறார்களின் வீரத்தைப் பாராட்டுவதிலும், நமக்காகயாராவதுசண்டையிட்டுக்கொள்வதை வேடிக்கை பார்க்கும் வெட்கங் கெட்ட ரோசத்தனங்களுக்காகவும் கண்டும் காணாதவர்களாக இருந்து வருகிறோம்.

போராளிச் சிறுவர்கள் கோரமான செயல்களுக்குள் தள்ளப்படுவது ஓர் திட்டமிட்ட செயலாகவே கருதப்படுகிறது. இள வயதில் போராட்டக் குழுக்களுக்குள் சேர்க்கப்படுகிறவர்கள் கோரமான காட்சிகளுக்குப் பழக்கப்படுவதிலும், மனம் தளராது குரூரச் செயல்களைப் புரிவதே வீரம் என்று உணர்த்தப்படுவதிலும், தன் குழு தவிர்ந்த மற்றையோரெல்லாம் சிதைத்தழிக்கப்படக் கூடியவர்கள் என்ற வெறித்தனமூட்டப்படுவதிலும், கேள்விகளின்றி தலைமைக்குக் கீழ்ப்படியவும் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இன்று உலகெங்கிலும் மில்லியன் கணக்கிலான சிறுவர்கள் இந்த யுத்தத்தின் கோரத்தினுள் ஆட்பட்டிருக்கின்றனர். உள்நாட்டு யுத்தங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது முன்னெப்போதுமில்லாதவாறு அதிகரித்து வருகிறது. உகண்டாவில் வடக்குப் பகுதியில் செயற்படும் 'இறைவனின் எதிர்ப்புப்படை' (Lord's resistance Army- LRA) என்பதுசுமார் 8,000 ஆண் பெண் சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்துபோராடுவதற்கும், முகாம்களில் ஏவலாளர்களாகவும் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் பயன்படுத்தி வருகின்றதென சர்வதேச மன்னிப்புச் சபை ஆவணப்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யார் குழந்தைப் போராளிகளாகின்றனர்?

பொதுவில் எல்லா இடங்களிலும் குறிப்பான ஓர் பின்னணியைக் கொண்டவர்களே குழந்தைப் போராளியாகின்றனர். அவர்கள் அரசினாலோ அல்லது ஆயுதக் குழுவாலோ விரும்பியோ அல்லது வேறு தூண்டப்படுதல், பலாத்காரமாகவோ ஆயுதபாணிகளாக்கப்படலாம். அந்தப் பின்னணியானது....

- குடும்பங்களை விட்டுப் பிரிந்த சிறுவர்கள், குடும்பம் இல்லாதவர்கள், குழப்பம் நிறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். உதாரணம்: அநாதைகள், அகதிகள் / இடம்பெயர்ந்தவர்கள், வீதிச் சிறுவர்கள், ஒருதலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இரண்டாந்தாரப் பிள்ளைகள்.
- கல்வியறிவு சிறிதளவு கிடைத்த அல்லது கிடைக்காத அல்லது அதற்கு வாய்ப்பில்லாதவர்கள்.
- சமூகத்தின் விளிம்பில் வாழும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது சமூக பொருளாதார மட்டத்தில் அடி மட்டத்தில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.
- போர்ச் சூழலில் வாழும் சிறார்கள்.

1966ம் ஆண்டு, ஆயுதப் போராட்டங்கள், சிறுவர்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய அறிக்கையைத் தயாரித்த கரசா மைக்கேல் (Graca Machel) அமெரிக்க - சோவியத் பனிப் போர் முடிவிற்குப் பின்னர் யுத்தக் களங்களில் ஏற்பட்டு வரும் அடிப்படை மாற்றங்கள் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

"உலகம் மேலும் மேலும் தார்மீக வெறுமைக்குள் அமுங்கிப் போகிறது. எந்தவிதமான அடிப்படை மானிட விழுமியங்களையும் இலட்சியம் செய்யாத சூழல் நிலவுகிறது. சிறுவர்களும் கோரமாகப் படுகொலை செய்யப்படுகின்றனர். அவர்கள் கொலைகாரர்களாகவும் மாற்றப்படுகின்றனர். பலாத்கார வன்முறை, அவர்களை யுத்த நெருக்கடிக்குள் முடமாக்குதல், ஆயுதபாணிகளாக்கிச் சுரண்டுதல், பசி பட்டினிக்குள்ளும், கோரமான பலாத்காரங்களுக்கு முகம் கொடுக்கும் அவலங்களினுள்ளேயும் சிறார்களைத் தள்ளுகின்ற சூழலாகவும் மாறிவருகின்றது....இன்றையபோர்ச் சிறுவர் சிறுமியர் வெறும் பார்வையாளர்களாக அல்லாது அவர்களையே போரின் இலக்குகளாக பங்காளர்களாக மாற்றுகின்ற போக்கு அதிகரிக்கின்றது..."



வெளிப்படையாகப் போர் நடைபெறாத நாடுகளிலும் சிறுவர்களுக்கெதிரான பலாத்காரம் சர்வசாதாரணமாகி வருகின்றது. சமூகத்திலுள்ள குழுக்களால் அல்லது அரச படைகளால் பிரயோகிக்கப்படும் அமைப்பு ரீதியான வன்முறை, இவ்வன்முறை உருவாக்கும் சூழலிலேயே இவ்வாறான பாதிப்புக்கள் அதிகம் ஏற்படுத்தப்படுகின்றன. பிரேசில், கொலம்பியா, கௌதமாலா போன்ற நாடுகளில் பொலீசினாலோ அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்ட கொலையாளிகளாலோ சிறுவர்கள் கொல்லப்படுவது சர்வ சாதாரணம். இலங்கையில் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பாதுகாப்புப் படைகளாலும், போராளிக் குழுக்களாலும்பிடிக்கப்பட்டோர்பின்காணாமல் போவது என்பது காணாமல் போனோர் பட்டியலில் கணிசமான பகுதியாக இருக்கிறது. துருக்கியில் 12 வயதிற்குட்பட்டவர்கள் கூட சிறு சிறு குற்றங்களுக்காக சித்திரவதைக்குட்படுத்தப்படுகின்றனர்... இவையெல்லாம் சர்வதேச மன்னிப்புச் சபையால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுவில் இன்று எல்லாச் சண்டைகளும் நாடுகளுக்கு இடையேயல்லாது நாடுகளுக்குள்ளேயே நடைபெறுகின்றன. அரசின் ஆதிக்கத்திற்கெதிரான ஆயுதப் போராட்டங்களே இன்று பெரும்பான்மையாக நிகழ்பவை. இத்தகைய போராட்டங்களில் எந்தத் தரப்பும் திட்டவட்டமான வெற்றியைப் பெற முடியாத இழுபறிநிலை நீடிப்பதும், நிலைமைகள் மேலும், மேலும் குழப்பமாக மாறுவதும் இயல்பாகி வருகிறது. எவ்வித நீதி நெறி முறையுமற்ற பலாத்காரச் சூழலுக்குள் சிக்கித் திணறுகின்ற போக்கானது இன்று பல நாடுகளுக்கும் பொதுவான போக்காகவே காணப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் 19 வருட சிவில் யுத்தத்தில் சிறுவர்கள் மீதான தாக்கம் பற்றி ஆராய்ந்த யுனிசெவ் ஆய்வின் அடிப்படையில் --

காபுலில் சிறுவர்கள் மத்தியில்

மனோ ரீதியான நெருக்குவாரம் மிகவும் அதிகமாக இருந்தது. அது அவர்களின் உளவியல் ரீதியான வளர்ச்சியில் பெருமளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. பெரியவர்கள் மீது அவநம்பிக்கையையும், எதிர்காலம் பற்றிய விரக்தியையும் அவர்களிடம் உருவாக்கியிருந்தது. 90 வீதமானோர் தாம் போரில் இறந்துவிடுவது நிச்சயம் என்றே நம்பினர்.

இரவுத் தூக்கத்தில் பயங்கரக் கனவுகளினால் விழிப்படைதல், காரணமற்ற பீதியுணர்வு, பசியின்மை, மனது ஒரு நிலையில் நிற்காது அல்லாடுதல், வாழ்வதை அர்த்தமற்றதாக உணர்தல் போன்ற பல்வேறு குழப்பகரமான நிலைமைக்குப் பலர் ஆட்பட்டிருந்தனர். தம் உறவினர்கள் கொல்லப்படுதலையும், தம் சூழல் கோரமாக



பெரியவர்களின் ஈழத்திற்காக பலியாகும் சிறார் நாம்.
(மாங்குளத்தில் சரணடைந்த புலி உறுப்பினர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிள்ளைப் பிராயத்துக்கெதிரான போர்

"போரிற்கான அர்த்தம் என்ன? ஏன், ஏன் மக்கள் சமாதானத்துடன் ஒன்றாக வாழ முடியாமல் இருக்கின்றனர்? ஏன் இந்த அழிவுகள்? வைத்தியத்துறைக்கோ, கலைத்துறைக்கோ அல்லது ஏழைகளுக்கோ ஒரு சதம் கூட அதிகரிக்க முடியாத நிலையில் நாளாந்தம் ஏன் மில்லியன்கள் யுத்தத்திற்காகச் செலவிடப்படுகின்றது? மலை போல் குவிந்துள்ள உணவுகள் ஒரு புறம் வீணாக அழுகும்போது ஏன் பலர் பசியினால் வாட வேண்டும்? ஏன் மக்கள் இவ்வளவு பித்துக்குளித்தனமாக செயற்படுகிறார்கள்? யுத்தம் அரசியல்வாதிகளினதும் முதலாளித்துவவாதிகளினதும் (வெறுமனே) தேவைகளின் வெளிப்பாடு மட்டும் என நான் கருதவில்லை. சாதாரண பொதுமகனும் எல்லா வகையிலும் இக்குற்றத்திற்குப் பொறுப்புதான். மக்கள் மத்தியில் ஏதோ ஒரு வகையான அழித்தலுக்கான உந்தல் இருக்கத்தான் செய்கிறது. அது அவர்களை ஆத்திரமூட்டும் பலாத்காரத்திற்கும், படுகொலைக்கும் கொலைக்கும் தள்ளுகிறது"

மேற்கூறியது 15 வயது கொண்ட சிறுமி *Anne Frank* இனால் கூறப்பட்ட மிகப் பிரசித்தமான வாசகம். இது அவர் கைது செய்யப்பட்டு (ஜேர்மன் நாசி வதை முகாமிற்கு) ஆயிரக்கணக்கானவர்களுடன் கொண்டு செல்லப்பட்டு கொல்லப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் அவரது கையேட்டில் எழுதியது.

அவரது சோகக் கதை இன்றும் உலக மனச்சாட்சியை உறுத்திக் கொண்டுதானிருக்கிறது. அது எவ்வாறு ஆயுதப் போராட்டத்தில் சிறுமை பிராயம் பிய்த்தெடுக்கப்பட்டு இளமை அழிக்கப்பட்டு எதிர்காலம் சூன்யமாக்கப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. யுத்தம் ஒன்று நடைபெற்றதால் அவர் உயிர் பறிக்கப்படவில்லை. ஆனால் யுத்தம் என்ற போர்வையில் மீறப்படும் பாரிய மனித உரிமைகளின் விளைவே *Anne Frank*ன் மறைவுக்குக் காரணமாகும்.

அழிவுகளுக்குட்படுத்தலையும் நேராகக் கண்ட சிறார்கள் வெம்பிப்போன மனங்களையும் வெறுப்புணர்வுகளையும் அடுத்த சந்ததிக்குக் கொண்டு செல்கிறார்கள்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் யுத்த உயிரிழப்புக்களில் 90 வீதமானவை இராணுவ வீரர்களினுடையதாக இருந்தது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் விமானக் குண்டு வீச்சுக்களாலும், சித்திரவதை முகாம்களினுள்ளேயும் உயிரிழந்தவர்களில் 50 வீதமானோர் பொது மக்களாக இருந்தனர்.

இன்றோ யுத்த உயிரிழப்புகளில் 75 வீதமானோர் பொதுமக்களே. உள்ளூரில் அகதிகளாக்கப்பட்டவர்கள், காயமுற்றவர்கள் போன்றவர்களையும் கணக்கிலெடுத்தால் இன்றைய யுத்தங்கள் காரணமான மனித அழிவில் 90 வீதம் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர். இதில் அதிகமான வீதத்தினர் சிறுவர்களே. இன்றைய யுத்தங்களில் பாதிக்கப்படுபவர்களில் 40 வீதத்திற்கும் அதிகமானவர்கள் சிறுவர்களும் இளம் பிராயத்தினருமே.

போர்ச் சூழலில் உள்ள ஒரு சமூகத்தின் சகல அங்கத்தவர்களும் - சிறுவர்கள் உட்பட - போரில் நேரடியாகப் பங்குகொள்ளவோ அல்லது ஆதரவாளர் என்ற முறையில் வெவ்வேறு பங்களிப்புகளைச் செய்யவோ நெருக்கப்படுகிறார்கள். வன்முறை அவர்களின் வாழ்நிலை யதார்த்தமாகிறது. போராட்டத்தின் அடிப்படை என்ன, அது எங்கு இட்டுச் செல்கிறது என்பதெல்லாம் குழப்பத்திற்குள்ளாகிறது. உண்மைகளின் இடத்தை வதந்திகள் கைப்பற்றிக் கொள்கின்றன. சமூகத்திலும் ஏன் குடும்பத்தின் உள்ளேயும் உறவுகள் திரிந்து சந்தேகமும் நம்பிக்கையின்மையும் உண்டாகி ஆரோக்கியமற்ற சிதைவுகள் தோன்றுகின்றன.

தொடர்ச்சியான தாக்குதல்களும், பயமுறுத்தல்களும் மக்களின் இடம்பெயர்வுகளை எண்ணிப் பார்க்க முடியாதளவிற்கு உலகெங்கிலும் ஏற்படுத்தியுள்ளது. இருப்பிடங்களைத் துறக்க நேர்ந்ததால் ஏற்பட்ட அந்தரிப்பு, அடிப்படைத் தேவைகளான உணவு, சுகாதாரம், கல்வி போன்றவை கிடைக்காத நிலைமையிலும்.... ஆதிக்கம் செலுத்துவோரால், சிறுவர் கட்டாய இராணுவச் சேர்க்கை போன்ற இன்னல்களுக்கு உட்படுத்தப்படக்கூடிய பலிக்கடாக்களாகின்றனர். தமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தப்பி ஓடும் இளவயதினர், அவர்களின் பாதுகாப்புக்காகப் போராடுபவர்கள் என்பவர்களாகவே மேலும் உரிமை பறிக்கப்படுகின்றனர்.

இன்றைய இந்தத் துன்பியல் நிகழ்வுகளின் கோர நெருப்புச் சுவாலை குழந்தைகளின் மேலேயே பெரிதும் கவிகின்றது.

எதிர்கால சுபீட்சம் பற்றிய கனவில், அடுத்த சந்ததியை முடமாக்கிவிட்டுப் போகும் பணியிலேயே போரின் வெற்றியை எதிர்பார்க்கும் நம் கையாலாகாத்தனமான முட்டாள்த்தனமான மௌனங்கள் தோய்ந்திருக்கின்றன.

நாம் எதிர்நோக்கும் கௌரவமான வாழ்க்கைக்காக ஒரு சிறு துரும்பையேனும் எடுத்துப் போடுவதற்குத் திராணியில்லாதவர்களாயிருக்கும் நாம், சிறார்கள் பலியிடப்படுவதையும், அவர்தம் மனங்கள் கொடூர உணர்வுகளால் கருக்கப்படுவதையும்.... இவையெல்லாம் நமது விடுதலைக்கான தியாகங்கள் என்னும் அடிமனதுச் சமாதான ஏமாற்றில் திருப்தி காணுபவர்களாக வக்கரித்துப் போயுள்ளோம்.

நம் குழந்தைகளின் எதிர்காலத்தைச் செப்பனிட வகையற்றவர்களாயிருக்கிறோம் என்பதுடன், அவர்கள் சின்னாபின்னப்படுத்தப்படுவதன் மௌனப் பங்குதாரர்களாவும் இருக்கிறோம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரை

அந்த ஆச்சிரமம் ஒரு நிஷ்டைத்தன மான அமைதியில் இருந்தது. பர்ண சாலைக்கப்பால்நிழல்நிலப்பரப்பு.ஒரு பொருள் பொதியப் பார்த்துக் கொண்டிருக்க, மாணவர்கள் வாயடைத்துக் கிடந்தார்கள்.

குரு மென்மையான ஒரு பார்வையால் மாண வர்களை வீசிச் சென்றார். எல்லோரும் ஒரு போராட்டத்தில் இருக்க ஒருவன் மட்டும் நிலை குத்திய கடுப்பில் தரையைப் பார்த்துக் கொண் டிருந்தான். அவன் ஒரு சிறந்த சீடனாயிருந் தாலும் கூட அவனிடம் ஒரு மத வெறி இருக் கிறது என்று பட்டது குருவுக்கு.

என்றாலும் இன்றைய விளக்கம் அவனுக்கு விளங்கவில்லை போலும்.... அல்லது பதிலில் திருப்தியில்லை. காலையில் கேள்வி கேட்ட வனும் அவன்தான்.

"குருவே! பௌத்த மதம் வளர்வதைப் பார்த் தால் இந்துமதம் அடியோடு அழிந்துவிடும் போல் இருக்கிறதே! தங்கள் கருத்தென்ன?"

"ஆமாம். அதிலென்ன சந்தேகம். இந்து மதம் அழியவேண்டிய ஒன்றுதான்"

சொன்னது இவ்வளவுதான். அனைவரும் அதிர்ந்துவிட்டார்கள். கேள்வி கேட்டவன் தரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக் கிறான். அவனிடம் சற்றுக் கூர்ப்படைந்த அகங்காரம் தெரிகிறது.

"என்ன எல்லோரும் அமைதியாக இருக்கி றீர்கள்? ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை யோ? சரி, மனிதர்கள் அனைவரும் முக்தியடைய வேண்டியவர்கள்தாம் என்பதை ஒத்துக்கொள் கிறீர்களா?"

"ஆம்."

"அப்படியானால் இந்து மதத்தைச் சேர்ந்த எல்லோரும் முக்தியடைந்தவர்களாக அல்லவா இருக்க வேண்டும்?"

"........"

"முக்தியடைந்தவர்களை விரல்விட்டு எண் ணிவிட முடியும். ஏன் அவர்கள் பெரும்பான் மையாக இல்லை. அப்படியானால் எதில் பிழை? மதத்திலா? மக்களிலா?"

"........."

"அப்படியானால் மதத்தில்தான் எங்கோ குறை இருக்க வேண்டும்"

குரு பேச்சை நிறுத்தி மீண்டும் மாணவர்களை நோட்டமிட்டார்.

"குழந்தைகளே! கடவுளர் எத்தனை?"

"ஒன்று."

"மதம் எதற்கு?"

"கடவுளை அடைய."

"அப்படியானால் மதங்களெல்லாம் கடவுளை அடைவதற்குத்தான் என்பதை ஒத்துக்கொள் கிறீர்களா?"

"ஆம்"

"அப்படியானால் ஏன் வேற்றுமை பாராட்ட வேண்டும்? இதில் எந்த மதம் சரி? எந்த மதம் பிழை? எல்லாம் சரியானதுதான் இல்லையா?"

"ஆம்"

"இருந்தும் பௌத்த மதம் வளர்ச்சியடைந்து செல்கிறதே! அது ஏன்?"

"....."

மாணவர்கள் எல்லோரும் பீதிகலந்த அதிர்ச் சியில் இருந்தார்கள். குரு இதற்கு முன் இப் படிக் கதைத்ததே இல்லையே? ஆச்சரியப்பட் டார்கள். குரு மென்மையாகச் சிரித்து தன்னை மறைத்துக் கொண்டார்.

"பிள்ளைகளே! ஒரு உதாரணம் சொல்லட் டுமா? இங்கிருந்து ஜம்புகோளத்துக்குச் செல்ல விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். தரையாலும், கட லாலும், சக்தியி ருந்தால் வான் வழியாகவும் செல்ல முடியும். இருந்தாலும் தரையைவிட கடல் வழியைத் தானே நாம் அதி



மருத பூரன்

கம் விரும்புகிறோம். ஏன்? இதில் எந்த வழி சரி. எது பிழை? எல்லாம் சரிதான். என்றாலும் கடல் வழியிலேயே விரைவாகச் செல்ல முடியும். சிறிது காலம் சென்றால் வான் வழியே இதை விட வேகமாகவும் பாதுகாப்பாகவும் செல்ல முடியும் இல்லையா?

"ஆம்..... ஆம்...."

அப்படியானால் எந்த மதம் கடவுளை அடைய இலகுவாகவும் வேகமாகவும் இருக்கிறதோ அதுதான் மக்களுக்குப் பொருத்தமானதாகவும் விருப்பமானதாகவும் இருக்கும். இல்லையா?

"....."

"ஆகவே இக்காலத்துக்குப் பொருத்தமாக பௌத்த மதம் இருக்கலாம். அதனால் அது வளர்ச்சியடைகிறது என்று நினைக்கிறேன். ஒவ் வொரு மதத்திலும் புறச் செயல்களில் கட்டுண்டு இருக்கும் நாம் அதை விட்டு மீள முடியாமல், நமது மதத்தை விட்டுக் கொடுக்காமல் வீம்பு செய்கிறோம் என்றுதான் நினைக்கிறேன்."

"அப்படியானால் பௌத்தம்தான் எல்லா மக் களுக்கும் பொருத்தமானதா?"

"நான் அப்படிச் சொல்லவில்லை. இக்கால மக்களுக்கு இதுதான் பொருத்தமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏன் கடவுள் இந்த மதத்தை இறக்கியிருக்க வேண்டும்."

"சரி பௌத்தம்தான் காலா காலத்துக்கும் பொருத்த மானதா?"

"அதைக் காலம்தான் தீர் மானிக்க வேண்டும். நாகரீக மாற்றங்களாலும், இயலா மைகளாலும் மக்களால் மதத்தில் நின்றுபிடிக்க முடியாமல் போகலாம்."

"அப்படியானால் எந்த மதமும் பூரணமான தாக இல்லையா?"

"ஆம் என்பதுதான் என் கருத்து. இன்னும் சில காலங்களுக்குப் பின் புறச்செயல்கள் மட் டும் இருக்க பௌத்தத்தின் கொள்கையும் கூட அழிந்து போய் விடலாம்."

"அப்படியானால்...."

"ஆம்.... அப்போது கடவுளை அடைய புதிய வேதம்தான் தேவைப்படும் என்பது என் கருத்து. அது இறுதியாகவும் பூரணமாகவும் இருக்குமா என்பது தெரியவில்லை. ஆனால் அவ்வாறு கடவுள் கூறி, இதையே எல்லோரும் பின்பற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று கட்டளை இட்டால் அதைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழி இருக்காது என்று நினைக்கிறேன்."

"......"

"சரி போதும். இன்று நாம் நிறையவே சம்பந்தமில்லாத விடயங்களை எல்லாம் கதைத்துவிட்டோம். சரியாயிருந்தால் எடுத்துக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள். எல்லோரும் கலையலாம்."

மாணவர்களால் சகஜ நிலைக்கு வர முடியவில்லை. கூடிக் கூடி விவாதிக்கத் தொடங்கினார்கள்.

*　　*　　*

மறுநாள் காலை அந்தப் புளிய மரத்தடியில் மக்கள் குழுமியிருந்தனர். நாட்டின் முதலமைச்சர் பேசிக் கொண்டிருந்தார். எந்தவொரு தீர்வுக்கும் வர முடியாத முக பாவனைகளுடன் மக்கள் அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

"மக்களே இன்று மன்னர் நாட்டிலே இல்லை. அடுத்த நாடொன்றுக்கு உத்தியோகபூர்வ விஜயம் சென்றிருக்கிறார். அவர் இல்லாது விட்டாலும் அவரது செங்கோலுக்குக் களங்கம் வரக்கூடாது. அவர் இருந்தாலும் இதைத்தானே செய்திருப்பார்....

ஆகவே கதிர்காம ஷத்திரிய வம்சத்து மன்னர் பிரசன்ன சித்து சார்பில், முதல் அமைச்சர் என்ற வகையில் நான் இந்தக் கட்டளையை இடுகிறேன்.

இந்து மதத்தை அவமதிக்கும் எவரும் கொல்லப்பட வேண்டியவர்களே. நாகர்முனை, உகந்தை, மட்டக்களப்பு, மண்முனை, எருவில், வெருகல், திருக்கோணேஸ்வரம் ஆகிய கிழக்கிலங்கைக்குரிய பிரதேசங்களில் இந்து மதத்தினர் வாழ்கிறார்கள். அவர்களையும் அவர்களது மதத்தையும் அழிக்க நினைப்பவர்களையும் எவ்வாறு அனுமதிப்பது?

கூறுங்கள் மக்களே! முன்பிருந்த காதை பின்பு வரும் கொம்பு மறைப்பதை நாம் அனுமதிக்கக் கூடாது என்றாலும் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஆச்சிரமத்துத் தலைவர் என்ன சொன்னார் என்பதை உங்கள் முன் கூற விரும்பவில்லை. அவை சூனிய வார்த்தைகள். உங்களிடம் நான் அதைக் கூறும்போது உங்களுக்குள் பாமரர்களும் இருக்கலாம். அவர்களுக்கு அது சரியாய்க் கூடப் படும். எனவே அதைக் கூறாது விடுகிறேன்....

எவ்வாறாயினும், இந்து மதத்தை அழிக்க வேண்டும் என்று கூறிய இவருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கிறேன்..."

மாணவர்களால் இந்த சூழ்ச்சிக்கெதிராக செயல்பட முடியாத போதும்....

குரு எப்போது அவ்வாறு கூறினார் என்ற கேள்வியிருந்த போதும்....

தண்டனை நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு அழுகை வந்தாலும்....

அவர்கள் ஆச்சிரமத்தை விட்டு வெகுதூரம் சென்று கொண்டிருந்தார்கள்.

**ஓம் சாந்தி!**

# அதுவாதல்

(ஜென் கதை)



ஜென் குரு **நானின்** என்பவரைச் சந்திக்க, ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் காட்டுக்குச் சென்றார்.

ஒருவன் மரம் வெட்டிக் கொண்டிருந்தான். அவனிடம் விசாரித்தால், குரு இருக்குமிடம் தெரியும் என்று அவனை அணுகி விசாரித்தார்.

"வெல ரொம்ப ஜாஸ்திங்க!" என்றான், அந்த ஆள்.

தான் கேட்டது அவனுக்குப் புரியவில்லை என்று நினைத்த பேராசிரியர், "நான் கேட்டது அதுவல்ல, அப்பா. குரு **நானின்** எங்கே இருக்கிறார் என்று கேட்டேன்" என்றார்.

"ஆமாங்க, கோடாலி வெலெ ரொம்ப ஜாஸ்திதாங்க" என்றான் அந்த ஆள்.

அவனுக்குக் காது கேட்கவில்லையோ? பேராசிரியருக்குக் குழப்பம்.

அப்போது அந்த ஆள் தன் கோடரியைத் தூக்கிப் பேராசிரியரின் தலைக்கு மேலாக ஓங்கினான்.

பேராசிரியர் கதிகலங்கிப் போய்விட்டார்.

"நல்ல கூர்மை!" என்று வேறு சொன்னான், அவன்!

பேராசிரியர் எடுத்தார் ஓட்டம்.

காட்டின் ஆரம்பத்திலிருந்த கோயிலை அடைந்துதான் நின்றார். கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு. அங்கிருந்தவர்களிடம் நடந்த கதையைச் சொன்னார்.

அவர்கள் அதைக் கேட்டு சொன்ன செய்தி அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அந்த விறகுவெட்டிதான் குருவாம்!

"அவருக்கென்ன பைத்தியமா?" என்று கேட்டார் பேராசிரியர்.

"இல்லை, அவருக்குப் பைத்தியமில்லை. நீங்கள் அவரிடம், **'நானின் உள்ளே இருக்கிறாரா?'** என்று கேட்டிருந்தால், 'ஆமாம்' என்று சொல்லியிருப்பார். நீங்கள் சந்தித்த போது அவர் குருவாகவோ, மகானாகவோ இல்லை. ஒரு மரம் வெட்டியாக மட்டுமே இருந்தார். அப்போதைய அவர் நினைப்பு கோடரியின் மீது இருந்திருக்கும். அதனால்தான் 'விலை அதிகம்' என்று சொல்லியிருக்கிறார். அவர் கவனம் அதன் கூர்மையில் சென்றபோது, 'நல்ல கூர்மை' என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் முக்கியமான விஷயத்தைத் தவற விட்டுவிட்டீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்களோ, அதுவாக இருப்பதுதான் ஜென்," என்றார் கோயிலில் இருந்த ஒரு பிக்கு.

ஜென் என்பது தத்துவ விசாரணை அல்ல. எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு, செய்யும் தொழிலாகவே மாறிவிடுவது ஜென். பூரணமான ஜென்.

இதன் வழியோ, எதன் வழியோ செல்வதல்ல ஜென்.

அதுவாதல் ஜென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்

காப்புறுதி வசதிகள்

வாடகை உரித்து

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

ஃபினான்ஸ் வர்த்தகம்

செயற்பாட்டு வரி

வீடு, சொத்து கடன்

வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

தலைமை அலுவலகம்

84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்

270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை

254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்

அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லால் என்றன்....



போகும் வழியில் அங்கங்கே
தரையில்
எறும்புகள் மொய்க்கக் கண்டால்
நீ எச்சில் துப்பிப் போயிருப்பாய்
என்றே நினைக்கிறேன்....

சீப்பிலிருந்து நீ உருவியெறிந்த
மயிர்ப் பந்து
காற்றில் அலைகையில்
என் மனமும் அதனோடு
அல்லாடுகிறது....

நீ வியர்வை துடைத்த
கைக்குட்டையை
வீசியெறிய மாட்டாயா என்று
தவங் கிடக்கிறேன்....

உன் கொலுசுப் பாதங்கள்
நடந்த மணல்தரையை
விழுந்து கும்பிடவே
மனம் ஏவும்....

உன் மூச்சும் கலந்திருக்கும்
என நினைக்க....
உலவும் இந்தக் காற்று
உடம்பைக் கொதி உலையாக்கும்

கொடியில் ஆடும் உன் உடைகள் காண
உடம்பும் மனமும் போய் அதில் புரளும்
கண்ணன் ஆடைகள் திருடியதன்
காரணம் விளங்கும்....

வட்டங்களிட்டுக் குளமகலாத தெப்பம்.

- இடக்கரடக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திகள் கூராகின்றன

புதிய புதிய நவீன ஆயுதங்கள் மனிதனின் பாவனைக்கென பல்வேறு தினுசுகளாக வந்து குவிந்து கொண்டிருக்கும் இந்த விருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இன்னமும் மனிதனால் ஆரம்பத்தில் செய்யப்பட்ட சில ஆயுதங்களும் பாவிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு என்று நாம் விரும்பியோ விரும்பாமலோ உலகில் எல்லோராலும் கையாளப்படுகின்ற ஒரு பொருளாக இருக்கிறது கத்தி.

நமது சமையலறையில் தொடங்கி பெருங்காடழிப்பு, நகர மயமாக்கல் போன்றவற்றிலும் இந்தக் கத்திகளின் கதை இன்று நேற்றல்ல, மனிதன் காடுகளில் குழுக்களாகத் திரிந்த காட்டுமிராண்டிக் காலம் தொட்டு நிலவி வருகிறது.

இலங்கையாயிருந்தாலென்ன, இங்கிலாந்தாயிருந்தாலென்ன எந்த வீட்டுச் சமையலறையிலும் கத்தி ஓர் அவசியப் பொருள்தான். தற்பொழுது நவீன 'கட்டர்' முறைகள் வந்தாலும் எமக்குத் தேவையான விதத்தில், தேவையான அளவில் விருப்பம் போல வெட்டிக் கொள்ள வேண்டுமானால் கத்திதான் நமது கைகளில் இருக்க வேண்டும்.

கத்திசெய்யப்பட்டிருக்கின்றவிதங்கள்தான் ஓரளவு மாற்றமடைந்திருக்கின்றனவே தவிர கத்தியின் தேவையில் மாற்றமில்லை...

பல பெயர்களில் எமக்கு உதவிவரும் அதே கத்திகள்தான் சில வேளைகளில் மனித உடல்களைக் கூட ஒரே வெட்டாக வெட்டித் துண்டித்து விடுகிறது.

பாதாள உலகக் கோஷ்டியினர் தொடக்கம், சாதாரண குடிமகனும் சர்ரென வரும் கோபத்தைத் தீர்க்க கைக்கடக்கமான கத்திகளை வைத்துக்கொண்டு உலவுகிறார்கள்.... இடுப்பில் மறைத்து.

இப்படி.....

நல்லதற்கோ-கெட்டதற்கோ-எமது அத்தியாவசிய தேவையாக வாழ்வோடு இணைந்துவிட்டதென்றாலும், கத்தியின் உருவாக்கத்தில் பங்கு கொள்கிறவர்கள், பின்னணியிலிருந்து செயற்படுபவர்கள் யார், எவர், அவர்களது வாழ்க்கை எப்படி என்று எவரும் கவனிப்பதில்லை.



திரைப்படத்தில் முகம் காட்டாது பின்னணியிலிருந்து செயற்படும் இயக்குநர்களைப் போல இருக்கும் இவர்களைப் பற்றிக் கொஞ்சம் ஆராயத் தலைப்பட்ட போதுதான் இவர்களும் சமூகத்தில் பிரிக்கப்பட முடியாதவர்கள் என்பது புலப்படுகிறது. இவர்களின் இயக்கம் நின்றுவிட்டால் சமூகம் ஸ்தம்பித்துப் போகும் என்ற அளவு அத்தியாவசியமான இவர்களை எப்படி நாம் பாராமுகமாக இருக்கிறோம் என்று வியக்கவும் தோன்றுகிறது.

வானளாவும் கட்டடங்களோ, அடுக்குமாடித் தொழிற்சாலைகளோ இன்றி வெறும் ஓலைகளால் வேயப்பட்ட குடிசைகளே குட்டித் தொழிற்சாலைகளாக நெற்றி வியர்வையைச் சிந்தி சாதாரண கத்தி செய்யும் தொழிலாளர்களே இன்று எமது நாட்டில் இருக்கிறார்கள்.

நமது நாட்டில் பொதுவாகப் புழக்கத்தில் இருக்கின்ற கத்திகள் இந்த சாதாரணதொழிலாளிகளால் செய்யப்பட்டவை. கத்தி செய்யவென்றே சிறு தொழிற்சாலைகள் இருந்தாலும் அதற்கு இலங்கையில் பேர் போன இடமாக விளங்குவது வய்க்கால்!

'கத்தி' என்று சொன்னாலே 'வய்க்கால்' என்று சொல்லுமளவு அந்த இடத்தின் பெயர் இத்துறையில் பிரசித்தி பெற்றுள்ளது. ஆனால் அங்கு எந்தப் பிரமாண்டமான தொழிற்சாலையும் இல்லை. யாவுமே சிறிய குடிசைக் கொல்லன் பட்டறைகள்தான் என்பது மலைப்புக்குரியது.



கொழும்பிலிருந்து சிலாபம் வீதியில் கொச்சிக்கடையைத் தாண்டி சுமார் 4 கி. மீ. தூரம் வரையில் சென்றால் அங்கே பாதையின் இரு மருங்கிலும் தோரணங்கள் போல் சிறிய கத்திகள், பெரிய கத்திகள், வாள் என்பன அழகாக அடுக்கப்பட்டு அனைவரையும் சற்று உற்றுப் பார்க்க வைக்கும்.

இரு பக்கமும் தென்னந் தோப்புக்குள்ளிருந்து வீசும் மெல்லிய காற்றுடன், கத்தியைச் சூடாக்கும் நெருப்பில் காய்ந்து கொஞ்சம் கொஞ்சமாய் கருகிக்கொண்டே போகிறார்கள் இந்தக் கத்தி செய்யும் கொல்லர்கள்.

ஏனைய பிரதேசங்களில் செய்யும் கத்திகளை விட உறுதியாக உத்தரவாதத்துடன் செய்யப்படுவதாலும் தொகையாகச் செய்யப்படுவதனாலுமே வய்க்கால் பிரதேசத்தில் செய்யப்படும் கத்திகளுக்கு ஒரு தனி மவுசு! அது மட்டுமல்ல ஏனைய இடங்களில் கத்திகள் இரும்பினாலேயே செய்யப்படுகிறதாம். ஆனால் இப்பகுதியில் தனி உருக்கினாலேயே செய்யப்படுகிறது. இதைத் தெரிவித்தவர் அங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ள பெஸில் என்ற கத்தி உற்பத்தியாளர். அத்துடன் கத்திச் செய்கையின் ஆரம்பகர்த்தாக்களும் வய்க்கால்வாசிகளே எனக் கூறுகிறார் அவர்.

நாம் அங்கு கால் வைத்தபோது......



காலை எட்டு மணிக்கு வேலைக்கு வந்துவிட்டால் மாலை 6.00 மணி வரை சூடாக்குவதும் தட்டுவதும்தான் இவர்கள் திரும்பத் திரும்பச் செய்யும் பணி.

நாம் சென்ற ஒரு குடிசைக்குள் -

தம் நெற்றியிலிருந்து வியர்வை சொட்டுச் சொட்டாய்ச் சிந்த உடம்பின் முழுப்பலத்தையும் ஒருங்கே சேர்த்து இருவர் தட்டிக் கொண்டிருந்தனர்... அவர்களின் தட்டலில் ஒருவித கோப உணர்ச்சி கொந்தளிப்பது போல் இருந்தது.



நாங்கள் யாரென்பதை புரிந்து கொண்டதும் அவர்கள் தட்டுவதை நிறுத்தினார்கள். முகத்தில் ஒரு வித வாட்டம் தெரிந்தது. "சேர்.... எல்லோரும் வந்து முதலாளியோட பேசிவிட்டுப் போறாங்க... ஆனா எங்க கஷ்ட நஷ்டங்களைப் பற்றி யாரும் கவலைப்படுவதேயில்லை...."

அங்கு முதலாளியில்லை என்பதைப் புரிந்து கொண்டோம். பேசுவதற்குத் தூண்டினோம்.

"எங்களுக்கு நாட் கூலி கொடுக்கிறதில்லை, கொந்தராத்து அடிப்படையில்தான் வேலை செய்கிறோம்... எங்கள முதலாளிமார் சுரண்டிக் கொள்கிறார்கள். எமது சிரமத்துக்குக் கிடைக்க வேண்டிய பணம் வந்து சேர்வதில்லை.... ஒரு கத்தி செய்து முடிப்பதற்கு பதினைந்து ரூபா தருவார்கள். ஒரு நாளைக்கு 15 கத்திகள்தான் செய்ய முடியும். எங்களுக்கு 225 ரூபா தந்துவிட்டுஅவர்கள் ஆயிரக் கணக்கில் தேடுகின்றார்கள். நாங்க தேடுற காசு.... அந்தியில அடிக்கிற சாராயத்துக்கே பத்தாது" என்று கூறினான் அதுல என்ற தொழிலாளி.

"என்ன செய்ய....? பரம்பரை பரம்பரையாக நாங்கள் செய்யும் இந்தத் தொழிலை விட்டா செய்யுறதுக்கு வேறு தொழிலும் இல்லாததனாலேயே நாங்கள் இதைச் செய்கிறோம்... எப்படியோ... வயிற்றுப் பசியை நிரப்ப சில நாட்களில் இரவிரவாகக் கூட உழைக்கின்றோம். தினமும் காலையிலிருந்து மாலை வரை உருக்கைத் தட்டித் தட்டி கொஞ்சம் கொஞ்சமாய் வாழ்க்கையையும் உருக்கிக் கொண்டே போகிறோம்" என்றான் குமார என்பவன்.

# வாழ்க்கையே தேய்கிறது

வடிவமைப்பாளர்களோ, பகுப்பாளர்களோ அங்கு இருக்கவில்லை. மாறாக இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஏதோ கை வந்த கலை போல பரபரவென வேலை செய்து கொண்டிருந்தனர்.

ஒரு சிரட்டைக் கரி இட்ட விசேட போறணை போன்ற அடுப்பில் ஒரு அளவான உருக்குப் பட்டத்தை சுமார் 5 நிமிடங்கள் வரையில் சூடாக்க அதை எடுத்து இருவர் நன்றாகத் தட்டிக்கொண்டேயிருப்பார்கள். சூடு தணிந்ததும் திரும்பச் சூடாக்கி திரும்பத் தட்டுவார்கள்.

இப்படி சுமார் ஒரு செ. மீற்றர் அளவுள்ள உருக்கைத் தட்டி அதை அரை செ. மீற்றர் அளவுக்குக் கொண்டு வருவதற்கு அரை மணித்தியாலம் அளவில் செலவழிக்கிறார்கள். பின் அதை ஒருவர் அரம் கொண்டு கூர்மையாக்க... கத்தி வடிவம் பெறுகிறது. அதற்குப் பிடி போட்டதும் கத்தி விற்பனைக்குத் தயாராகி விடுகிறது.

சரி, இவர்கள் எங்கு இந்தத் தொழிலைக் கற்றார்கள்.... எங்கும் கற்கவில்லை.... எல்லாம் அனுபவத்தால் வந்ததுதான்.

சில வேளைகளில் பெரிய ஓடர்கள் கிடைத்துவிட்டால் இரவிரவாக வேலை செய்வார்களாம்.... அப்படி வேலை செய்யும் பொழுது இரும்பு தட்டும் இவர்களுக்கு தவறுதலாகக் கை தட்டுப்பட்டுவிட்டால் கொட்டும் இரத்தத்திற்கு மருந்து போடும் செலவைக்கூட இவர்களே பார்த்துக்கொள்ள வேண்டிய நிலையில் - எதுவித காப்புறுதிகளும் செய்யப்படாத நிலையிலேயே இருக்கிறார்கள்.

சுமார் 7 குட்டித் தொழிற்சாலைகள் **வய்க்காலில்** இருக்கிறது. அதில் வேலை செய்யும் அனேகரிடம் அவர்கள் தொழில் பழகிய இடத்தைக் கேட்டபோது பலரும் ஒரே இடத்தைத்தான் சொன்னார்கள்... அங்கு போய் அந்த இடத்தைப் பார்த்தோம்... சுமார் 20 X 15 அடி விஸ்தரிப்பில் ஒரு இடம்... 5 தொழிலாளர்கள்.... இவர்களைக் கொண்டு நடத்தும் உரிமையாளர்... ஒரு பெண் என்றதும்.... அதுவும் அவர் ஒரு விதவை என்றதும் ஆச்சரியமாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விதவைப் பெண்ணான லில்லி கெனத்துக்கு வய்க்கால் பிரதேச தொழிலாளர் எல்லோரும் கடமைப்பட்டவர்கள். ஏனென்றால் அவர்கள் எல்லோருக்கும் பள்ளிக்கூடமாய்த் திகழ்ந்தது இவரது இடம்தான்.... எந்தவித ஆடம்பரமுமின்றி எளிமையான முறையில் தனது தொழிலகத்தை நடத்திச் செல்கிறார் இவர்.

சுமார் 50 - 55 வருடங்களுக்கு முன் சிரில் மொராயஸ் என்பவரின் மகளுக்குப் பிறந்தவர் லில்லிகெனத். தனதுஒரேமகளைத் திருமணம் செய்துகொடுத்துமாப்பிள்ளைக்குச் சீதனமாய் இந்த தொழிலகத்தையும் கொடுத்துவிட்டார். தன் துணைவரோடு துணையாய் நின்று உழைத்து. இரு பிள்ளைகளைப் பெற்ற நிலையில் கணவன் இறந்துவிட, பரம்பரைத் தொழிலைக் கையிலெடுத்துக் கொண்டார் லில்லி கெனத். இன்றும் துணிச்சலோடு ஐந்து பேரை வேலைக்கமர்த்தி சாமர்த்தியமாக இத்தொழிலைச் செய்து வரும் இந்த விதவைப் பெண் தனக்குப் பிறகு தனது மகனுக்கே இத்தொழிலை வழங்கப் போவதாகவும் கூறுகின்றார்.

ஒருவருக்கு ரூபா 225 வீதம் 5 பேருக்கு 1125 ரூபா கொடுக்கின்றார். அதற்கு மேலதிகமாக சிரட்டைக் கரிமற்றும் கைப்பிடிக்கானசெலவுகள் எல்லாம் சேர்த்து ரூபா 1500 வரையில் செலவாகிறது. சுமார் 15 கத்திகளை விற்பதனால் ரூபா 3000



Photos by : Negombo Picture Correspondent

வரையில் உழைத்தும் கொள்கிறார். ஆனால் விலைவாசி உயர்வு, செலவினங்களோடு ஒப்பிடும் போது இது போதாது என்றே இவர் கூறுகின்றார்.

"என்னிடம் வேலை செய்யும் தொழிலாளிகளோடு நான் பண்பாகவே நடந்து கொள்கிறேன்...அவர்களின் சுகதுக்கங்களிலும் பங்கு கொள்கிறேன்... என்னிடம் வேலை செய்த பலர் இன்று வேறு இடங்களில் வேலை செய்கிறார்கள். ஆனால் அதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. எல்லோரும் ஜீவிக்க வேண்டும்... அதுதான் என் எண்ணம்" என்றார்.

தொழிலாளர்களாயிருந்தாலென்ன...உரிமையாளர்களாயிருந்தாலென்ன இரு சாராருமே ஏழ்மையின் படியிலே ஏறி நிற்பவர்கள்தான் என்பது தெரிந்தது. ஏதோ சமையல் இருக்கும் வரையில் எமது தொழிலும் இருந்து கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையில் இவர்கள் கத்தித் தொழிலில் நீடித்திருக்கிறார்கள்.

கத்திவிற்காதநாட்களில் இவர்களின் வயிற்றிலும் அடி விழுகிறது. சில நாட்களில் வேலை செய்பவர்களுக்குக் கூலி கொடுப்பதற்கு கூட விற்பனை நடப்பதில்லையாம். ஆனால் சிலாபம்... நீர்கொழும்பு.... புத்தளம் மீனவர்களின் ஓடர்கள் அடிக்கடி கிடைப்பதால் அது ஈடு செய்யப்படுவதாகவும் சரத் என்ற உரிமையாளர் கூறுகின்றார்.



"வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு வெறும் கத்திமட்டும்தான் தெரிகிறது. ஆனால் அதற்கு யார் யார் என்ன கஷ்டப்பட்டார்களென்று பார்ப்பதில்லை. சம்பளம் கூட்டிக் கேட்டால் நாளைக்கே நாம் துரத்தப்பட்டுவிடும் நிலை. எதிர்த்துப் பேச எங்களுக்கென்று சங்கங்கள் இல்லை.

எப்படியோ நாம் செய்யும் தொழிலை கௌரவமாக மதிக்கிறோம்.... இதுவரை காலமும் சோறு போட்ட இந்தத் தொழில் நிச்சயம் எங்களைக் கைவிடாது" என்று கொஞ்சம் ஆவேசத்துடன் கூறினான் அஜித்.

இப்படி உரையாடிக் கொண்டே அஜித்திடமிருந்தும் விடைபெற்றுச் சிறிது தூரமே சென்றிருப்போம்... மீண்டும் காதைக் கிழிக்க ஆரம்பித்துவிட்டது அந்த ஓசை. டிங்.... டிங்.... டிங்.... தூரத்தே விலகிச் செல்லச் செல்ல அந்தச் சத்தமும் மெல்லக் கரைந்து எம் இதயத் துடிப்புடன் சங்கமமாகிவிட்டது. •

- ஹிஷாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் மன்னர்களும் பொறுக்கிகளும்...

அலுவலகத்தில் பணிபுரியும் பெண் என்ற விதத்தில் இரண்டு பிரதானமான ஆண்களை நீங்கள் சந்திப்பீர்கள். - ஒருவர் காதல் மன்னன், அடுத்தவர் திருமணமான பொறுக்கி. இவர்கள் இருவரையும் கண்ட மாத்திரத்தில் விஷம் போல் வெறுத்து ஒதுக்க வேண்டும். இவர்களைப் பற்றி சற்றே விரிவாக இங்கே பார்ப்போம்.

காதல் மன்னன் - அழகான இளைஞன், நல்ல உடற்கட்டுடன் மென்மையாகப் பழகும் குணமும், தாராள மனமும் கொண்ட கெட்டிக்காரன். பெண்களைப் பின்தொடர்ந்து கவர்ந்திழுப்பது இவன் குணம். இது பொதுவாகப் பெண்களுக்குப் பிடிக்கும்.

உங்களை முதலில் சந்திக்கும்போது இவன் இதற்குமுன்பு உங்களைப்போன்றஓர் அழகான, இனிமையான, புத்திசாலியான.. பெண்ணைச் சந்தித்ததே இல்லை என்பது போல நடந்து கொள்வான். ஆனால் அவனது வாழ்வில் பிற பெண்கள் ஏராளமாக இருப்பார்கள். அவர்களிடமும் இதே போல் நடந்து கொண்டிருப்பான் என்பதை மறக்கக் கூடாது. அவர்களில் ஒவ்வொருத்தியும் அவனது வாழ்க்கையின் ஒரே பெண் தான்தான் என்று எண்ணிக் கொண்டிருப்பார்கள்.

புதிதாக அறிமுகமாகும் ஓர் அழகான ஆண் உங்கள் கைகளை இறுகப் பற்றிக் குலுக்கி உங்களது கண்களை ஊடுருவி புன்னகையுடன் "உங்களை ஏன் இதுவரை நான் சந்திக்கவில்லை?" என்றோ, "இத்தனை அழகை இவ்வளவு நாள் எங்கே ஒளித்து வைத்திருந்தீர்கள்?" என்றோ கேட்கிறானா? உங்கள் உள்ளுணர்வு விழித்துக்கொள்ள வேண்டும். சந்திப்பு முடியுமுன் அடுத்த சந்திப்புக்கு அவன் வழிவகுத்தால் - கவனம், கவனம்! காதுகளை கூர்மையாக்கிக் கொள்ளுங்கள். (கண்டதும் காதலில் காதுகள் அடைத்துக் கொள்வதுண்டு. கண்களும் குருடாவதுண்டு!)

காதல் மன்னர்கள் ஏன் காதல் மன்னர்களாக இருக்கிறார்கள் என்பதற்குக் காரணம் சொல்ல என்னால் முடியாது. நாம் ஏன் அவர்களால் கவரப்படுகிறோம் என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் நம் வாழ்க்கையில் நுழைந்தால் எப்படிச் சமாளிப்பது என்று மட்டும் எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன்.

உங்கள் நெருங்கிய தோழியிடம் உங்கள் பிரச்சினையை விவரித்தால் அவள் சொல்லக் கூடும், "பெரும்பாலும் எல்லா ஆண்களுமே பெண்களால் கவரப்படுகிறார்கள். என் காதலன் கூட அழகான பெண்களை முறைத்துப் பார்க்கிறார்!" என்று.

ஆனால் காதல் மன்னன் வித்தியாசமானவன். அவன் பெண்களை முறைத்துப் பார்ப்பதோடு நிறுத்திக் கொள்வதில்லை. அருகே சென்று பழகவும், முந்தைய காதலியை ஒதுக்கவும் செய்வான். ஒரு நிலையான உறவுக்கு அவனது மனப்பாங்கு ஒத்துவராது என்பதைப் புரிந்து கொண்டு ஒதுங்குதல் நலம்.

ஒரு காதல் மன்னன் உங்களிடம் தேன் வழியப் பேசிவிட்டு அடுத்த பெண்ணை நெருங்கும் போது, உங்களிடம் ஏதோ ஒரு குறை உள்ளது போல் உணர்வீர்கள். இது தவறு - குறை அவனிடம்தான் என்று புரிந்துகொள்ளுங்கள்.

இத்தகைய உறவுகளின் விளைவுகளான பொறாமை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வுகள் உண்மையானவை. உங்கள் காதல் உணர்வு எத்தனைமென்மையாக இனிமையாக இருப்பினும் பின்வரும் துயரத்தை எண்ணி ஒதுங்குவது நலம். உள்ளுணர்வை நம்புவது உத்தமம்.



இரண்டாவது அபாயகரமான ஆசாமி- திருமணமான ஆண். மணமாகாத ஒரு பெண்ணாக அலுவலகத்தில் பணிபுரிய வரும்போது திருமணமான ஆண்களைச் சந்திக்கவும், உடன் பணி புரியவும் வாய்ப்புக்கள் நிறைய உண்டு. இச்சமயங்களில் பல நெருக்கமான நட்புறவுகள் கிளைக்கவும் வாய்ப்புண்டு.

இந்த உறவு மேலும் நெருக்கமாவதில் பல பிரச்சினைகள். எல்லாக் காதல் உறவுகளையும் போல இது திருமணத்தில் முடியும் என்று சொல்ல முடியாது. அப்படி முடியுமானால் அது மற்றொரு மண முறிவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால்தான் நிகழ வேண்டும்.

திருமணத்தில் முடியாவிட்டாலும் பரவாயில்லை, எங்கள் காதல் உண்மையானது என்று நீங்கள் நம்பினால் இதில் உள்ள பிற கஷ்டங்களை எண்ணிப் பாருங்கள். ஒளித்து மறைத்து பொய் சொல்லிச் சந்திக்க வேண்டிய அவசியம் உங்கள் மனத்தை நிச்சயம் பாதிக்கும். சொந்தமற்ற உறவு நிலைக்கவோ நீடிக்கவோ முடியாது.

திருமணமான ஆண்கள் சுயநலவாதிகள். தங்களது திருமண உறவுச் சிக்கல்களைச் சமாளிக்காமல் தப்பி ஓட எண்ணுபவர்கள். நீங்கள் மாட்டினீர்கள், அவ்வளவுதான். உங்களிடம் அவர்களைப் பொறுத்தவரையில் தனிச் சிறப்பு எதுவுமில்லை. உங்கள் இடத்தில் எந்தப் பெண் இருந்திருந்தாலும் சரிதான்.

அவனுடைய பிரச்சினை உங்கள் மனத்தை உலுக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் அவை உங்கள் பிரச்சினைகள் இல்லை. ஒரு சிறுவனைப் போல அடிபட்ட முட்டியைக் காட்டி அழுது, நீங்கள் அனுதாபப்பட வேண்டும் என்று விரும்பினால் அதற்கு இடங் கொடாதிருங்கள்.

அவனது மனைவியிடம் பேசிப் பார்த்தால் உண்மை நிலை விளங்கும். சாதாரணமாக இவர்கள் "என் மனைவி என்னைப் புரிந்து கொள்வதில்லை" என்று தொடங்கி தாங்கள் உத்தம புருஷர்களாக இருப்பதாகவும், தத்தமது மனைவியர் பூதகி தாடகை என்றும் வர்ணிப்பார்கள். தொடர்புள்ள நபர்களிடம் விசாரியுங்கள்.

உங்கள் இதயம் மெழுகு போல் உருகினாலும், உங்கள் நட்பு - காதல் எவ்வளவு பரிசுத்தமானதாகத் தெரிந்தாலும் உங்களைப் பொறுத்தவரையில் இங்கே உங்களுக்கோர் எதிர்காலம் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

காலப்போக்கில் இரண்டு சம்பவங்கள் நிகழலாம். - ஒன்று, அவனுக்குத் தன் மனைவியுடனான பிணக்குத் தீரலாம். அல்லது தனது மனைவி மற்றும் குழந்தைகளிடமுள்ள கடமை உணர்வு திடீரென்று தலைதூக்கலாம். அல்லது உங்களை விட அதிக அனுதாபம் காட்டும் மற்றொரு பெண் அவருக்குக் கிடைக்கலாம். உங்களுடனான உறவு அலுத்துப் போகலாம்.

உங்களைப் பற்றி உங்கள் சொந்த அபிப்பிராயத்தை 'தான்' (Ego) என்ற எண்ணத்தை வலுப்படுத்திக் கொள்ளுங்கள். தங்களைப் பற்றிய ஓர் உயர்ந்த எண்ணம் கொண்ட ஒரு பெண்ணை காதல் மன்னர்களோ திருமணமான ஆண்களோ வசியப்படுத்த முடியாது.

நட்பு முறிந்தால் ஆணும் பாதிக்கப்படுகிறான். அது வெளியே தெரியாமல் இருக்கலாம். ஆனால் அவனுக்கு நெருங்கியவர்கள் அறிவார்கள்.

நட்பை முறித்துக் கொண்ட பின்னர், தேவையானால் பணியை மாற்றிக் கொள்ளுங்கள். இது இருவருக்குமே நல்லது.

மேற்சொன்ன விஷயங்களில் நாம் உண்மைக் காதலைப் பற்றிப் பேசவில்லை. காரணத்தோடுதான். உண்மைக் காதல் நிகழும்போது உங்களுக்குத் தெரியும். அது நிகழும்போது அதற்கு முன் ஏற்பட்ட உணர்வுகள் எல்லாமே பொய்யாகத் தோன்றும். திருமணமா, இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லாமல் நிச்சயம் திருமணம்தான், குழந்தைகள்தான் என்ற முடிவு இயற்கையிலேயே ஏற்படும்.

- ஜார்ஜீனா பீட்டர்

# தாயாகும் உனக்கு...



திருமதி எஸ். பரமலிங்கம்

## அன்புச் சிநேகிதி ராஜிக்கு...

'இவ்விடம் நலம். உங்கள் சுகநலன் கடித மூலம் அறிந்து மிகவும் சந்தோஷம்.

உம்மைப் பிரிந்து நான் இவ்விடம் வந்துவிட்டாலும் உமது சுகநலன்களில் மிகுந்த அக்கறை உண்டென்பதை நீர் அறிவீர்.

திருமணமாகி நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டதாகவும், உவ்விடப் பிரச்சினைகள் மத்தியிலும் நீங்கள் இருவரும் சந்தோஷமாக வேலைக்குப் போய் வருவதாகவும், இருந்த ஒரு குறையும் நீங்கிவிட்டதாகவும் எழுதியிருந்தீர்கள்.

ஆம்... நீர் மூன்று மாதம் கர்ப்பமாக இருப்பதையிட்டு மிகவும் சந்தோசம்.

ராஜி! கர்ப்பமென்றவுடன் நீர் ஏன் இவ்வளவு பயப்பட வேண்டும்? இது இயற்கையாக ஏற்படும் ஒரு விடயமாகும். திருமணத்தின் பயன் தாய்மையில்தான் பூரணமாகின்றது என்பது உமக்குத் தெரியாததா? இதற்குப் போய் இல்லாதது பொல்லாதது எல்லாம் கற்பனை பண்ணி வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே.

முதல் மூன்று மாதங்களில் சத்தி, தலைசுற்று, சாப்பாட்டிற்கு விருப்பமின்மை போன்ற குணங்கள் இருப்பது இயற்கையே. புதிதாக ஒரு உயிர் உமது கருப்பையில் வளரத் தொடங்கியபடியால் உமது உடலில் சில அசௌகரியங்கள் ஏற்படுவது இயற்கையே.

மூன்று மாதங்கள் முடிய இது தானாகவே குறைந்துவிடும். இதனை 'மசக்கை' என்று சொல்வார்கள்.

இந்த மசக்கையானது தாங்க முடியாததாக இருந்தால் கட்டாயம் ஒரு மகப்பேற்று மருத்துவரிடம் காட்டுவது நல்லது.

உமது இடத்தில் கடமை செய்யும் குடும்ப நல உத்தியோகத்தரிடம் உம்மைப் பதிவு செய்வதுடன் சிகிச்சை நிலையத்திற்கும் அவர்கள் தரும் திகதிக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்.

இரத்தவிகிதம், சலம், இரத்த அழுத்தம், உயரம், நிறை இவற்றுடன் உமது இரத்தப் பிரிவு எந்த வகை என்பதனையும் தெரிந்து கொள்.

குழந்தையின் வளர்ச்சி சரியாக இருக்கின்றதா என்பதையும் கேட்டு அறிந்து கொள்.

பிரசவத்தின் பின் தாய்க்கும், பிள்ளைக்கும் ஏற்பு நோய் வராமல் ஏற்புத் தடுப்பூசி போட்டுக் கொள். முதல் ஊசி போட்டு ஆறு கிழமையின் பின் இரண்டாவது ஊசி கட்டாயமாகப் போட்டுக் கொள்.

முதல் மூன்று மாதங்களிலும் கடைசி மூன்று மாதங்களிலும் நீண்ட பிரயாணங்களையும் கடும் உழைப்பையும் தவிர்த்துக் கொள். இதனால் கருச்சிதைவு ஏற்படவும், குறைப்பிரவசம் ஏற்படவும் வழியுண்டு.

உமது கர்ப்பக் காலத்தில் நீர் சில விடயங்களில் கவனமாக இருத்தல் வேண்டும். மனநிலை, உணவு, உடை, அப்பியாசம், ஓய்வு, சுத்தம் இவற்றில் கூடிய கவனம் எடுத்தல் அவசியமாகும்.

நீர் ஒரு ஆசிரியையாக இருக்கின்றபடியால் அதிகம் நான் எழுதத் தேவையில்லை.

### உணவு:

போசாக்கான சத்துள்ள உணவினைத் தெரிந்து எடுத்துச் சாப்பிடு. எண்ணெய், உறைப்பு, உப்பு இவைகளை உணவில் அதிகம் சேர்க்காதே.

இறைச்சி, முட்டை, பால், கீரை வகை, பழ வகை அன்றாடம் எடுத்துக்கொள். கட்டாயம் ஒவ்வொரு நாளும் ஏதாவதொரு பச்சை இலைக்கறி உணவில் சேர்த்துக்கொள்.

வெண்டைக்காய், பூசணிக்காய், பயற்றங்காய், கரட் போன்ற உடன் மரக்கறிகளையும் உணவில் சேர்த்துக்கொள். பருப்பு மிகவும் நல்லது.

இன்னொரு உயிருக்கும் உம்மில் இருந்துதான் ஆகாரம் செல்லுகின்றது என்று தெரிந்து அதற்கேற்றவாறு உணவினை உட்கொள்.

### உடை:

நீர் அணியும் உடை தூய்மையானதாகவும் இறுக்கமில்லாததாகவும் சுவாத்திய நிலைக்கு ஏற்றதாகவும் இருக்கட்டும்.

### அப்பியாசம்:

நீர் சாதாரணமாகச் செய்யும் வீட்டு வேலைகளே உமக்கு அப்பியாசமாக உதவும்.

சில பெண்களைப் போல கர்ப்பத்தை ஒரு சாட்டாக வைத்து எந்நேரமும் படுக்கையில் இருக்காதே. காற்றோட்டமான இடத்தில் நடப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுத்தம்:**

சுத்தம் மிகவும் முக்கியம். தலையில் இருந்து பாதம் வரை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். தலையில் பேன், பல்லில் சூத்தை இவை வராமல் பார்த்தல் அவசியம். ஒவ்வொரு நாளும் குளித்துச் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

**ஓய்வு:**

கர்ப்பக் காலத்தில் ஓய்வு மிகவும் முக்கியமாகும். பகலில் இரண்டு மணித்தியாலங்களாவது படுத்துக்கொள்ளல் வேண்டும்.

திட்டமிட்டுக் காரியங்களைச் செய்யப் பழகிக் கொண்டால் நேரமில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை. மறுநாள் வேலையை இரவு படுக்கைக்குப் போகு முன்பு திட்டமிடு. திட்டமிட்டுக் கடமைகளைச் செய்தால் வேண்டாத 'ரென்சனை'க் குறைக்கலாம்.

ராஜி, கர்ப்பக் காலத்தில் உமது உடம்பை எவ்வளவு தூய்மையாக வைத்திருக்கின்றீரோ அவ்வளவு கவனமாக உள்ளமும் பாதிப்புகளின்றி இருக்க கவனமெடுத்தல் வேண்டும்.

ஒருவர் சுகமாக இருக்கிறார் என்றால் அவரது உடல், உள, சூழல் யாவும் சுகமாக இருக்க வேண்டும். வேண்டாத சிந்தனைகள், துக்கமான செய்திகளைக் கேட்பது, கூட்டமானஇடங்களுக்குப் போவது என்ற காரியங்களை இந்த வேளைகளில் தவிர்ப்பது நல்லது.

நல்ல சிந்தனைகள், பெரியோர்களின் வாழ்க்கைவரலாறு,பெரியோரின் சொற்பொழிவுகள், வழிபாடு போன்றவற்றில் ஓய்வு நேரத்தைச் செலவழி.

நாட்டிற்கு அழகு, அறிவு, ஆரோக்கியமான ஒரு பிரசையை உருவாக்குவது உமது கடமை அல்லவா?

ராஜி, முக்கியமான விடயம். உமக்குப் பிறக்கும் குழந்தைக்கு தாய்பால் கொடுப்பது.

இப்போதிருந்தே தாய்ப்பால்தான் கொடுத்து வளர்ப்பேன் என்ற எண்ணத்தை மனதில் சந்தோஷமாகநினைத்துக்கொள். அந்தஎண்ணமே பிள்ளை பிறந்த பின் பால் சுரக்க வழியாக அமையும்.

வேலைக்குப் போகும்போது மட்டும் புட்டிப் பால் கொடுப்பது தவிர்க்க முடியாதது. அதற்காக சில பெண்களைப் போல உமது அழகு குறையும் என்று நினைத்து தாய்ப்பால் கொடுப்பதை தவிர்க்காதே.

அமிர்தமான தாய்ப்பால் கொடுத்து பிள்ளையை நோயிலிருந்து காப்பாற்றிக் கொள். தாய்ப்பாலில் நோய் எதிர்ப்புச் சக்தி உண்டு.

உமக்கு 30 வயதில் முதல் பிரசவம் நடைபெற இருப்பதால் கட்டாயம் சகல வசதிகளும் நிறைந்த ஒரு ஆஸ்பத்திரியில்தான் உமது பிரசவம் நடைபெற வேண்டும். அதற்குரிய ஆயத்தங்களை இப்போதிருந்தே செய்யவும்.

கணவர் உமக்கு சகல விதத்திலும் உதவி செய்வதாக எழுதியிருந்தீர். திட்டமிட்டு வாழ்க்கையைத் தொடங்கினால், வாழ்க்கையானது மிகவும் லேசானது.

அடிக்கடி உமது உடல் நிலைபற்றிஎழுதவும். கணவருக்குச் சுகம் கூறவும். மறு கடிதத்தில் குழந்தை வளர்ப்பு பற்றி எனக்குத் தெரிந்த விடயங்களை எழுதுகின்றேன். நீர் பெற்றெடுக்கும் மகனுக்கோ, மகளுக்கோ எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள் எப்போதும் உண்டு.

**இப்படிக்கு,**

**உமது அன்புச் சிநேகிதி, சதா.**



"சுப்பையா, தம்பி சுப்பையா, நாம் எல்லாம் இந்த தேசத்திலே, நாங்களும் மனுஷப் பிறவீன்னு சொல்லிக்கிட்டு வேட்டியும் கட்டிக்கிட்டு அலையுறோமே, எதுக்குன்னு கேக்கறேன்? நமக்கு ஏதாவது தெரியுதா? நாம் ஏதாவது செய்து காட்டியிருக்கோமா? சத்தியமாக் கேக்கறேன்.... காரு எப்படி ஓடுதுன்னு கேட்டா தெரியாதுங்கறே.... சோறு எப்படிச் செமிக்குதுன்னு கேட்டா தெரியாதுங்கறே.... விளக்கு எப்படி எரியுதுன்னு கேட்டா தெரியாதுங்கறே.... குருவி எப்படிப் பறக்குதுன்னு கேட்டா தெரியாதுங்கறே.... வாத்து எப்படி நீஞ்சுதுன்னு கேட்டா தெரியாதுங்கறே...." என்று சொல்லிக்கொண்டே வந்தவர், துரித காலத்தில் ஆரம்பித்து, "எப்படி நிக்கறே? - தெரியாது, எப்படி ஓடறே? - தெரியாது, எப்படிப் படுக்கறே? - தெரியாது, பல் எப்படி முளைக்குது? - தெரியாது...." என்று சொல்லிவிட்டு உரத்த குரலில் "என்ன எழவுதான் நமக்குத் தெரியும்?" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கத்தினார்.

"சுப்பையா நல்லாக் கேட்டுக்கோ. எறும்பு இருக்கே எறும்பு, இதைப் பத்தி இங்கிலீஷிலே எழுதி வைச்சிருக்கான் பாரு, புஸ்தகம் தண்டி தண்டியா தலையாணி கணக்கா! எத்தனை ஆயிரம் புஸ்தகம் எறும்பப் பத்தி! அட ஆண்டவனே, எறும்புல எத்தனை வகை, ஒவ்வொண்ணும் என்ன என்ன செய்யுது, பாட்டி எறும்பு என்ன செய்யுது, பேரன் எறும்பு என்ன செய்யுது, அக்கா எறும்பு என்ன செய்யுது, தம்பி எறும்பு என்ன செய்யுது, எறும்புக் கூட்டம் லெ.'.ப்ட் ரைட் போட்டு எப்படி மார்ச் பண்ணிப் போகுது, அதில தலைவன் யாரு, தொண்டன் யாரு, ஆண்டை யாரு, அடிமை யாரு, அய்யர் எறும்புக்கு என்ன மரியாதை, அரிஜன் எறும்புக்கு என்ன மரியாதை, காதலன் எறும்பும் காதலி எறும்பும் பூங்காவனத்தில் 'பாயும் ஒளி நீ எனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு' அப்டீனு தொகையறா எடுத்து கிட்டப்பா சுந்தராம்பாள் மாதிரி பாடிக்கிட்டு எப்படி காந்தர்வ விவாகம் பண்ணிக்கிடுது..... எனக்குச் சொல்லத் தெரியலே சுப்பையா, எனக்குச் சொல்லத் தெரியலே! பாவிகள் எழுதி வைச்சிருக்கிற புஸ்தகத்திலே லேசா ஒரு பக்கத்தைப் பாக்க இந்த ஆயுள் பத்தாது, பத்தவே பத்தாது!.....

ஆமா.... நாம் என்னடான்னா நாமதான் மகா கெட்டிக்காரங்கன்னு நெனச்சுக்கிடறோம்..... 'ஓம்' என்கிற ரெண்டு எழுத்துக்குள்ளே நீ, உங்கப்பன், பாட்டன், பேரன், பூட்டன் தெரிஞ்சுக்கிட்டது அத்தனையும் அடக்கி வைச்சிருக்கோம், எல்லாம் இதுக்குள்ளே அடங்கிப் போச்சு என்கிறோம்..... வேண்டாம், புதுசா ஒண்ணும் வேண்டாம், வேணடவே வேண்டாம் அப்டீனு தொண்டை கிழியக் கத்தறோம், புல்லும் தர்ப்பையும் போதும் என்கிறோம்.... என்னை விட்டா யாருடா? ஹாய் தாட்புட் ராஜா அப்டீனு தொடையைத் தட்டறோம்.....

ஆமா.... நாம என்னைக்காவது அது ஏன் அப்படி? இது ஏன் இப்படி? அப்படி இருக்குமா? எப்படி இருக்கணும்? எப்படி மாத்தணும்?..... கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்திருக்கிறோமா? கடுகாவது யோசிச்சுப் பார்த்திருக்கிறோமா?..... யோசிக்காம மண்ணாந்தைகளா போயுட்டோமே தம்பி, மண்ணாந்தைகளா போயுட்டோமே..... மண்ணாந்தைகளா போயுட்டோமே....."

**- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த தலைவர் ப. ஜீவானந்தம் பற்றிய சுந்தரராமசாமி கட்டுரையிலிருந்து....**

## "பொறுக்ஸ்"

....தொன்மையைப் பற்றிப் பேசலாம்.

பழைய காரியங்கள் சில வற்றை ரொம்பவும் மதிக்கிறோம் என்றால் ஏதோ பழையது என்ற பண்பு பற்றியல்ல. பழைய காலத்தில் உயிர் இருக்கும், பிரயோசனம் இருக்கும் என்ற நம்பிக்கை பற்றித்தான்.

ஆயிரம் வருஷமாக வளர்ந்து வந்த மரத்தை மதிக்கிறோம் என்றால் அதில் உயிர் இருக்க வேண்டும். பட்டுப்போன மரத்தை ஆயிரம் வருஷத்தியது என்று கொத்திக் கொடுத்து நீர் வார்த்துக் கொண்டிருக்க முடியாது. சந்தனம் புஷ்பம் எல்லாம் போட்டு வழிபாடு செய்ய முடியாது. கோடாலிக்காரனை ஏவிவிட வேண்டியது தான். அல்லாதபட்சம் கறையானும் உளுவானும் குடியிருந்து கொண்டு, பக்கத்து மரங்களுக்கும் நோய் உண்டுபண்ணிக் கொண்டிருக்கும். எப்படியும் மரம் புதிதாக அந்த இடத்தில் உண்டாகாது.

நம்முடைய சமுதாய வாழ்க்கையிலே பட்டுப்போன மரங்கள் பழையன என்ற காரணத்தாலேயே வட்டம் போட்டு இடத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றன. கலைத் துறைகளைப் பார்த்தால் ஒரே காடு.... பட்டுப் போன மரங்கள் அடர்ந்த காடு தான்.

நம்முடைய வாழ்க்கையையும் பண்பாட்டையும் அடிக்கடி 'ஜடுதி' பார்க்க வேண்டும். பழைய காரியங்கள் உயிரற்றனவாய் நின்று இடையூறு செய்கின்றனவா என்று பார்க்க வேண்டும். வேண்டாதவைகளைக் களைந்தெறியக் கூசக் கூடாது. அப்போதுதான் வாழ்க்கை வளம்பெறும். வாழ்க்கையில் வேறு எந்தத் துறையில் பேரம் பண்ணிக் கொண்டிருந்தாலும் கலை இலக்கிய சம்பந்தமாகப் பேரம் பண்ணவே கூடாது.



**- டி. கே. சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு நல்ல சக்தியும், ஞானமுமிக்க குரு வேண்டும். அத்தோடு பக்தியும், இதய சுத்தியும், சன்மார்க்க நெறி தறவாமை, மனம் ஒருமைப்பட்டு யோக தியானங்களில் ஈடுபடல், இல்லறம் நீக்கி துறவறம் புகுதல், வேத அறிவு, இடைவிடா மந்திர உச்சாடனம், சுத்தம், ஒழுக்கம், பற்றற்ற தன்மை இத்யாதி.... இவைகளெல்லாம் "சுவாமி" எனும் நிலையை அடைய, சாமியார் என்ற பெரும் பேறடைய அவசியமான அடிப்படை விடயங்கள் என்றா நினைக்கிறீர்கள்?

- தேவையேயில்லை.

மூன்றே மூன்று விடயங்கள் தெளிவாகத் தெரிந்தால் போதும்.

ஒன்று. இறைவன் எனும் மனிதருக்கப்பாற்பட்ட சக்திகளென்று ஒன்றுமே இல்லை என்ற தீவிரமான நம்பிக்கை.

இரண்டு. இந்த மேற்குறிப்பிட்ட சக்திக்கெதிரானஅல்லதுசமமானபூத,பேய்,பிசாசு,ராட்சத, அசுர சக்திகளும் அறவே இல்லை என்ற திடமான நம்பிக்கை. ஒருவேளை அப்படி இருந்துவிட்டாலும் நம்மையொன்றும் பண்ணிவிடாது என்ற உண்மை.

மூன்றாவது. மனித மனோதத்துவ - சைக்கோலஜி. இதுகூட அவ்வளவு ஆழமாகத் தெரிந்திருக்கத் தேவையில்லை. சாதாரணமான நடைமுறையில், ஒருவனின் முகத்தைப் பார்த்து அவனுள் ஏதோ ஒரு கவலை இருக்கிறது, மகிழ்ச்சியாக இருக்கிறான் என்பது போன்ற மிகச் சாதாரணமான அறிவு அதாவது கொமன் சென்ஸ்.

இது மூன்றும் இருக்கிறதா! அப்போ - நீங்களும் நம்மிடையே உலவும் மகா புருஷர்களில் ஒருவர்! கேள்விக்கே இடமில்லை. சாமியாராகி விடலாம்.

ஒரு "சாமியார்" நம்மிடையே எப்படி உருவாகிறார், உருவாக்கப்படுகிறார் என்பதை சிறிது விலாவாரியாகச் சிந்தித்தால் பல சுவையான விடயங்கள் வெளிவருகிறது. "நோய்க்கும் பார் - பேய்க்கும் பார்" என்றஜனரஞ்சகவார்த்தையை அநேகர் அறிவார்கள். நோய்க்கு வைத்தியர், பேய்க்கு....?

இங்கேதான் விஷயமே தொடங்குகிறது. பேயோட்டி, பூசாரி, சாமி, சுவாமி, சாமியார் என்று.... இதிலும் கூட வைத்தியர் தகைமை போன்ற பல தரப்புகள் உண்டு. பேய்களின் தன்மைகளைப் பொறுத்து இந்த நபர்களை நாம் தேர்ந்தெடுக்கலாம்.

இதில் இன்னொரு முக்கிய விடயம், எல்லா மதங்களிலும் காணப்படும் ஒற்றுமை நிலை! இங்கே நாம் இந்து, இஸ்லாம், கிறிஸ்துவ, பௌத்த பேய்களையும், பிசாசு, முனிகளையும் பற்றி மட்டும் பார்க்கலாம்.

களுகுமாரயா - மாசோனா, ரீரியகா, மல பெரேத்தயா என்பன சிங்கள பிரபல பேய்களாயும், இந்துக்களுக்கு மோகினி, கொள்ளிவாய் பிசாசு, ரத்தக் காட்டேறி, சங்கிலிக் கறுப்பன், ரோத முனி போன்ற பலரும், இஸ்லாமில் பொதுவாக சைத்தானும் அவரது உதவியாளர்களும், கிறிஸ்தவத்தில் அசுத்த ஆவி, சாத்தான் போன்றவர்களும் அவர்களது அலுவலகத்தாரும் நம்மிடையே அவ்வப்போது வந்து ஜாதி, மத பேதமின்றி ஆட்டுவிக்கிறார்கள். நம்மை அடையாள அட்டை கேட்காமல் பிடித்துப் போவதும் இவர்களே!

இவர்களால் பீடிக்கப்பட்டவர்களை சுகமாக்குவது, யாரால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவது, வீடுகள் கட்டுமுன் அங்குள்ள பேய்களை விரட்டுவது, பகைவர்களை சம்ஹாரம் செய்வது (சூனியம்), பிடித்தமான பெண்ணையோ, ஆணையோ வசியம் செய்வது, குழந்தை இல்லாதவர்களுக்கு பிள்ளை வரம் கொடுப்பது, மேலும் என்னென்ன பிரச்சினைகள் ஒரு மனிதனுக்கு உண்டோ அத்தனை பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பது இந்தச் சாமியார்களின் மகத்தான சேவை. வழக்குகளில் வெல்ல வக்கீலில்லாமல் வழிவகைசெய்வதும், படிக்காமலேயே பரீட்சையில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சித்தி பெற வைப்பதும் இவர்களின் தலையாய பணிகளில் மற்றும் சில.

நம் நாட்டில் மலையாள சாமியார்களுக்கு மிக அதிக கிராக்கி உண்டு. ஏனெனில் இவர்களிடம் மட்டுமே இந்திய மலையாள பகவதி போன்ற ஸ்பெஷலிஸ்ட்டுகள் பலரை வரவழைக்க விசா போன்றவை இருப்பதாலும், இவ்வாறு வரவழைக்கப்படும் தேவர்களுக்கு எந்த விதமான கொடூரப் பேய்களையும் விரட்டிவிட வல்லமை இருப்பதாலுமேயாகும்.

அநேகமான சாமியார்கள் நீண்ட ஜடாமுடி, சிவந்த கண்கள் (இது வேறு காரணிகளால் ஏற்படுவது), கண்ணைப் பறிக்கும் தீவிர நிறங்களிலான ஆடைகள், பெரிய பொட்டுகள், மாலைகள் போன்ற ஆடை அலங்காரங்களுடனும், நன்றாக உரத்துப் பேசவும், அவர்களைக் காண வருபவர்களை நோக்கி அலட்சிய பார்வைகள், திடீர் திடீர் வசனங்கள் வீசக் கூடிய திறமையுடையவர்களாகவும் இருக்கிறார்கள்.

இவர்களின் காண்போர் கூடம், வரவேற்பறை, பிரத்தியேக அறை (விசேட சிகிச்சைக்கானது) போன்றவை, பல வாசனைத் திரவியங்கள், கண்ணைப் பறிக்கும் கொடூரமான பாவனைகளுடனான பல மதத்து தெய்வப் படங்களுடனும், அவசியமானால் யாராவது பிரபல அரசியல் பிரமுகரோடு சாமியார் எடுத்துக் கொண்ட புகைப் படங்களுடனும் காணப்படும்.

சிலர் விதிவிலக்காக காவியுடையுடனும் கூட காணப்படுவர். இவைகள் அவர்களை நாடி வருபவர்களின் தரம், தங்கியுள்ள இடத்தின் சுற்றாடலைப் பொறுத்து மாறுபடுவதுண்டு.

# சாமியார்களும்... சைகலோஜியும்!

நமது குறையை எப்படி நாம் கூறாமலேயே கண்டுபிடிக்கின்றார்கள்? என்றெல்லாம் நாம் வியந்து அவர்களையே நமது அனைத்து விடயங்களின் ஆலோசகர்களாகவும், காப்பாளர்களாகவும் ஆக்கிக் கொள்கிறோம்.

ஒரு இளம் பெண் முகத்தில் சோகத்துடனும், அச்சத்துடனும் வருகிறாள். அவருடன் கூடவே அவள் தாயும் வருகிறாள். சாமியார் ஒரு தீட்சண்யமான பார்வையை வீசுகிறார். ஒரு அலட்சிய சிரிப்பு. பார்க்கிறார், பார்க்கிறார்... இவர்களையல்ல - கண்ணை மூடிக்கொண்டு எதையோ அந்தரத்தில் தேடுவது போல நெற்றியைச் சுருக்கிச் சொல்கிறார்.

"ம்.... எத்தனை காலமாய்....?" (எதற்கும் பொருந்தும் கேள்வி) எனும் அவரது கேள்விக்கு அநேகமான பக்த கோடிகள் - தங்களது பதிலிலேயே, தங்களையும் அறியாமல் அவர்களது பிரச்சினையை வெளிக்காட்டி விடுவதுண்டு. இப்படியான ஒரு சூழ்நிலையில், இப்படியான ஒரு கேள்விக்கு, சாமியாரின் பக்தர் என்ற முறையிலோ, அவரிடம் முழு நம்பிக்கை கொண்டு அவரைக் காண வந்த புது பக்தர் என்ற முறையிலோ எவ்வாறான பதிலை அளிக்க முடியும்? சிந்தித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.



இவ்வாறான பதிலின் பிறகு, நமது பிரச்சினையின் ஒரு முனையை இறுக்கமாகப் பற்றிக் கொண்ட சாமியார் அடுத்த வைத்தியமாக, ஒன்று, ஒரு தாயத்தைத் தற்காலிகமாகக் கட்டி விட்டு (சிலபல ஆரம்ப வித்தைகளின் பின்) முக்கிய பூஜைக்கான நாட்கள், பொருள் போன்றவற்றைத் தனது உதவியாளர்களிடம் கேட்டு, அதன்படி அந்த நாளில் வரும்படி கூறி அனுப்புவதுண்டு. கூடவே அந்தப் பெண்ணின் பிரச்சினைக்கான கிரகத்தைப் பற்றியோ, பேயைப் பற்றியோ (இவை மாறுபடலாம்) அவர்களுக்கு சாடைமாடையாகக் கூறியும் அனுப்புவதுண்டு.

இதன் பின்னரான சிகிச்சை முறை அந்த பெண்ணின் குணாம்சம், தேவைகள் போன்றவற்றைப் பொறுத்து அமையும். தனது சிகிச்சைக்கு ஒருவிதமான பலனும் அந்தப் பெண்ணிடமிருந்து கிடைக்காவிட்டால் சாமியாரின் அணுகுமுறையும் சிகிச்சையும் மாறி விடும். இது மிகக் கொடூரமான சிகிச்சை முறையாகக் கூட அமையலாம்.

மேலும் -

புதைக்கப்பட்ட சூனியங்களைபுதைக்கப்பட்ட இடத்தினின்றும் சரியாகச் சென்று தோண்டி எடுப்பதுபோன்ற அதிசயங்களையும் நிகழ்த்திக் காட்ட, இச்சாமியார்கள் தங்களது அந்தரங்க அடியாட்களின் மூலமாக ஏற்கனவே புதைத்து, மீட்டெடுத்தும் நம்மை ரட்சிப்பதுண்டு. அநேகமாக மீட்டெடுக்கும் சூனியங்கள் ஊசி, நூல், முட்டை, பொம்மை போன்ற பதுமைகள், தகடுகள், தலைமயிர், நகம், தாயத்துகள் போன்ற வகையறாக்களாக இருக்கும்.

வசியமாக்கப்பட வேண்டியவர்களின் உணவிலோ பானங்களிலோ கலந்து குடிக்க மருந்து, எண்ணெய் போன்றவைகளும், தாயத்துகள் போன்றவைகளும் இவர்களது விநியோக சேவையிலுண்டு. வியாபாரம் மென்மேலும் சிறக்க, (சம்பந்தப்பட்டவர் அலுவலகத்துக்கே போகாமல்

**அம்மணச் சாமியாரின் ஆசிக்காக அம்மையர்கள் கியூவில்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் சுற்றித் திரிந்தாலும் கூட பொருள் பெருக) சிறப்புத் தகடுகள் பல டிசைன்களிலும் பாஷைகளிலும் எழுதப்பட்டு அழகிய பிரேம்களில் மாட்டிவைக்கவும் தயாரிக்கப்படுவதுண்டு.

வேல், சூலாயுதம், மயிலிறகு, புனித நீர், இளநீர், நூல், அரிசி, கோழி, வாசனைத் திரவியங்கள், பழங்கள், தென்னங் குருத்தோலை, பால், பலகாரம் போன்றவை இவர்களின் சிகிச்சைக்கு அத்தியாவசியமான பொருட்களில் அநேகமாக இடம்பிடிப்பவை.

சில பேய்களை குடங்களில், செம்புகளில் அடைத்து (உள்ளே எலியிருப்பது வேறு விடயம்) 'கீச் மூச்' என்ற சத்தத்தோடு ஆறு, கடல் போன்ற திரும்பக் கிடைக்காத மார்க்கங்களில் வீசுவது, மரங்களில் பிசாசுகளைக் கட்டி வைப்பது போன்ற நிகழ்வுகளும் உண்டு. அநேகமாக இவ்வித துர் தேவதைகள் பெரிய ஆலமரங்கள், மனித நடமாட்டமில்லாத முச்சந்திகளில் மட்டுமே விரும்பி வாழ்வதாக இவர்களும், இவர்களதுகுழுவும் அடித்துச் சொல்வர். இவ்விதமான இடங்கள் இவர்களது பல செய்முறைகளுக்கு ஏதுவானதாகவும் அமைந்து விடுவதுண்டு.

ஃபாக்ஸ, தொலைபேசி, கம்ப்யூட்டர், விமான தபால் சேவை போன்ற மார்க்கங்களாலும் இங்கிருந்து வெளிநாடுகளுக்குப் போன பேய்களையும் வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்த பேய்களையும் துரத்தியடிப்பதோடு பிணிகளையும் நீக்குவதுநாகரிகநவீனசாமியார்களின் நிகழ்கால முன்னேற்றங்களிலொன்று. சில சாமியார்கள் இன்டர்நெட், வெப் போன்ற இன்றைய அதிநவீன வசதிகளையும் தங்களது மக்கள் சேவைக்காக தற்போது பாவிக்கின்றார்கள்.

இவ்வாறு பலரது பிரச்சினைகள், பிணிகளை நீக்கி, அனுக்கிரஹம் புரிவதால், அரசாங்க வரிகள் கூட இவர்களிடமிருந்து அறவிடப்படுவதில்லை. அநேகமான பெற்றோர் இவ்வாறான சாமியார்களிடம் தங்களது இளம் வயதுப் பெண்களை அருள்பாலிப்பதற்காக அனுப்பி ஆசிகள் பெற வைப்பதற்கும் தயங்குவதில்லை.


ஜின் வாசல், பரிசுத்த ஜின் ஆவிகள் என்ற புனித ஆவிகள் மூலம் பல இஸ்லாமிய சாமியார்களும் இவ்வித சேவையைபாரம்பரியமாகச் செய்து வருகின்றார்கள்.

கிறிஸ்துவ பாதிரிமார்களில் - சிலர் இவற்றை "எக்ஸோசிசம்" (*Exocism*) என்ற பெயரில் புனித நீர், ஜெபம் போன்றவற்றால் மேற்கொள்வதுண்டு. ஆனாலும் முன்னர் குறிப்பிட்டதுபோல இந்த பிசாசுகள் ஜாதி மத பேதமின்றி தொற்றிக்கொள்ளக் கூடியதால் எந்தப் பேய் எந்த மதத்தைச் சார்ந்ததோ அந்தந்த மதச் சாமியார்களை நாடுவது நமது வழக்கமாகிவிட்டது.

ஒரு நல்ல மனோதத்துவ நிபுணரிடம் இப்படிப்பட்ட பேய்மனிதர்களைக் காட்டாமை அவரவர் இஷ்டமெனக் கொள்வதா அல்லது அறியாமை எனக் கொள்வதா?

பேய்களை மொத்த வியாபார முறையில் (*Whole Sale basis*) விரட்டும் காரியமும் ஒரு இலங்கைத் தேவாலயத்தில் அப்போதிருந்த பாதிரியாரின் தலைமையில் நடைபெற்று வந்தது.

இன்னொரு வகையான துர்ஆவிகள் இறந்தவர்களினுடையது. இறந்தவர்கள் வாழ்பவர்களை பீடிப்பதும், சில இறந்தவர்கள் சாமியார்களின் மூலமாக வந்து பல எதிர்கால நிகழ்வுகளை முன்னரே கூறுவதும், தமது நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றக் கேட்பதும் உண்டு.



## ஒரு 'பேய் விரட்டு' படலம்

ஒரு ஆஜானுபாகுவான ஆடவருக்கு ஒரு புதுவிதமான பேய் பிடித்துவிட்டது. வேலை வெட்டியில்லாமல் வீட்டிலிருந்த இவரை ஒரு இரவில் பிடித்த பேய் - எவ்வளவுதான் சமைத்தாலும் அவ்வளவையும் அவர் சாப்பிட்டுவிடும்படி செய்துவிட்டது. அப்போது அங்கிருந்த சாமியாரின் கூற்றின்படி சாப்பாடு போடுவது பேய்க்கே தவிர அந்த மனிதருக்கல்ல.

கடைசியில் இரண்டு வாரமாக நன்றாக உண்டுமகிழ்ந்த அந்தப் பேய் (ஆடவர்) மிகத் திடகாத்திரமாகவும், ஆவேசத்துடனும் அவ்வூர்ப் பெரிய மனிதர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று சாப்பாடு கேட்டது. பெரிய மனிதர் சற்றுச் சிந்தித்துவிட்டு "ஆஹா தாராளமாகத் தருகிறேன், சற்றுப் பொறு" என்றார். பின் ஒரு அரை மூடை அரிசியை சோறாக்கும்படி தமது வீட்டிலுள்ளவர்களுக்கு உத்தரவிட்டார்.

சமையல் முடிந்ததும் பேய் பிடித்தவனை இருத்திவிட்டு சமைத்த அவ்வளவு சோறையும் அவன் முன் படைத்து உண்ணும்படி கூறினார். அவனோ 'பேய்ப்பசி'யுடன் உண்ணத் தொடங்கினான். ஆனால் அரை மூடை சோற்றை யாரால் உண்ண முடியும்? முடிந்தவரை உண்டுவிட்டு நிறுத்தினான். பெரியவர் அங்கேயே ஒரு பாயைப் போட்டு அதிலேயே படுக்கச் சொன்னார்.

அவன் படுத்து எழுந்ததும் மறுபடி உண்ணச் சொன்னார். அவனால் முடியவில்லை. "சரி உனக்குப்பிடித்திருந்தபேய் ஓடிவிட்டது, போ" என்று அவனை விரட்டிவிட்டார். அதன் பின் அவன் குணமானவனாக பழையபடி சாதாரணமாக நடக்கலானான். ஊரார், பெரியவர் சொல்லுக்குப் பேய் அடங்கி விட்டதாக வியந்தனர்.

ஆனால் உண்மையில் விடயம் என்னவெனில் தனது அண்ணன் வீட்டிலிருந்து மாட்டுக்குப் புல் மட்டும் அறுத்துப் போகும் அந்த உண்டு பருத்த மனிதனுக்கு வேலையில்லை. அதனால் கையில் பணம் இல்லை. தனது அண்ணியிடமிருந்து போதிய உணவும் கிடைப்பதில்லை. அதனால் அவனுக்கு ஏற்படும் அகோரப் பசியைத் தீர்க்க வழி கிடைக்கவில்லை. இதுவே பேய் பிடித்ததன் மர்மம்.

பெரியவர் இதைப் புரிந்துகொண்டு சாதுரியமாக அவனை அடக்கி அனுப்பினார்.

அநேகமான தோட்டப் பகுதிகளில் இவற்றுக்கெல்லாம் *Mobile Service*உம் உண்டு. எந்த இடத்தில் பேய், பிணியகற்றல் அவசியமோ அந்த வீட்டுக்கே சாமியார்கள் போய் நாள், வாரக் கணக்கில் தங்கி தங்கள் வேலையை செய்வதுண்டு. இவர்களை அழைத்து வரும் நபர் அந்த வீட்டிலுள்ள பிரச்சினையை ஏற்கனவே அறிந்து சாமியாரிடம் கூறி விடுவதால், லாபத்தில் அவருக்கான செய்தித்திரட்டல் தொகை அந்த சாமியாரால் தரப்பட்டுவிடும்.

சிலசாமியார்களிடம்*Translater* மூலமாகவே தகவல்கள் பெற முடியும். ஏனெனில் அவர்களது கீர்த்தனைகள் அநேகமாக விளங்காத சந்தத்திலேயே ஒலிப்பதுண்டு.

ஆரம்ப நாட்களில் மனிதர்கள் பண்பாட்டு கலாசார ரீதியில் நாகரீகமடைந்திராத கட்டத்தில், நல்ல சிந்தனா சக்தியும், கற்பனை வளமும் மிக்க சிலர் இறைவன், தேவ, தேவதைகள், இயற்கைச் சக்திகள் இவற்றோடு தொடர்புடையவர்களாகத் தம்மைக் கூறிக்கொண்டு மனிதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடையே காணப்பட்ட குறைகள், குற்றங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை சீர்படுத்தத் தலைப்பட்டனர்.

வளர்ச்சியடையாத அன்றைய மனித மனமானது தங்களது அறிவிற்கு எட்டாத சக்திகளிடம் ஒரு பய உணர்வைக் கொண்டிருந்தமை இந்த கட்டுப்பாட்டு முயற்சிக்கு மிக்க உதவியாக அமைந்திருந்தது.

சாதாரணமாக நீர், நெருப்பு, காற்று போன்ற இயற்கைச் சக்திகளை கட்டுப்படுத்தும் புலமைகள் அந்த காலகட்டத்தில் மனிதர்களிடத்தில் இருக்கவில்லை.

இதுவேதான் இன்றும் நம்மிடையே பணமும், புகழும் மிக்க சாமியார்கள் எனும் ஒரு கூட்டத்தாரின் அடிப்படை மூலதனமாகி வெவ்வேறு கோலங்களிலும், வகையறாக்களிலும் மக்களிடை பிரயோகிக்கப்படுகிறது.

துக்கேற்றவாறு, மிக நாகரீகமான முறைகளில் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

உடுக்கை ஒலி, வேப்பமிலை, ஹோலி வோட்டர் எனப்படும் புனித நீர், சிலுவைக் குறிகள், நூல் கட்டும் முறைகள், உயிர்ப்பலிகள், பேயாடுதல், பேயோட்டுதல், நடு ஜாமப் பூசைகள் போன்ற பழைய முறைகள் ஆங்காங்கே சிற்சில மாற்றங்களோடு அழகுமயப்படுத்தப்பட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும், குளிரூட்டிய அறைகளிலும், மதுபான போதை வஸ்துகளுடனும், பாலியல் சல்லாபங்களுடனும் தற்போது மாற்றமடைந்திருக்கிறது.

பக்த கோடிகள் இந்த இறைவனின் தூதுக் குழுவினருக்கு பொன், பொருள், இடம், ஏன் மனைவிமார்களைக் கூட தாரை வார்த்துக் கொடுக்கவரிந்துகட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ரப்படுத்தி அதற்கு மேலும் பல அணுகுமுறைகளைப் புகுத்தி அதையே தமது புதிய மதத்தின் அடிப்படைத் தத்துவங்களாக மாற்றிக் கொள்வது இந்தச் சாமியார்களின் பொது வழிமுறையாகக் காணப்படுகிறது.

வெளிச்சத்துக்கு வரும் பெரும்பான்மையான லீலைகள் அங்கத்தவர்களின் மூலமாகத்தான் உலகுக்குத் தெரிய வந்திருக்கிறது.

ஒரு இரகசிய கெரில்லா இயக்கத்துக்குரிய இறுக்கமான இந்த ஸ்தாபனங்களின் இரகசியத் தன்மைக்கு-

விசுவாசம், பயம், மூட நம்பிக்கை, சத்தியங்காக்கும் உணர்வு, ஒரு வகைப் பிடிவாதம், வெறியுணர்வு ஆகியவை கலந்த ஒருவகை கூட்ட மனோவியல் செயற்பாடு (*Mob Phychology*) அடிப்படையாக அமைந்துள்ளது.



மனிதரின் மனோ ரீதியான நிறைகுறைகளை அறிந்து கொண்டு அதற்கேற்ப மந்திர, தந்திர மகிமைகளைக் காட்டும் இந்தச் சாமியார் குழுவினரின் ஜாலங்களை நாம் சிந்திக்க வேண்டியவர்களாகிறோம்.

எம்மிடையே நிலவிய குறைபாடுகளையோ சிலகட்டங்களில் நோய் நொடிகளைக் கூட நீக்க உதவிய இவர்களது அடிப்படை நோக்கம் நாளடைவில் பணத்துக்காகவும், பலப்பிரயோகத்துக்காகவும் மாற்றப்பட்டு மாறி இன்று அரசியல் ரீதியான பலாபலன்களுக்கும் ஏன் பாலியல் சுகங்களுக்காகவும் உருமாற்றம் பெற்று சமூக சீர்கேட்டுக்கு அந்தச் சமூகமே துணை போகும் ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இவர்களில் பலர் சிறுவர், பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம், அரசியல் துஷ்பிரயோகம், போதை மருந்து மற்றும் நிர்வாண ஆசிரமங்கள் போன்றவற்றின் உரிமையாளர்கள்.

தற்கால நவ நாகரீக சாமியார்களின் அணுகு முறைகளும், செயல்பாட்டு முறைகளும், காலத்

இவர்களின் போதனைகளைக் கேட்க கோடிக் கணக்கான பக்த கோடிகள் ஆங்காங்கே திரண்டு அவர்களின் ஆலோசனைப்படி தங்களதும் தங்கள் குடும்பத்தினதும் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்வது இன்று அனைத்துலக நாடுகளிலும் நடைபெறும் ஒரு நாகரிகமாகவே வளர்ச்சியடைந்துள்ளது.

ஒரு நாட்டில் புகழடைந்த ஒரு சாமியாராகப் பட்டவர் தனது தத்துவத்துக்காக ஒரு புது மதக் குழுவையே ஆரம்பிப்பதுண்டு. பல கோடி செலவில் தலைமை அலுவலகம், அங்கத்தவர்கள் என்று ஆரம்பித்து, அந்த ஸ்தாபனத்தின் கிளைகளை பல நாடுகளிலும் விஸ்தரித்து அதன் மூலம் தங்களது செல்வாக்கினை அதிகரித்துக் கொள்கிறார்கள். ஆசிரமங்களாக ஆரம்பிக்கப்படும் இத்தகைய சிகிச்சை நிலையங்கள் நாளடைவில் உலகளாவிய ஸ்தாபனமாக வளர்ச்சியடைகிறது.

தத்தம் மதத்தில் இலேசாகவும், சுகத்தோடும் பின்பற்றத்தகுந்த சில போதனைகளை விஸ்தா

பல விபரீத நிகழ்வுகள் நடந்து முடிந்த பின்பு தான் தெரிய வருகின்றன. பெருந்தொகையானோர் கூட்டமாகத் தற்கொலை செய்து கொள்வது, பல கன்னியர்கள், குழந்தைகள் பலியிடப்படுவது போன்ற சம்பவங்கள் எவருக்கும் தெரியாமல் நிகழ்ந்தேறிய பின்னர் தான் எம்மை அதிர்ச்சியில் ஆழ்த்துகின்றன. இத்தகைய போலி மத இயக்கங்கள் போதைப் பொருள் மன்னர்கள், அரசியல்வாதிகள் போன்றோருக்குத் துணை புரிவதால் அந்த அரசியல் மற்றும் பணபலச் செல்வாக்குகளால் பொலீசாரின் தலையீடு இன்றிக் காப்பாற்றப்படுகின்றனர்.

பலியிடப்பட்ட கோழிகள் சாமியாரின் சமையலறையில் கறியாக மாறுவதை வேண்டுமானால் ஒரு சிறிய விடயமாகக் கருதி ஒதுக்கி விடலாம். ஆனால் பலியாடுகளாக அறுக்கப்பட்ட எத்தனையோ பக்த, பக்தைகளையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் காப்பாற்ற எங்கே... யார் இருக்கிறார்கள். கொஞ்சம் சிந்திப்போம்....●

- மலைஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நூற்றாண்டுப் புரட்சிகள்

## எழுச்சியும் வீழ்ச்சியும்



# வெற்றிக்கு வழிசமைத்த சீன நெடும் பயணம் 2

புரட்சிதாஸ்

சீனா ஒரு விசாலமான நாடாகும். வாழும் மக்களின் எண்ணிக்கை உலகசனத்தொகையின் சுமார் 1/5 பங்காகும்.

அக்கோடிக்கணக்கான மக்கள் கூட்டமானது லட்சக்கணக்கான சிறு கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். அதேவேளை ஊசி போன்று வானுயர்ந்து நிற்கும் மலைகளினால் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட்டு தனிமைப்பட்டிருக்கும் கிராமங்களாதலால் சீனச் சமூகமானதுமிகச் சிக்கலானகலாசார நடைமுறைகளுடையதாக இருந்தது.

அத்துடன் பல்வேறு விதமான கால நிலைகளும் அதன் காரணமாக அப்பிரதேசங்களில் புழக்கத்தில் இருந்த நடைமுறை வழக்குகளும் சீனா ஒரு சிக்கல் நிறைந்த நாடு என்பதைப் புரிந்து கொள்வதற்கான ஆதாரங்களாகும்.

ஒரு சோஷலிசப் புரட்சிக்காக சீன சமூகத்தைத் தயார்ப்படுத்துகின்றபோதுசரியானஇலக்கை நோக்கி அவர்களை வழிநடத்துவதும், ஒன்றிலிருந்து ஒன்று விலகி தொலை தூரங்களில் அமைந்திருக்கும் கிராமங்களுக்கிடையேதொடர்புகளைவைத்திருப்பதும்(Communication) சீனப் புரட்சியாளர்களுக்குப் பாரிய சவாலாக அமைந்தது. உலகத்தில் வேறு எந்த புரட்சிகர இயக்கத்திற்கும் இல்லாத புதிய சவால்களை சீனப் புரட்சியாளர்கள் முகம் கொடுக்க நேர்ந்தது.

ஆனாலும் சிக்கல் நிறைந்த இச் சீன சமூகத்தை ஓரணியின் கீழ் ஐக்கியப்படுத்தி "புதியதொரு சமூக அமைப்பைக் கட்டி எழுப்புவது" என்னும் இலக்கைநோக்கிவழிநடாத்துவதற்கு அவசியமான சில காரணிகள் சீனாவுக்குள்ளேயே இருந்தன.

"புரட்சியாளர்கள் தாம் கால் பதித்து நிற்கும் மண்ணிலிருந்துகற்றுக்கொள்ளவேண்டும்"என்பதைசீனப்புரட்சியாளர்களும்நன்றாகப்புரிந்து கொண்டிருந்தனர்.

அக்காரணிகளுள் முக்கியமானது, நூற்றுக் கணக்கானவருடங்களுக்கு முன்பிருந்துசியாங் கை ஷேக் இன் ஆட்சிக் காலம் வரை தொடர்ச்சியாக மக்கள் மீது சுமத்தப்பட்டு வந்த தாங்கொணா வரிச் சுமையாகும். அரசாங்கத்திற்கு, பிரதேச ரீதியான நிலவுடமைகக்காரர்களுக்கு, கிராமியநிலப்பிரபுக்களுக்குஎன்எல்லோராலும் வரிச்சுமை சுமத்தப்பட்டதால் ஒவ்வொரு சாதாரண குடிமகனும் இவ்வழுத்தத்திற்கு முகம் கொடுத்தே வாழவேண்டியிருந்தது.

மற்றொரு முக்கிய காரணி, பாரம்பரியமாக சீனாவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கலாசார சம்பிரதாயங்களாகும்.

சீனாவிலே ஒரு பேச்சு வழக்குப் பழமொழியுண்டு "பண்ணையிலே இறைச்சிச்காக வளர்க்கும் பன்றியும் பெண்ணும் ஒன்று". அங்கிருந்த சீனஅதிபதிகள்எந்தவொருபெண்ணையும்தாம் நினைத்த மாதிரிப் பாவிக்க முடியும். அதைப் பற்றிக் கேள்வி கேட்பதற்கு தந்தையோ, கணவனோ, பிள்ளையோ எவருக்குமே உரிமை கிடையாது.

இக்கொடூர நிலைமை 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரைசீனாவில்நடைமுறையில்இருந்தது.இதனால்சீனஅரசுகள்அம்மக்களின்பாரிய அதிருப்தியைச் சம்பாதித்திருந்தன.

இக்கொடிய நிலைமைக்கு முகம் கொடுத்த மக்கள், சீனப் புரட்சியாளர்களின் வழிநடத்தலின் போது, நிலப் பிரபுக்களை ஈவிரக்கமற்ற முறையில் குடும்பத்தோடு அழித்து விடுதல் என்னும் நடைமுறையில் இறங்கினர்.

இவற்றைவிட, சீனப் புரட்சியாளர்களுக்கு சகல சீன சமூகங்களையும் விழித்துப் பேசக்கூடிய ஒரு பொது மொழி இருந்தமையும் தனித்துவமான விடயமாகும். (சீன மண்டரிங் அரிச்சுவடியானது பிரதேச ரீதியாக சிறு சிறு மாற்றங்களுடன்பாவிக்கப்பட்டாலும்கூட திபேத்தியமக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சீனர்களாலும் புரிந்துகொள்ளக்கூடிய மொழியாகும்)

சீனாவில் இருந்த வறுமை புரட்சிக்கான ஒரு முக்கிய காரணமென நாம் எடுத்துக் கொண்டாலும், மாக்ஸிய சிந்தனையின்படி சோஷலிசப் புரட்சிக்கான அடிப்படையெனக் கூறப்படும் முதலாளித்துவ தொழிலாளி வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாடென்பது சீனப் புரட்சியின் போது முக்கிய காரணியாக அமையவில்லை.

இதன்படி டிங் தாங் சாங் எனும் இடத்தில் அமைக்கப்பட்ட முதலாவது அடிப்படைத் தளமானது புதிய அனுபவமாக இருந்தபோதும், சீன மக்களால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ரஷ்யப் புரட்சியாளர்கள் தமது நாட்டில் அறிமுகப்படுத்திய 'சோவியத் சபைகள்' என்னும் முளையிலிருந்து சீனர்கள் உருவாக்கிய இவ் 'அடிப்படைத் தள முகாம்' என்பது முற்று முழுதாக வேறுபட்டிருந்தது.

(சோவியத் சபைகள் சட்டபூர்வமான அமைப்புகளாக உருவாக்கப்பட்டது. ஆனால் சீன தள முகாம் முறையும் சட்ட விரோத கெரில்லா இராணுவ வலயங்கள் போன்ற ஒரு வடிவமாகும்).

இத்தள முகாமானது முன்னர் குறிப்பிட்டது போல் கிராமியநிலச் சுவான்தார்களைக் கொன்றொழிப்பதில் ஆரம்பித்து பின்னர் பிரதேச ரீதியானபிரபுக்கள், பாரியநிலவுடைமைக்காரர்கள் என வியாபித்தது.

1850களில் பிரான்ஸில் அரசியல் தலைவர்களைக் கொன்றொழிப்பதன் மூலம் புரட்சிக்கு



தலைவர் மாவோ

முயன்ற **ஒகஸ்டஸ பகுனின்** என்பவரின் செயற்பாட்டை கால் மார்க்ஸ் **ஒகஸ்டஸ் இஸம்** எனக் கடுமையாகச் சாடினார். அக் கொலை அரசியல் முறைமையானது சீனப் புரட்சியின்போது மிக வெற்றிகரமான ஒரு உபாயமாகப் பாவிக்கப்பட்டது.

சீனப் புரட்சியாளர்கள் இந்த நிலவுடமைக்காரர்களைக் கொன்றொழிப்பதைத் தவிர வேறு சுமுகமான முறையில் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்க முடியாதென்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சீனப் புரட்சியாளர்கள் ஒருபுறம் இந்நிலவுடைமைக்காரர்களைக் கொன்றொழித்து மக்களை வரிச் சுமையிலிருந்தும் பிரபுக்களின் கொடிய ஆட்சியிலிருந்தும் விடுவித்தனர்.

அதே வேளை தமது தள முகாம்களில் தங்கி நின்று ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக போராடுவதற்கு சியாங் கை ஷேக் என்னும் சீனச் சர்வாதிகாரிக்கு இடமளித்தனர். அதன் பலனாக சியாங் கை ஷேக் பின்னர் புரட்சியாளர்களின் செம்படை மீது தொடுத்த கொடிய தாக்குதல்களுக்கும் முகங்கொடுத்தனர்.

இவ்வாறுபல அனுபவங்களைப் பெற்றுநன்கு பதப்பட்டிருந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியிடமும், செம்படையிடமும் ஆட்சியதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற உணர்வு சீன மக்களிடையே வேரூன்றியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகையில் சர்வாதிகாரி சியாங் கை ஷேக் கூட இதனை புரிந்திருந்தான் என்பதிலும் வியப்பில்லை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியோடு தொடர்பு வைத்திருந்த தொழிற் சங்கங்கள், கல்விமான்கள், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் எனப் பலரும் புரட்சியாளர்களுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தனர். மறுபுறம் இதைக் கண்ட சியாங் கை ஷேக் சாதாரண மக்களை லட்சக் கணக்கில் அழித்தொழித்த நடவடிக்கையும் புரட்சியாளர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது.

சீனக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக தென் சீனாவிலிருந்து சியாங் கை ஷேக்கினால் ஆரம்பிக்கப்பட்ட கொடிய யுத்தமானது மெது மெதுவாக முன்னேறிக் கொண்டிருக்கையிலே புரட்சியாளர்கள் தமது கைவசமிருந்த பிரதேசங்களில் புதிய உத்தியைச் செயற்படுத்தினர்.

அதாவது சியாங் கை ஷேக் மீண்டும் அப்பிரதேசங்களைக் கைப்பற்றினாலும் கூட தனது அதிகாரத்தை அப்பிரதேசங்களில் நிலைநிறுத்த முடியாதவாறு நிலப் பிரபுக்கள் எவரையும் விட்டு வைக்காமல் பூண்டோடு அழித்தொழித்தனர். நிலவுடைமைக்காரர்


செள என் லாய்

களிடமிருந்து பறித்த நிலங்களை மக்களுக்குப் பகிர்ந்தளித்தனர். சீனப் புரட்சித் தலைவர்களான பென் தே ஹூ ஆங் - கா ஒ காங் எனும் தலைவர்களால் சீனாவின் வடமேற்குப் பிராந்தியங்களில் உருவாக்கப்பட்டிருந்த தள முகாம்கள் மிகப் பலமானவையாக இருந்தன.

இப்படியே நீண்டு சென்ற இச் சிவில் யுத்தத்தின் போது இறுதியாக ஒரு முடிவெடுக்கும் நிலைக்கு சியாங் கை ஷேக் தள்ளப்பட்டார்.

கம்யூனிஸ்ட்டுகளை முற்றாக அழித்து விடுவது இயலாத காரியம். குறைந்தது தன் கைவசமுள்ள பிரதேசங்களையாவது பாதுகாத்துக் கொள்வது என்பதே அம்முடிவாகும்.

இதன்படி பரந்து கிடந்த செம்படையினரை ஒரே நேரத்தில் பல இடங்களில் தாக்கி, சிதறச் செய்து பலவீனப்படுத்துவதே அவரது உத்தியாக அமைந்தது.

அப்போது கம்யூனிஸ்ட்டுகளுக்கு உதவினார்கள் ஆதரித்தார்கள் என்ற காரணங்களுக்காக அப்பாவிச் சீன கிராம மக்கள் மீது மோசமான கொலை, கொள்ளை, சித்திரவதை போன்றவற்றை சியாங் கை ஷேக்கின் குவோமிங்தாங் இராணுவம் கட்டவிழ்த்துவிட்டது.


புரட்சிக்கு விசுவாசம்

கட்சியை ஆதரித்த சாதாரண அப்பாவி மக்கள் தமது கண்களுக்கு முன்னாலேயே ஆயிரக் கணக்கில் குவோமிங்தாங் இராணுவத்தினரால் அழிக்கப்படுவது கண்டு, முறையான நவீன இராணுவப் பயிற்சி ஏதுமற்ற கம்யூனிஸ்ட்களின் செம்படையானது செய்வதறியாது திகைத்து நின்றது. இராணுவ ரீதியாக பலவீனப்பட்டதுடன், தாக்குதல்களின் பின்னர் அழிந்து போன அப்பிரதேசங்களில் தோன்றிய கடுமையான உணவுப் பஞ்சம், மோசமானதொற்றுநோய் பரவுகைகளுக்கு முகம் கொடுக்க முடியாது செம்படை நிலைதடுமாறியது. கட்சியோடு மிக நெருக்கமாக இருந்த தோழர்கள் கூட கட்சியை விட்டு விலகிச் செல்வதை மாவோ சேதுங் கண்ணுற்றார். அவருடைய மூன்றாவது மனைவியும் கூட இக்கொடுமையான சூழ்நிலைக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் இறந்து போனார்.

மிகப்பெரிய சனத்தொகையைக் கொண்ட நாடானாலும் கூட பதினைந்து இலட்சத்துக்கு மேற்பட்ட தனது கட்சி அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் இழந்ததனால் கம்யூனிஸ்ட் கட்சியின் மனோ ரீதியான பாதிப்பு மிகக் கடுமையானதாக இருந்தது. மீண்டும் மீண்டும் தனது ஆன்ம பலத்தை உயர்த்திக் கொள்வதைத் தவிர மாவோ சேதுங்கிற்கு வேறு வழியேதும் இருக்கவில்லை.

சீனப் புரட்சி ஏற்படுவதற்கு வரலாற்றினால் தேவையான சூழ்நிலை உருவாக்கிக் கொடுக்கப்பட்டதை போலவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் செம்படையும் தமது போராட்டத்தை வழிநடத்துவதற்கென அசையாத உறுதி மிக்க பல தலைவர்களைத் தானே உருவாக்கிக் கொண்டது. அதில் முதன்மையானவர் தலைவர் மாவோ சேதுங்.

உயர் வர்க்கக் குடும்பத்தில் பிறந்தவராயினும் பாடசாலை நாட்களில் இருந்தே முற்போக்கான எண்ணங்களைக் கொண்டிருந்த செள என் லாய் மற்றொருவர். பிரான்சில் உயர்கல்வி கற்றபோது பிரெஞ்சு கம்யூனிஸ்ட்டுகளோடு தொடர்புகொண்டு பணியாற்றிய செள என் லாய் சீனாவுக்குத் திரும்பியதும் சீனகம்யூனிஸ்ட் கட்சியோடு இணைந்துகொண்டார். சிறந்த புத்திஜீவியான செள என் லாய் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குள் மாக்ஸிய சித்தாந்தத்தை பரப்பியதில் முதன்மையானவர் எனக் கூறலாம்.

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குள் கல்விமான்களும் இலக்கியவாதிகளும் கவிஞர்களும் பெருந்தொகையாக வர ஆரம்பித்ததே செள என் லாயின் வருகையின் பின்புதான். அதேவேளை சியாங் கை சேக்கினுடைய குவோ மிங் தாங் இராணுவத்திலிருந்த அதிசிறந்த தளபதியான சூட்டே (மார்ஷல் சூட்டே) என்பவரும் செம்படையில் இணைந்து கொண்டார். செம்படையை மீண்டும் கட்டியெழுப்பி வெற்றியை நோக்கி வழிநடத்தியதில் சூட்டேயின் பணி மிகப் பாரியது எனலாம்.

சீனச் செம்படையின் பின்வாங்கிச் செல்லும் படலம் தென் சீனாவில் ஆரம்பித்தது. 7 வருடங்களாக தொடர்ந்து பின்வாங்கிச் சென்ற தூரம் 9000 கிலோ மீட்டர்களுக்கு மேலாகும். மிக மோசமான காலநிலைகளுக்கு முகம் கொடுத்து பசிபட்டினிகளைத் தாங்கி நோய் நொடிகளுக்கு ஆளாகி பலர் உயிர் இழந்தது போன்ற கொடிய அனுபவத்தின் பின் சீனச் செம்படை மிகப் பலவீனப்பட்டுப் போயிருந்தது.

ஆனால் சீனச் செம்படையைத் தொடர்ந்து துரத்தித் திரிந்த குவோ மிங் தாங் இராணுவத்தின் நிலைமையும் அதே அளவு மோசமானதாகவே இருந்தது.

சீன வரலாற்றிலும் சீனக் கம்யூனிஸட் கட்சியின் வரலாறும் ஒரு வீர காவியமாக கருதப்படும் இந் நீண்ட பயணம் (Long march) சீன மக்களால் பெருமையாக நினைவுகூரப்படுகிறது. சீனப் புரட்சியின் வெற்றிப்பாதையின் ஆரம்பமே இந்த நீண்ட பயணம் என்னும் அரசியல் பாடத் தொடரைகற்றுத் தேறிய பின்பே நடைபெற்றது எனலாம். நலிவுற்றிருந்த செம்படையை மீண்டும் கட்டியெழுப்பும் பணி காவோ கேங், பென் தே ஹூ வாய் என்னும் இரண்டாம் மட்டத் தலைவர்களால் செய்யப் பட்டது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சண்டைக்கான சிறந்த பயிற்சி சண்டையே

சென்ற இதழில் குங்.ஃபூ கலையை பயிற்றுவிக்கத் தகுந்த நல்ல குரு ஒருவரின் தகைமைகளைப் பற்றிச் சொல்லியிருந்தேன். இப்போது அத்தகைய குருவும் அவருக்கும் மாணவர்களுக்கும் பயிற்சியின்போது உதவக்கூடிய சில ஆலோசனைகளைத் தரலாமெனக் கருதுகிறேன்.

பயிற்சிக்கான நெறிப்படுத்தல்கள் மாணவனின் உயரம், வேகம், சுறுசுறுப்பு, உடற்கட்டு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அவனுக்கு உரிய பிரத்தியேகமான முறையில் வழங்கப்படல் வேண்டும். ஒவ்வொரு விடயத்தையும் தனிப்பட்ட அவனுடன் தொடர்புபடுத்துவதனூடாக குரு மாணவனுடன் நெருக்கமான தொடர்பை உடனடியாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். மாணவனை அவனது ஆற்றல், பல வீனம், மனநிலை என்பவற்றை தனிப்பட அறிந்து வைத்திருக்க வேண்டும்.

சிலர் வேகமாக உதைக்கவல்லவர்கள். சிலர் மெதுவாகச் செய்பவர்கள். சிலர் முஷ்டிப் பிரயோகத்தில் திறமை கொண்டிருப்பர். சிலருக்கு மேலுடம்பு வளைந்து கொடுக்கும். சிலருக்கு கீழுடம்பு வளைந்து கொடுக்கும். சிலர் மெல்லியவர்கள், சிலர் பருமனானவர்கள், சிலர் உயரம், சிலர் குள்ளம்.

ஒரு உண்மையான குங்.ஃபூ குரு ஒவ்வொரு மாணவனுக்கும் அவனது சொந்தப் பலத்தை அவனே உணர வைத்து அதை உபயோகிக்கக் கற்றுக் கொடுப்பதுடன் அவனது பலஹீனங்களையும் அவனே கண்டுகொள்ள கற்றுக் கொடுப்பார். தன்னையே மற்ற மாணவர்களும் அச்சொட்டாக பிரதி செய்யும்படி பழக்க முற்படமாட்டார். ஏனெனில் ஒவ்வொருவரும் மற்றவர்களைவிட வித்தியாசப்பட்டவர்கள். தனித்தனி ஆற்றலும் பலஹீனங்களும் கொண்டவர்கள்.

## ஸ்பாரிங்

ஸ்பாரிங் என்று கூறப்படும் பயிற்சியின் கருத்து மற்றைய ஒருவனுடன் சேர்ந்து சண்டை பயிற்சி செய்வதாகும். ஒருவர் தனியே தான் மட்டும் பயிற்சிகள்



செய்வதால் உண்மையான சண்டையில் கச்சிதமாகச் செயற்படுவராக ஆகிவிட முடியாது. அதற்கு மற்றவரோடு மோதிப் பழக வேண்டும்.

இம்மோதல் ஸ்பாரிங் இல்லாமல் சண்டைக்குப் பழகுவது, நீருக்குள் இறங்காமல் நீந்தப் பழகுவது போன்றதே. ஸ்பாரிங் பயிற்சி மூலமே நீங்கள் கச்சிதமான காலக் கணக்கீட்டுடனும், ஒத்திசை (ரிதம்) உடனும் தாக்குதல் நடத்தப் பழக முடியும்.

நீங்களே அதிகம் உதைபட நேரும்போது நீங்கள் ஸ்பாரிங்கை விட்டுவிலகிவிட எத்தனிக்காதீர்கள். உங்கள் தேகம் தாக்குதல்களை வாங்கவும் பயில வேண்டும். அப்போதுதான் உண்மையான சண்டையிலும் உங்களால் சமாளிக்க முடியும். நீச்சலுக்குச் சிறந்த பயிற்சி நீந்துவதே. அதுபோல் சண்டைக்குச் சிறந்த பயிற்சி சண்டையிடுவதே.

ஆடம் பர ... ாக நிகழும் சில தற் காப் பு ... லை சண்டைப் போட்டிகளில் - உதாரணமாக கராட்டே

டுனமென்டுகள் போன்றவற்றில் சில சட்ட திட்டங்களால் போட்டியாளர்களுக்குப் பாதுகாப்பளிக்கிறார்கள்.

உடலிற்கு சில அங்குலங்களுக்கு முன்பாகவே தாக்குதலை நிறுத்திவிட வேண்டுமெனவும், முகம் போன்ற பகுதிகளில் தாக்கக் கூடாதெனவும் வரையறை போடுகிறார்கள். ஆனால் இத்தகைய வரையறைகள் போட்டியாளர்களின் தூரத்தை மதிப்பிடும் ஆற்றலைப் பாதிக்கிறது. இச்செயற்கைத்தனமான பாதுகாப்பு போட்டியாளனுக்கு தற்காப்பு உத்திகளான விலகுதல் (*Slip*) பதிதல் (*Duck*) தட்டிவிடுதல் (*Wave*) மற்றும் ஏனைய நுட்பங்களைக் கற்காமல் விட்டுவிட முடிகிறது.

அத்துடன் சக்திப் பிரயோகத்திலும் சரியான கட்டுப்பாடு செலுத்தக்கூடிய உண்மையான ஆற்றலை உங்களுக்கு ஏற்படுத்த இது உதவப் போவதில்லை.

எனவே இத்தகைய டுனமென்ட்களில் வெற்றியீட்டினாலும் அது ஒரு பெயரளவிலான வெற்றியாக இருக்குமேயன்றி, உண்மையான ஒரு சண்டையை எதிர்கொள்ளும்போது பயன்படும் என்று சொல்ல முடியாது. அதனால் போட்டிகளில் வெல்வதைவிட, உங்கள் ஆற்றலை வளப்படுத்துவது வேறொரு விடயமாகும்.

நீங்கள் 'ஸ்பாரிங்' பயிற்சியின் மூலம் முக்கியமாகப் பயிலும் ஒரு விடயம் பொறுமை. உங்கள் தாக்குதல் நிச்சயமாக எதிரியைத் தாக்கும் என்றும் உறுதிப்படுத்தாதவரை தாக்குதலைச் செலுத்த வேண்டாம். உரிய பலத்துடன் சரியான இலக்கில் உங்கள் தாக்குதல் படும் என்ற நிச்சயமின்றி சக்தியைவீணாக்க வேண்டாம். நீங்கள் உங்கள் சக்தியை முழுமையாகவும் உரிய வகையிலும் சரியான இலக்கில் பிரயோகிக்கத் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

சண்டையின்போது நீங்கள் மிருதுவான ஒரு நல்ல மனிதனாக நடந்துகொள்ள முடியாது. ஏனெனில் அது உங்கள் வாழ்வு சம்பந்தப்பட்டது. சண்டையென்பது வெறுமனே எதிரியின் பலஹீனமான இடத்தில் தாக்குவதல்ல. உடலில் பல தாக்குதல் இலக்குகள் உண்டு.

சண்டையில் காலக் கணக்கீடு அவசியம். எதிரியின் அசைவிற்கேற்ப எமது அசைவை நிகழ்த்தியபடி சரியான தருணத்தில் வெளியீடு செய்யப்படும் தாக்குதலென்பதே காலக் கணக்கீடென்பதன் பொருள்.

## தவறான பழக்கங்கள்

### திறந்த உடல்

சிலர் சண்டையின் ஆரம்பத்தில் நல்ல நிலையெடுத்து நிற்பர். ஆனால் தாம் தாக்க ஆயத்தமானதும் தமது உடம்பை தாக்குதலுக்கு இலக்காகும் வண்ணம் திறந்த வகையில் விட்டுவிடுவர். இதைத் தமது தவறான பயிற்சி முறையின் மூலம் உருவாக்கிக் கொள்கின்றார்கள். எந்த வகையான சண்டைப் பயிற்சியாக இருந்தாலும் நீங்கள் உங்களுக்கு காயங்கள் ஏற்பட வழி தேடித் தரும் தவறான பழக்கங்களைப் பழகாது பார்த்துக்கொள்வது முக்கியமானது.

பிரபல ஹொங்கொங் நடிகை 'சியாங் மன்பு' வுடன் பில்லி வோங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைகளினால் நிற்றல்

குங் :.பூ பள்ளியில் எம் அனைவருக்கும் சினம் தருகின்ற ஒரு பயிற்சிதான் கைகளால் நிற்கும் பயிற்சி. ஒரே பாய்ச்சலில் கைகளைத் தரையில் ஊன்றி கால்களை மேலே உயர்த்தி அப்படியே தலைகீழாக நிற்க வேண்டும்.

இவ்வாறு எவராலும் 5 அல்லது 10 நிமிடங்கள் சமாளித்தபடி நிற்க முடியலாம். ஆனால் இங்கோ தினமும் அரை மணித்தியாலம் இப்படி நிற்க வேண்டும். இதன்போது கண் எரிந்து, கை, இடுப்பு எல்லாம் மிகுந்த வலி எடுக்கும். எப்போது காலை கீழே இறக்கலாமென்றிருக்கும்.

ஆனால் நமது உறுதி நிலை சற்றுத் தளர்ந்தாலும் எம்மை நிமிர்த்த குருவின் பிரம்பு தயாராகவே இருக்கும். நாம் பல்லைக் கடித்துக் கொண்டு இந்த நிலையில் நிற்கும் போது குரு ஏதோ ஒரு சாதாரணமாக இருக்கும் ஒருவருடன் உரையாடுவது போல் எம்மிடம் கதை




கொடுப்பார். எமக்குப்பிராணன் போகும் தருணத்தில் இவர் எதையெதையோ கேட்டுத் தொல்லைப்படுத்துகிறாரே என்று ஆத்திரம்தான் உள்ளே பொங்கும். ஆனால் குரு வல்லவா? ஏதோ சமாளித்தபடி பணிவாகப் பதிலளித்தே தீரவேண்டும்.

இப்படிப் பயிற்சி செய்து நாளடைவில் நாம் பயிற்சியை சுலபமான ஒன்றாகப் பழகிக்கொள்வோம். அதன்பின் தலைகீழாக கைகளில் நின்றபடியே எம்மிடையே கதைத்துக் கொள்ளவோ, பாடக் குறிப்புகளைப் படிக்கவோ கூட எமக்கு இயலுமாகிவிடும். இதனால் வேதனையை மறந்து, அந்த உணர்வின்றி நேரம் போவது கூடத் தெரியாமல் பழகிவிடும்.

தலைகீழாக கைகளில் நிற்பது தலைவலி, ஞாபக சக்தி, சுறுசுறுப்பு, பொறுமை, மனக் குழறலை அடக்குதல், இரத்த ஓட்டம் போன்றவற்றிற்குச் சிறந்த பயிற்சி. இப்பயிற்சியால் கைகள் வலுவுறும்.

### கண் சிமிட்டுதல்

கண்ணுக்கெதிரே பொருளொன்று வருகையில் கண் சிமிட்டுவதுமனிதனின் இயற்கையான பழக்கம். ஆனால் சண்டையின் போது இப்பழக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது உங்கள் தற்காப்பு நடவடிக்கைகளையும், பதில் தாக்குதலையும் பாதிக்கும். உங்கள் இமை மூடிய உடனடியாக உங்களால் செயற்பட முடியாது. அத்தருணம் போதும் எதிராளிக்கு. உங்கள் இமைகள் கட்டுப்பாடற்றதெனக்கண்டுகொண்டால் அவன் போலியாகக் கையசைத்துவிட்டு உங்கள் இமைமூடிய தருணத்தில் தன் உண்மையான தாக்குதலைச் செலுத்தலாம்.

### வாய் திறத்தல்

மற்றொரு தவறான பழக்கம் வாய் திறந்தபடி சண்டையில் ஈடுபடுதல். திறந்த வாய் நேரான தாக்குதலொன்றால் உடைக்கப்படலாம்.

### எட்டாத இலக்கு

எட்டாத இலக்குக்குத் தாக்குவதுபலனற்றது. அது சென்று எதிராளியில் பட்டால்கூட எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த வலுவற்ற பலஹீனமான தாக்குதலாகத்தான் படும்.

### விலகி அசைந்தபடி தாக்குதல்

எதிரியைத் தாக்கும் தருணத்தில் அவனை விட்டுவிலகும் அசைவை மேற்கொள்ளாதீர்கள். உங்கள் தாக்குதல் வலுவிழந்து விடுவதுடன் நீங்கள் அடி வாங்குவதற்குப் பயப்படுகிறீர்கள் என்ற எண்ணத்தை எதிரிக்கு ஏற்படுத்தி விடுவீர்கள். உங்கள் பயந்த செயற்பாடுகள்தான் எதிரிக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டுகின்றன.

### தலையைத் திருப்புதல்

மற்றொரு தவறான பழக்கம் தாக்குதலுக்கு உள்ளாகும்போது தலையைத் திருப்பிக் கொள்வது. இப்பழக்கம் உங்களை மேலதிக தாக்குதலுக்கு ஆளாக்கவும் பதில் தாக்குதல் வழங்க முடியாதவாறு தடுக்கவும் செய்கிறது.

### கையைத் தளர்த்துதல்

சிலர் சண்டையின்போது தமது பின் கையை தளர்த்தி கீழே விட்டுவிடுகிறார்கள். இதனைத் தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்திஎதிரிநேரடியான குத்து ஒன்றைத் திடீரென வழங்க முடியும்.

### அசைவில் ஆற்றல்

*Finess in movement is not innate,*
*It has to be learned like any other skill.*

*Practice you must or it will detorate,*
*Like any other trait, you have to drill.*

*Learn to move with your shuffle of your feet,*
*And don't despair if you quite awkward.*

*Soon you'll be a master of deceit, Especial*
*when moving backward and forward.*

*Train, train, train with great determination*
*And you'll be on top at your confrontation.*

அசைவின் லாவகம் உடம்பில் பிறப்பது அல்ல. அது ஏனைய ஆற்றல்களைப் போலவே கற்றறியப்பட வேண்டிது.

பயிற்சி கட்டாயமானது. இல்லையேல் ஆற்றல் இழக்கப்படும் - ஏனைய பழக்கங்களுக்கு அப்பியாசம் அத்தியாவசியப்படுவது போல.

உனது கால்களின் மாறுபாடான இயக்கத்துடன் அசையப் பயில். சிரமத்திற்கு மனந்தளராதே.

விரைவிலேயே நீ ஏமாற்று வித்தையின் எஜமானனாகிவிடுவாய். குறிப்பாக முன்னும்பின்னும் அசையும் போது.

பயில், பயில், பயில மிகத் தீர்மானத்துடன். நீ உன் சண்டையில் உச்ச நிலையில் இருப்பாய்.

ஒரு நல்ல சண்டை வீரன் எப்போதும், எவற்றையுமே மிகச் சுலபமாகவும், லாவகமாகவும் திறமையாகவும் செய்யக் கைவரப் பெற்றிருப்பான். அவனது காலக்கிரமச் செயற்பாடு மிகச் செப்பமாக இருக்கும். அதனால் எதிராளியின் இயக்க ஒழுங்கைக்கூடக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். அவனது அசைவுகள் நிச்சயப்படுத்தப்பட்டதாயும் தொடர்புடையதாயும் இருக்கும்.

ஒரு மோசமான சண்டை வீரன் குழம்பிய அசைவுகளைச் செய்பவனாக இருப்பான். அவனால் சரியான தூரத்தை மதிப்பிட முடியாது. தனது எண்ணத்தை முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது. எதிராளியை ஏமாற்றவும் முடியாது. எதிராளியைத் தான் கட்டுப்படுப்படுத்துவதற்குப் பதில் தன்னை எதிராளி கட்டுப்படுத்த இடங்கொடுத்து விடுவான்.

### தொலைவும் இடவெளியைப் பாலமிடலுடம்

இரு திறமையான சண்டை வீரர்களிடையே இடைவெளி எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும். உனக்கும் உன் எதிராளிக்கும் இடையிலான தொலைவு 'பாலம்' (Bridge) எனப்படும். சீனக் குங் :.பூ கலையில் மூன்று வகை தொலைவுச் சண்டைகள் உள்ளன. அவை நீண்ட தூரம், குறுந்தூரம், மத்திய தூரம் எனப்படும்.

**நீண்ட தூரம்:** எதிரியின் ஆற்றல், துணிச்சல், நோக்கம் என்பவை தெரியாதிருக்கும்போது இச் சண்டை முறையைக் கைக்கொள்வர்.

**மத்திய தூரம்:** இத்தூரம் சடுதியான பின் வாங்குதல் மூலம் நீங்கள் அறைபடாது தவிர்க்கக்கூடியதாக அமைந்திருக்கும். நீங்கள் பின்வாங்கும் தூரம் கூட எதிராளியின் அடியில் இருந்து விலகும் அளவுக்கு மட்டுமே அமைந்து, அதேவேளை உங்கள் மறு தாக்குதலை வழங்கக் கூடியதாக அண்மித்தும் இருக்க வேண்டும்.

**குறுந்தூரம்:** குறுந்தூரத் தாக்குதலில் முக்கியமானது தாக்குதலில் விடும் சிறிய பிசகு கூட உங்கள் தாக்குதலை தாக்கமற்றதாக்கிவிடலாம். உங்களுக்கு ஏதுவான தொலைவுக்குள் எதிராளி நிற்கும் கணத்தில்தான் நீங்கள் தாக்க வேண்டும். அவர் தனக்குரிய தொலைவை எட்டிய பின் அல்ல. •

**அடுத்த இதழில் சந்திப்போம்**

**அன்புடன்,**
**உங்கள் பீலிஸ் வொங்**



நடன ஆசிரியை 'வலந்தி ராஜபக்ஷ' வுக்கு பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நோயற்ற

# எரியும் நெஞ்சு

டொக்டர் எம்.கே. முருகானந்தன்
எம்.பி.பி.எஸ்.

கோபத்தினாலும்பொறாமையினாலும்சிலருக்குநெஞ்சுபற்றி எரிவதுண்டு. ஆனால் அதைப்பற்றிநாம் இங்கு பேசவில்லை. நோயினால் எரியும் நெஞ்சு பற்றிப் பேசுவோமா?

"சாப்பிட்ட சாப்பாடுசெமிக்கவில்லை. புளித்துக்கொண்டிருக் கிறது' எனச் சிலர் சொல்லுவார்கள். 'நெஞ்செரிக்கிறது' என அடிக்கடி நெஞ்சைத் தடவிக் கொள்வார்கள் வேறு சிலர். அக்கம் பக்கம் உள்ளவர்கள் பயந்து ஏங்கும்படி பெரும் சத்தத்துடன் ஏப்பம் விடுவார்கள் இன்னும் சிலர். ஆனால் ஆளைப் பார்த் தால் திடகாத்திரமாக, ஆரோக்கியமானவர் போலத் தோற்றம் அளிப்பார். வெளி வேஷம் போடுகிறாரா என நீங்கள் யோசிக்கக் கூடும். ஆனால் பாவம் அவர் துன்பம் அவருக்குத்தான் தெரியும்.





நெஞ்செரிப்பு பலரையும் பாதிக்கும் நோய்தான். ஆனால் பலரும் இதைப் பற்றி அக்கறை காட்டுவதில்லை. இந்த நோய் எப்படி ஏற்படுகிறது எனப் பார்ப்போம்.

எமது இரைப்பையில் ஐதான ஐதரோக்குளோரிக் அமிலம் இருக்கிறது. இதுஉணவுச் செரிமானத்திற்குஅவசியமானது. அல்சர் எனப் பொதுவாகச் சொல்லப்படும் இரைப்பைப் புண்கள் (*Peptic ulcer*) தோன்றுவதற்கு இது அதிகமாகச் சுரப்பதும் ஒரு காரணமாகும்.

ஆனால் நெஞ்செரிப்பு என்பது அதிகமாக அமிலம் சுரப்பதால் ஏற்படும் நோயல்ல. அமிலம் தான் வழமையாக இருக்கும் இடத்தில் இல்லாமல் வேறு இடத்திற்கு ஊடுருவுவதால் ஏற்படுகிறது. அதாவது இரைப்பையில் இருக்க வேண்டிய அமிலம் மேலெழுந்து களத்தை அடைவதால் ஏற்படும் நோயாகும். இந்நோயை வைத்தியத்துறையில் (*Gastro oesophageal reflux disease*) என்று கூறுவோம். சுருக்கமாக GORD என்பார்கள்.

களத்தின் மென்சவ்வு இரைப்பையின் மென்சவ்வைப் போல கடுமையான தல்ல. இதனால் மேலெழும்பும் அமிலம் களத்தின் மென்சவ்வை அரித்து நெஞ்செரிப்பை ஏற்படுத்துகிறது.



சாதாரண நோய்தானே என அக்கறையின்றி விட்டால் தனித்தனியாகத் தோன்றும் புண்கள் ஒன்றோடு ஒன்றிணைந்து பெரிய புண்கள் ஆகின்றன. பின் முழு விட்டத்தையும் தாக்குகின்றன. மேலும் மோசமடைய களத்தில் சுருக்கம் விழும். இதனால் உணவு விழுங்குவதில் சிரமம் ஏற்படும்.

உணவுவிழுங்கும்போதுதடை அல்லதுசிரமம் என்பதுமிகவும் ஆபத்தான அறிகுறியாகும். ஏனெனில் இது GORD நோயினால் மாத்திரம் ஏற்படு வதில்லை. மிகவும் ஆபத்தானதும் இலங்கையில் அதிகம் காணப்படும் களப் புற்று நோயின் முக்கிய அறிகுறியாகும். இந்த அறிகுறி உங்களு க்கோ நீங்கள் அறிந்தவருக்கோ தோன்றினால் உடனடியாக வைத்திய ரைக் காணுங்கள். நாட்பட்ட GORD நோயும் புற்றுநோயாக மாறக்கூடிய வாய்ப்பு உள்ளது.

### அறிகுறிகள் என்ன?

1. நெஞ்செரிப்பு.
2. உணவு உட்கொள்ளும்போது ஒட்டிக் கொள்வது அல்லது தடக்குவது போன்ற உணர்வு.
3. உணவு புளித்துக்கொண்டு நெஞ்சுக்குள் அல்லது வாய்க்குள் வருவது போன்ற உணர்வு. உதாரணமாக சாப்பிட்டவுடன் படுத் தால் அல்லது குனிந்து வேலை செய்தால் இவ்வாறு நேரலாம்.
4. வாயூறுவது போன்ற உணர்வு
5. அரிதாக பறகூச்சம், அடிக்கடி தோன்றும் இருமல், இரவில் ஆஸ்த்மா ஏற்படல், குரலடைப்பு, வயிற்று ஊதல், நெஞ்சுவலி போன்ற அறிகுறிகளும் தோன்றலாம்.

### நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

1. நீங்கள் குண்டானவராயின் எடையைக் குறையுங்கள்.
2. உணவு உட்கொண்ட மூன்று மணித்தியாலம் கழிந்த பின்தான் படுக்கைக்குச் செல்ல வேண்டும்.
3. புகைப்பவராயின் அதை உடனடியாக நிறுத்துங்கள்.
4. கோப்பி, தேநீர் போன்ற பானங்களைக் குறையுங்கள்.
5. படுக்கும்போதுஇரண்டு தலையணைவைத்துதலையைஉயர்த்திப் படுங்கள்.

### கவனியுங்கள்:

திடீரென ஏற்படும் நெஞ்செரிப்பு மாரடைப்பு நோயின் அறிகுறி யாகவும் சிலருக்கு ஏற்படுவதுண்டு.

மன அழுத்தம், மனச் சோர்வு, மனப் பதற்றம் போன்ற நோய்க ளிலும் நெஞ்செரிப்பு ஒரு அறிகுறியாக வெளிப்படுவதுண்டு.

அந்த டொக்டர் கடமையில் கண்ணானவர். அதற்கும் மேல், வழமைக்கு மாறான அதீத ஈடுபாடு கொண்டவர் என்று சொல்லலாம். ஆஸ்பத்திரியே கதி என்று கிடப்பவர். தின மும் 14-16 மணித்தியாலங்கள் அங்கேயே கழிப்பார். தனது குழந்தைகளை நித்திரை யில்தான் காண்பார்.


"நீண்ட நாட்களுக்குப்பின் சிறிது லீவு எடுக் கிறேன். இல்லையேல் பிள்ளைகள் எனது உருவத்தை மறந்துவிடுவார்கள்" என நண் பருக்குக் கூறினார்.

"அது கிடக்கட்டும். பிள்ளைகள் யாரைப் போல இருக்கிறார்கள் என்பதைப் பார்" என்று நண்பன் ஆலோசனை கூறினான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜயதிலக்க கம்மல்லவிர

25 வருஷத்துக்கு முதலென்று நினைக்கிறேன். ஒரு நாள் தற்கொலைசெய்ய முயற்சித்ததற்காக நான் குற்றவாளியாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டேன். அன்று அழித்துக் கொள்வதற்கு என்னிடம் வாழ்க்கையென்று ஒன்று இருந்தது.

அந்த முழு வாழ்க்கையையுமே பணயம் வைத்து ஒருத்தியை நான் காதலித்தேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள் என அறிந்து கொண்ட போது உண்மையிலேயே வாழ்க்கை எவ்வளவு அழகானது என்று எனக்குத் தோன்றியது....

வாழ்க்கை காற்று நிறைந்த ஒரு பலூனைப் போன்று இலகுவானதாகத் தோன்றியது. அப்போது அதை நான் மேலே எறிந்து விளையாடினேன். சில வேளைகளில் அது ஓர் அழகான காற்றாடியைப் போல் தெரிந்தது.

உயரே உயரே வானத்தில் தெரிந்த வெண் பஞ்சுக் கூட்டம் போன்ற மேகங்களில் என் வாழ்க்கைக் காற்றாடியை உரசவிட்டு வான் பரப்பிலே மிதந்து செல்லும் காற்றிலே அதனைப் பறக்கவிட்டுப் பார்த்து ரசித்து மகிழ்ந்து கொண்டிருந்தேன்.

மேகக் கூட்டங்களிடையே தவழ்ந்து கொண்டிருந்த என் வாழ்க்கைக் காற்றாடி திடீரென தலைகுப்புறக் கரணமடித்தது.

நான் உயிருக்குயிராய் காதலித்த அந்தப் பெண் இன்னுமொரு ஆடவனுடன் சிரித்து மகிழ்ந்து கையசைத்தபடி போனதைக் கண்டேன். கண்டபோது....

எனது வாழ்க்கையின் குரல்வளையைப் பிடித்து நெரித்து அதனை அழித்து விட வேண்டும் போல் இருந்தது. நான் எனக்கே சொந்தமாகவிருந்த வாழ்க்கையை இழக்கச் சித்தமானேன்.

எனதுயிரிலேயே எனக்குண்டான வெறுப்பினால் வீதியோரத்தில் நின்ற ஒரு மரத்தில் ஒரு கயிற்றைக் கட்டி அதனைத் தூக்கிலிட்டுக் கொல்ல முயற்சித்தபோது....

நாசமாய்ப் போக, எங்கோ போய்க்கொண்டிருந்த ஒரு பொலீசுக்காரன் என் கழுத்தைப் பிடித்து இழுத்துச் சென்று நீதிமன்றத்தில் நிறுத்திவிட்டான்.

"தற்கொலை செய்து கொள்வது மன்னிக்க முடியாத குற்றம்" நீதவான் கரகரப்பான குரலில் கடுகடுப்பாகச் சொன்னார்.

என்னுடைய வாழ்க்கையை ஒரு அழகிய காற்றாடியைப் போல் பறக்க விடுவதற்கு எனக்கு உரிமையிருக்குமானால் அது தேவையில்லையென்று தோன்றுகின்றபோது அதை உடைத்து நொறுக்கி விடுவதற்கு மட்டும் எனக்கு உரிமை இல்லையா என்ன?

இது எனக்குப் பெரும் பிரச்சினையாகிவிட்டது.

நான் அடம் பிடித்தேன். தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தவனுக்கு பஸ் நிலையமாயிருந்தாலென்ன நீதிமன்றமாயிருந்தாலென்ன இரண்டுமே ஒன்றுதான். நான் வழக்கறிஞரையோ, தொலுக்கு முதலியையோ கணக்கிலெடுக்காமல் நீதவானையே கேள்வி கேட்க ஆரம்பித்தேன்.

"எனது வாழ்க்கையை நானே வெறுக்கும் போது அதனை என் விருப்பத்துக்கு மாறாக என்னிடம் வைத்திருக்கும்படி பலாத்காரமாக சட்டத்தைப் பாவிப்பது அநீதியல்லவா?"

நீதவான் ஆழமான கனத்த குரலில் சொல்லத் தொடங்கினார்:

"உனது வாழ்க்கை உனக்குத் தேவையில்லையென நீ நினைத்தாலும் அது அப்படியல்ல. உனது வாழ்க்கை சமூகத்துக்கே சொந்தமானது. உனக்கு அது பெறுமதியில்லாவிட்டாலும் சமூகத்துக்கு அது பெறுமதியானது. ஒரு மனித ஜீவனாகப் பிறக்கக் கிடைப்பது எவ்வளவோ கடினமானது. அவ்வாறு மிக அருமையாகக் கிடைத்த அவ்வுயிரால் இந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு எவ்வளவோ செய்ய முடியும். மனித மூளையால், மனிதனின் இரு கரங்களால் எத்தனையோ புதிய விடயங்களை உருவாக்க முடியும். அவற்றைச் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகப் பாவிக்கவும் முடியும்.

எனவே சமூகத்திற்கு இவ்வளவு பெறுமதியான உனது உயிரை அழித்து விடுவதற்கு உனக்கு உரிமையில்லை. அது பெருங் குற்றமாகும். சமூகத்தின் முன்னோக்கிய வளர்ச்சிப் பயணத்தை எதிர்த்து செய்யப்படுகின்ற நாசகார நடவடிக்கையாகும். இவ்வாறான நாசகார செயற்பாடுகளைத் தடுக்கத்தான் குற்றவியல் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன."

நான் எனது உயிரைப் பற்றி எதுவுமே அறியாதவன் என்று நினைத்து நீதவான் மிகவும் பக்குவமாக எனக்கு எடுத்துச் சொன்னார். அவரது அறிவுரையை அப்படியே எடுத்துக் கொள்வதென்று தீர்மானித்தேன்.

அன்றிலிருந்து இந்தப் பெறுமதிமிக்க உயிரைப் பாதுகாப்பதற்காக நான் எவ்வளவோ கஷ்டப்பட்டேன். முயற்சி செய்தேன்.

சமூகத்தின் முன்னேற்றத்திற்காக என்னால் செய்யப்பட வேண்டியவை எவை என்பதைப் பற்றி நிறையச் சிந்தித்தேன். எனது பெறுமதியான மூளையையும் இரண்டு கைகளையும் பாவிப்பதென்றும் இந்தச் சமூகத்தின் நலனுக்காக ஏதாவதொன்றைப் புதிதாக உருவாக்க வேண்டுமென்றும் நான் முடிவெடுத்தேன்.

ஒரு ஆகாய விமானத்தையோ அல்லது புதுவித கப்பலொன்றையோ உருவாக்க வேண்டுமென எனக்குள் எண்ணினேன். ஆகாய விமானம் அல்லது கப்பல் ஒன்றைச் செய்யக்கூடிய இடம் ஏதாவது இருக்கிறதா எனத் தேடி அலைந்தேன். தெற்கிலிருந்து வடக்காகவும் கிழக்கிலிருந்து மேற்காகவும் திசையெல்லாம் நடந்து தேடிக் களைத்ததுதான் மிச்சம். கப்பலையோ ஆகாய விமானத்தையோ செய்யக்கூடிய இடமொன்றையும் நான் காணவில்லை.

நான் எனது அந்த எண்ணத்தைக் கைவிட்டேன்.

காரொன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் காரொன்றை உருவாக்குமிடமென்ன, சைக்கிள் ஒன்றை உருவாக்கும் இடம்கூட எனக்குக் கிடைக்கவில்லை.

அந்த எண்ணத்தையும் கைவிட்டு ஒரு வானொலிப் பெட்டியைச் செய்வதற்கான யோசனைக்குத் தாவினேன். அதற்கான இடமும் எனக்குக் கிடைக்கவில்லை.

நான் எனக்கிருந்த இந்தப் பிரச்சினையை ஒரு பெரும் கல்விமானிடம் எடுத்துச் சொன்ன போது, அவர் மிகுந்த அனுதாபத்துடன் என்னை நோக்கி இப்படிச் சொன்னார்:

"நீ கப்பல் செய்யவும், ஆகாயவிமானம், கார், சைக்கிள், தொலைக்காட்சி, வானொலி எனப் பெரிய பெரிய விடயங்களை உருவாக்க நினைத்தாலும் அவற்றை உருவாக்குவதற்குத் தேவையான விஞ்ஞானபூர்வமான அறிவு உன்னிடம் இல்லை. அப்படித்தானே? நீ முதலிலே செய்ய வேண்டியது அதற்கான அறிவைப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்வதுதான். அவ்வாறு அறிவைப் பெற்றுக்கொண்ட பின் அவற்றைச் செயலாக்கக்கூடிய திட்டங்களோ வசதிகளோ இந்த நாட்டில் இல்லாவிட்டாலும் அவை இருக்கும் நாடுகளுக்கு நீ போக முடியும்''

நான் பிறக்கும்போதே பெற்றுக் கொண்ட எனது மூளையினதும், இரு கைகளினதும் பெறுமதியைப் பற்றி அன்று நீதவான் கூறிய அறிவுரையில் குறைபாடுகள் இருந்ததை நான் அப்போது புரிந்துகொண்டேன்.

இதன்பிறகு நான் விஞ்ஞான ரீதியான அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்களைப் பற்றி விசாரித்தேன். அவ்வாறான இடங்கள் நான் திரும்பிய திரும்பிய பக்கமெல்லாம் இருப்பதாக ஆங்காங்கே தொங்கவிடப்பட்ட அறிவிப்புப் பலகைகளைப் பார்க்கும்போது தெரிந்தது.

அந்த விளம்பரங்களின் துணையால் நான் தெரிந்துகொண்ட ஒரு இடத்திற்குச் சென்று, எனது சமூகத்தின் நலனுக்காக ஒரு புதிய கண்டுபிடிப்பை நான் செய்ய விரும்புவதாகவும், அதற்குத் தேவையான விஞ்ஞான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களை நாடி வந்ததாகவும் கூறினேன்.

அறிவை எல்லோருக்கும் பெற்றுத் தருவதற்காகவே அவர்கள் மிக விருப்பத்தோடு காத்திருப்பதாகவும், அவ்வாறான ஒரு பாடத் தொடரைக் கற்பதற்குத் தேவையான கட்டணத் தொகையைச் செலுத்த முடியுமானால் வேண்டிய விஞ்ஞான அறிவைப் பெற்றுத் தருவதில் எவ்விதமான பிரச்சினையும் தங்களுக்கு இருக்காது என எனக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.

நான் பெற்றுக் கொள்ள விரும்பிய விஞ்ஞான அறிவு மிகப் பெரிய விலையைக் கொண்டதாயிருந்தது. அவ்வளவு பெருந் தொகைக் கட்டணத்தைக் கொடுக்கும் வசதி என்னிடம் இல்லையென நான் கூறினேன். அதைக் கேட்ட அங்கிருந்த கல்விஞானிகள் என்மீது இரக்கப்பட்டு எனக்கு யதார்த்தபூர்வமான ஒரு ஆலோசனையை வழங்கினார்கள்.

''உனது நிலைமைக்கு ஏற்றதாக நீர் செய்யக்கூடிய தென்னவென்றால் ஊதுபத்தி அல்லது உப்புச் சவர்க்காரம் போன்ற ஏதாவதொரு உற்பத்தியைத்தான்.''

அன்றிலிருந்து இற்றைக்கு இருபது வருஷமாக உப்புச் சவர்க்கார உற்பத்தியை செய்து வருகிறேன். அதனால் இந்தச் சமூகத்துக்கு நலனிருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த உற்பத்தியில் கிடைக்கின்ற சிறிய ஆதாயத்தைக் கொண்டு எனது பிள்ளைகளினதும் மனைவியினதும் வயிற்றைக் கழுவுவது மிகக் கடினமாக இருப்பதாக நான் உணர்கிறேன்.

இந்த சமூகத்துக்குச் சொந்தமான என்னுடைய வாழ்க்கையில், எனது நிலைமைக்கு நான் பெற்றுக்கொள்ளத் தகுந்த அறிவைக் கொண்டு, எனது குடும்பத்துக்குக் கூட வேண்டிய எதுவும் செய்ய முடியாதவனாக இருக்கிறேன் என்கிற உண்மை என்னைத் திரும்பவும் வதைசெய்ய ஆரம்பித்தது.

யார் எதைச் சொன்னாலும் எந்தவிதப் பயனும் இல்லாத எனது உயிரை அளவுக்கு மீறி நான் இப்பொழுது வெறுக்க ஆரம்பித்துவிட்டேன்.

எனது உயிரால் எந்தப் பயனும் இல்லை என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் அந்தச் சட்டமானது ஒரு பூதம் போல் என் பின்னால் வந்து கொண்டிருக்கிறது.

நன்றாக யோசித்துப் பார்க்கும் போது இந்தச் சட்டத்தைக் கூட அர்த்தமற்றதாக்கி விடலாம் என எனக்குத் தோன்றுகிறது.

தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்பவனை நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்று சட்டத்தின் மூலம் தண்டனை கொடுக்கலாமே ஒழிய தற்கொலை செய்துகொண்டதன் பின்னர் யாராலும் அவனுக்குத் தண்டனை கொடுக்க முடியாதென்பதும் எனக்குப் புரிகிறது.



# உப்புச் சவுக்காரம்

எனது பயனற்ற இந்த உயிரைப் பிடித்து அழித்துவிட வேண்டுமென நான் உறுதியாகத் தீர்மானித்தேன்.

ஆனால் அந்தத் தீர்மானத்தை எடுத்ததிலிருந்து ஒரு புதுப் பிரச்சினை எனக்கு உருவானது. கொன்று ஒழிப்பதற்கான எனது உயிரைப் பிடிப்பது எப்படி?



ஜயதிலக்க கம்மல்லவீர கம்பஹா மாவட்டத்தில் 1943ல் பிறந்தவர். 4 நாவல்கள், 6 சிறுகதை தொகுப்புகள், மற்றும் சிறுவர் இலக்கியங்கள், மொழிபெயர்ப்புக்கள் பலவற்றைத் தந்திருக்கிறார்.

சாகித்திய அகடமி, சுதந்திர இலக்கியவிழா உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ள கம்மல்லவீர விபவி மாற்றுக் கலாசார மையத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக உள்ளார்.

ஒரு செக்கன் கூட அது ஒரு இடத்தில் நிற்பதில்லை. பொழுது விடிந்த நேரத்திலிருந்து பொழுதுபடும் வரை, ஏன் எனது நித்திரையிலும், கனவிலும் கூட எவ்வளவாவது சம்பாதித்துவிட வேண்டுமென்று ஓடித் திரிவதே அதன் பிழைப்பாக இருந்தது.

நேற்று அதற்குத் தெரியாமலே அதை நான் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தேன். ஒரு நகை அடகு பிடிக்கும் கடைக்கு முன்னால் அது என்னிடம் மாட்டிக் கொண்டது. வீட்டுச் செலவுக்காக என் மனைவியிடம் எஞ்சியிருந்த சிறிய ஒரு சோடித் தோடுகளை அடகு வைப்பதற்காக அது அங்கு வந்திருந்தது.

என்னிடம் மாட்டிக் கொண்டதும், பயம் மண்டிய குரலில் ''இப்பொழுது என்னால் இறக்க முடியாது'' என ஓவெனக் கதறியழ ஆரம்பித்துவிட்டது. தோடுகளை அடகு வைத்துப் பெற்றுக்கொண்ட 450 ரூபாவை என் மனைவியின் கையில் சேர்ப்பிக்காமல் தான் எப்படிச் செத்துப் போவதென அது என்னிடம் கேட்டது.

மிகவும் மன விரக்தியில் இருந்த நான் எனது உயிரைக் கழுத்தைப் பிடித்து அடகுக் கடைக்கு வெளியே கொறகொறவென இழுத்துவந்து வீதியில் தள்ளிவிட்டேன்.

''உனக்குச் சாக முடியாவிட்டால் என்ன இழவையாவது செய்துகொள்..... போ''

மரண தண்டனை பெற்ற கைதிகள் போல 30-40 பேரை ஏற்றிக்கொண்டு வந்த ஒரு மினி பஸ் ஒருபக்கமாக கெழித்துச் சாய்ந்த வண்ணம் வந்து சரசரவென பெருஞ் சத்தத்துடன் தெரு முனையின் முடக்கிலே திரும்பியது.

எனது உயிரும் தள்ளாடியவண்ணம் ஓடிச் சென்று அந்த மினி பஸ்ஸிலே தொங்கிக் கொண்டதை நான் பார்த்தபடி நின்றேன். •

**''உனது நிலைமைக்கு ஏற்றதாக நீர் செய்யக்கூடிய தென்னவென்றால் ஊதுபத்தி அல்லது உப்புச் சவர்க்காரம் போன்ற ஏதாவதொரு உற்பத்தியைத்தான்.''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் படங்கள் ஏன் உலகத் தரத்தில் இல்லை?



தமிழ் சினிமா ஏன் உலக சினிமாவின் தரத்தில் இல்லை? என்ற கேள்வி பரவலாக எல்லோர் மனதிலும் உள்ளதுதான். சினிமா மொழி உலகப் பொதுவானது என்பதும், சினிமா ரசிகர்கள் எந்தத் தேசத்தில் வாழ்ந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும் அவர்கள் ரசிக்கத்தக்க படங்களாக தமிழ்ப் படங்களும் ஆக வேண்டும் என்பதும், இப்போது புரிந்து கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கான முயற்சியை மேற்கொள்ளவாவது இப்பொழுது தமிழ்ப் படவுலகில் சிலர் முனைகிறார்கள். ஜப்பானிய, ஈரானிய, செக் தேசத்துப் படங்களையெல்லாம் நாம் ரசிக்க முடிவது போல.... தமிழ்ப் படங்களையும் அவ்வாறு உலகு தழுவியதாக ஆக்குவதில் பல தடங்கல்கள் இருக்கின்றன.

மிக முக்கியமான தடங்கல் தமிழ்ப் பார்வையாளர்களின் மனோநிலைதான். இவர்களைத் திருப்தி செய்தாலே, போட்ட முதலைத் திருப்பி எடுத்துக்கொள்ள முடியும் என்ற காரணத்தால் பல தகிடுதத்தங்களைப் புரிந்து வருகிறது தமிழ்க் கனவுத் தொழிற்சாலை. இந்த ரசிக மனோநிலையை உருவாக்கி வைத்திருப்பவர்களும் தமிழ்ப்பட முதலாளிகள் தான் என்ற குற்றச்சாட்டு உண்டு.

சினிமா தமிழுக்கு வந்தபோது புராணக் கதைகளை, கூத்தை, நாடகத்தை மின்சார உபகரணத்தில் சொல்வது என்றே எடுக்கப்பட்டது. தொடர்ச்சியாக, திரைப்படக் கதாநாயகர்கள் தெய்வநிலையில் வைத்துப் பார்க்கப்படுவதும், 'விசு'த்தனமாக கமெரா



ரம்பாவும் சோனாலியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமீர்கானும்
மனிஷா
கொய்ராலாவும்

வினால் பிடிக்கப்பட்ட நாடகங்கள் மக்கள் வரவேற்பைப் பெறுவதும் நடந்து வருகிறது.

பக்கம் பக்கமாக வசனத்திலேயே கதையைச் சொல்லுதல், பக்கத் துணையாக பாட்டுக்களையும் எடுத்து விடுதல் தமிழ்ப் படங்களின் தன்மையாகிவிட்டது.

சினிமா என்பது தனித்த ஒரு கலை. காட்சிப் பிம்பங்களாலான தனி மொழியாக அது விளங்குகிறது என்பதையெல்லாம் நாங்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்தபோது காலம் பிந்திவிட்டது. "என்னை முதன் முதலாகப் பார்த்தபோது என்ன நினைத்தாய்? நான் உன்னை நினைத்தேன்" என்றும், "உன்னைப் பார்த்தது முதல் என் உள்ளத்தில் காதல் கொப்பளிக்கிறதே.... நங்காய், என்னை உன் இதய சிம்மாசனத்தில் இருத்திவிடு..." என்றும் பாட்டால், வசனத்தால், நடிப்பால் கதை சொல்வதே சினிமா என்பதற்கு நாம் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறறோம்.

ஆனால், சினிமா என்பது நாடகமோ, ஓவியமோ, கவிதையோ, இசையோ, கூத்தோ அல்ல. இத்தகைய பல்வேறு கலைகளின் அனுசரணையோடு இயங்கினாலும் சினிமா, இவைகளிலிருந்து வேறுபட்ட ஒரு தனிக் கலை. அதாவது ஒவ்வொரு கலைக்கும் உள்ளதுபோல் சினிமாவும் தனித்த ஒரு கலையாகக் கொள்ளப்படுவதற்கான தனித்துவப் பண்புகளைக் கொண்டது.

ஒவ்வொரு கலைக்கும் அதற்கே உரிய சில அடிப்படைப் பண்புகள் உள்ளன. ஓவியம் கோடுகளாலும், படிமங்களாலும், வண்ணங்களாலும் ஆனது. அதேபோல் இசை தொனியாலும், லயத்தாலும் ஆனது. நடனம் உடல் அசைவை அடிப்படையாகக் கொண்டது. இதுபோல் சினிமாவும் சில அடிப்படை அம்சங்களைக் கொண்டிருப்பது. சினிமாவுக்குரிய அடிப்படை அம்சங்களாக இருப்பவை காட்சிப் படிமங்கள், ஒலி, தொகுப்பு (Editing) ஆகியன.

இசையால், பேச்சால், நடன அசைவால், ஓவியத்தால், சிற்பத்தால் எல்லாம் உணர்ச்சிகளை செய்திகளைச் சொல்லிவிட முடிவது போல் காட்சிகளாலும், ஒலி சேர்த்து காட்சிப் பிம்பங்களைத் தொகுக்கும் முறையாலும் சொல்ல முடியும்.

காட்சிகளினால் சொல்லக்கூடிய ஒரு விஷயத்தை வாய்ப் பேச்சினாலோ, பாட்டினாலோ சொல்ல முற்படுவது சினிமா அல்ல. பூங்காவில் உறங்கிக்கொண்டிருக்கும் ஒருவனை ஒருபெண் வந்து தொட்டு எழுப்பினால் அவன் திடுக்கிட்டு எழுவதை சினிமாவில் எந்த வார்த்தையுமின்றியே காண்பித்துவிட முடியும். "நாரீமணியே! யாருமற்ற இந்த உத்தியாவனத்திலே நான் என்னை மறந்து உறங்கிக் கொண்டிருக்குங்கால், நீ மெல்ல வந்து, நின்று, எனைத் தொட்டு எழுப்பியதன் காரணம் என்னவோ?" என்பதெல்லாம் ரேடியோ நாடகத்திற்குத்தான் வேண்டியது.

> **"சினிமாவில் காட்சி ரீதியாக விளங்கப் படுத்துவது இன்று உயர் நிலையில் உள்ளது. எல்லாவற்றையும் காண்பிக்க வேண்டும் என்பது அவசியமில்லாமல் போய்விட்டது. கவிதையையோ, சிறு கதையையோ படிக்கும்போது இரண்டு வரிகளுக்கிடையில் உள்ள அர்த்தத்தை உணர்வதைப் போல இன்று இரு பிம்பங்களுக்கிடையேயான அர்த்தத்தை உணர்கிறோம்.**
>
> **பேலா பெலாஸ்**

தமிழ்ப் படங்களில் என்றால் சாகப் போகிறவர்கள் கூட, தான் எதற்காகச் சாகிறேன் என்றோ, தன்னைத் திருத்தியவர்களின் பெருமை சொல்லியோ பக்கம் பக்கமாக வசனம் பேசிக் கொண்டிருப்பார்கள். இது உணர்ச்சிகளையெல்லாம் வார்த்தைகளில் சொல்லிவிட வேண்டும் என்ற கூத்து, நாடகம் போன்றவற்றின் பாதிப்பினால் வந்தது.

1950களில் அண்ணாத்துரை, கருணாநிதி, இளங்கோவன், கண்ணதாசன் என்றெல்லாம் வசனகர்த்தாக்கள் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றிருந்ததற்கு இவ்வாறு பேச்சுக்குக் கொடுக்கப்பட்ட அதீத முக்கியத்துவம்தான் காரணம்.

சினிமாவில் இடம்பெறும் வசனம் மற்றும் ஒலிகளை ஒலிச்சித்திரமாக Tape இன் மூலமும் ரேடியோ மூலமும் கேட்டு மகிழ முடிந்தால் அது எப்படி சினிமா ஆகும்?

மௌனராகம் படத்தில், தொட்டு உதவுவதற்கு வரும்போது "என்னைத் தொடாதே, உனக்குக் கம்பளிப் பூச்சி ஊர்ற மாதிரியிருக்கும்..." என்று ரேவதி முன்பொருமுறை சொன்ன வசனத்தை ஞாபகப்படுத்துவார் மோகன். ரேவதி ஓடிப்போய் படுக்கையில் முகக் குப்புற விழுவார். அவர் முதுகைத்தான் கமெரா காண்பிக்கும். எந்த வார்த்தைகளுமின்றியே அவரது உணர்ச்சிகளை நாம் புரிந்துகொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த இடத்தில் "வார்த்தைகளால் என்னை இப்படிக் கொல்லலாமா?" என்று வசனம் பேசிக் கொண்டிருப்பது ஆபாசம்தான். அது பார்வையாளர்களின் ரசனையைக் கொல்வதாகவும் இருக்கும்.

ஒலி சினிமாவில் காட்சிப் படிமங்களுக்குத் துணை செய்வதாகத்தான் வரும். ஒலியே இல்லாத படங்களும் உண்டு. சினிமாவில் ஒலி என்பது பேசும் வார்த்தைகள், இயல்பான சத்தங்கள் (பறவைகளின் ஒலிகள், நதியின் சலசலப்பு, காற்றின் இரைச்சல், வாகனங்களின் சத்தங்கள்...) மற்றும் காட்சிகளுக்கான மூடை (*Mood*) உருவாக்கும் இசை போன்றனவாகும்.

புது வசந்தம் படத்தில் கோயம்புத்தூரில் ஒரு வீட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த கதாநாயகி, ரயிலேறி சென்னைக்குத் தப்பி வந்துவிடுகிறாள் என்பதைச் சொல்வதற்கு, அவள் ஜன்னல் வழியாகப் பார்க்கையில் சுதந்திரமாகப் பறந்து செல்லும் பறவை ஒன்றைப் பின்தொடரும் கமெரா. பின்னணியில் ரயில் சத்தங்கள் கேட்கும். அவ்வளவுதான்.

இதே போல் முதல் மரியாதை படத்தில் சிவாஜியின் உயிர் கடைசியில் ராதாவின் வருகையை நோக்கி இழுத்துக்கொண்டிருக்கும். படுக்கையில் கிடக்கும் சிவாஜியின் ஏக்கப் பார்வையை காண்பிக்கும் அதே சமயம் பழைய சிவாஜி - ராதா சந்திப்பை ஞாபகப்படுத்தும் இசையைப் பின்னணியில் ஒலிக்க விடுவதன் மூலம் அந்தப் பார்வையின் அர்த்தம் நமக்கு உணர்த்தப்படும்.

காட்சியினூடாக ஒரு புது மொழியை உண்டாக்குகிற ஏற்பாடுதான் சினிமா.

நாடகத்திற்கும் சினிமாவிற்கும் என்ன வித்தியாசம்? இரண்டுமே திரையில் காண்பிக்கக் கூடியதுதான். படம் பிடிக்கப்பட்ட நாடகம் வெறும் தொழில்நுட்ப ரீதியாகப் பதிவு செய்யப்பட்ட ஒன்றாகவும், சினிமா என்பது தனித்த தொரு படைப்பியல் கலையாகவும் இருக்கிறது. இதைக் கொஞ்சம் விளக்கலாம்.

நாடகத்தைப் படம் பிடித்துக் காண்பிக்கும்போது, பார்வையாளன் நடிக்கப்படும் காட்சியை ஒரே இடத்திலேயே பார்க்கிறான். அதாவது காட்சி நடைபெறும் இடம் அவனுக்கு எப்பொழுதும் முழுமையாகத் தெரிந்தபடி இருக்கும். மேடையானது ஒரு மரத்திற்குக் கீழே இருவர் பேசிக் கொண்டிருப்பதாக அமைந்திருந்தால் அந்தக் காட்சி முழுவதும் பார்வையாளன் அந்த இடத்தையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

இரண்டாவது, பார்வையாளன் மேடையை எப்போதும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்தே பார்க்கிறான். அதாவது அவனுக்கும் மேடைக்கும் இடையே உள்ள தூரம் மாறாத ஒன்றாக இருக்கும். படம் பிடிக்கப்பட்ட நாடகத்தின் ஒவ்வொரு காட்சியும் வெவ்வேறு இடத்திலிருந்து படம்பிடிக்கப்பட்டிருந்தாலும், ஒருகாட்சிக்குள் இந்தத் தூரம் மாறாததாகவே இருக்கும்.

மூன்றாவது, நாடகத்தில் பார்வையாளனின் பார்க்கின்ற கோணம் மாறாததாக இருக்கும். ஒவ்வொரு காட்சியையும் அவன் ஒரே கோணத்திலேயே பார்க்கின்றான்.

உண்மையான சினிமா நாடகத்துக்கேயுரிய இந்த மூன்று அடிப்படை விதிகளையும் ஒதுக்கித் தள்ளுகிறது. அதற்குப் பதிலாக புதிய விதிகளை மேற்கொள்ளுகிறது.


சினிமாக் கலையின் ஒரு மிக முக்கியமான குணாம்சம், ஒருகாட்சியையேபல்வேறுதனித்த *Shot* களின் மூலம் பார்ப்பது . *Shot* என்பது இடையே எந்த வெட்டும் இல்லாமல் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட ஒரு தனித்த துண்டுப் படமாகும். இத்தகைய பல துண்டுப் படங்கள் இணைந்ததாகவே ஒரு காட்சி அமைகிறது. ஒரு காட்சியைஉருவாக்கும் இந்தபல்வேறுதுண்டுப் படங்கள் (*Shots*) பல்வேறு இடைத் தூரத்தையும், பல்வேறு கோணங்களையும், பல்வேறு ஆழப் பரிமாணங்களையும் கொண்டிருக்கும். இதன் மூலம் நாம் வாழ்க்கையின் மிக நுட்பமான அம்சங்களை அதன் ரகசியங்களை மிக நெருக்கத்தில் பார்ப்பதாக அமைகிறது. ஒரே 'ஷொட்'டிலேயேகமெராவின் பல்வேறு நகர்வுகளின் மூலம் நாம் பார்க்கும் பொருளின் பல்வேறு பரிமாணங்களும் தெரியவரும்.

**"சினிமா என்பது காட்சிப் பிம்பங்களாலானது, வார்த்தைகளால் கதை சொல்லப்படுவதல்ல. பொறாமை, சந்தேகம், கோபம், ஏமாற்றம் போன்ற எல்லா உணர்ச்சிகளையுமே காட்சிப் பிம்பங்களாகக் காட்டலாம். காட்சி பிம்பமாகக் காட்டக் கூடியதை வார்த்தையால் சொன்னால் அது சினிமா அல்ல"**

**- அல்.ஃ.பிரட் ஹிட்ச்கொக்**

இது தவிர மொன்டாஜ் எனப்படும் உத்தியும் சினிமாவை ஒரு தனித்துவமான கலையாக்குகிறது. அடிப்படையில் இது படத்தொகுப்பைக் குறிப்பது. தனித்த துண்டுப் படங்களை *Shot* களை இணைக்கும் முறையில் புதியதொரு அர்த்தத்தைத் தோற்றுவிக்கும் கலை இது. பிரபல சோவியத் திரைப்பட இயக்குநர் ஐஸன்ஸ்டைன் கூறியது போல, ஷொட் *A* யையும் ஷொட் *B* யையும் இணைக்கும்போது, படத்தில் உண்மையில் பதிவு செய்யப்பட்டிராத *C* என்ற அர்த்தம் வரவேண்டும். மொன்டாஜ் படத்தொகுப்பின் மூலம் மிகக் குறைந்த நேரத்தில் பார்வையாளனுக்கு அதிகளவுவிவரங்களைத் தந்துவிட முடியும். பல்வேறு ஷொட்களைத் தொகுக்கும் விதத்தில் மிகச் சிறிய விளக்கங்களையும் கொண்டதாக அது அமையும்.

பல்வேறு கோணங்கள், தூர - ஆழங்களோடு கமெராவினால்பிடிக்கப்பட்டகாட்சிகளைதொகுக்கும் முறையினாலேயே சினிமா உருவாகிறது. சினிமாவை ரசிப்பதற்கு நாம் இந்த மொழியைப் பயில வேண்டியது அவசியம்.●




Photos : Optica Ravi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரகபலன் : கணித்துச் சொல்பவர்



**மேஷம்:** மிகவும் அவசர அவசரமாக வந்து நேரமே இல்லையென்றுவிட்டு, தங்களது வேலையைச் செய்துகொண்டு போபவர்களிடம் கொஞ்சம் நிதானமாகத்தான் இருக்க வேண்டும். உடல் நிலையில் வயிற்றுக் கோளாறுகள் முக்கிய இடத்தை வகிக்கும். குடும்பச் சூழல் முன்னையதை விட சுமார். இளைப்பாறலாம். வியாபாரிகள் அளவுடனான பலன்களையும், தொழில் செய்பவர்களின் பொருளாதாரம் சுமார் என்றாலும் ஆபீஸ் கெடுபிடிகள் அதிகம். குடும்பப் பெண்களின் எதிர்பார்ப்புகள் கொஞ்சமாகத்தான் நிறைவேறும். தொழில் புரியும் பெண்கள் அதிமேதாவித்தனத்தால் நிச்சயம் அல்லல் படுவீர்கள். குழந்தைகள் சலனப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மாணவ மாணவியர்களுக்கு - ஓடும் குதிரையை (படிப்பை) இழுத்துப் பிடிக்க வேண்டிய தருணம், மறக்க வேண்டாம். *Nothing will happen to you, if you want to live like some one else.*



**ரிஷபம்:** உதயமும், அஸ்தமனமும் உற்சாகத்தை நிர்ணயிப்பதில்லை. அது, உள்ளத்தால் வருவது. உணரப்பட வேண்டியதும் கூட. உடல்நிலவரத்தைநீங்கள் முடிவுசெய்ததுபோதும். முறையான முறைகளுக்கு செவிகொடுங்கள். குடும்பத்தை நீங்கள் வெறுத்தாலன்றி அவர்கள் எப்போதும் போலத்தான் (நிதானம் வேண்டாமோ?).... வியாபாரமா?-தொல்லைதருமே? பிணைகொடுத்ததன் பலன். தொழில் செய்வோருக்கு சுமாரான பலன்கள். குடும்பப் பெண்களுக்கு தலையைப் பிய்த்துக்கொள்ளலாம் போல. உத்தியோக மகளிருக்கும் இதுதான் கதி. சேமித்திருக்கலாம். என்ன செய்ய? குழந்தைகள்-துடுக்குத்தனம் இதுதான் என்பார்கள். அவதானம் - அவதானிப்பு - அவசியம். மாணவ. மாணவியர் - கல்வி எங்கே போய்விடும் மனோபாவம். பலன் பூஜ்யம். *Closing is easy - but to open - we need a key.*



**மிதுனம்:** எல்லா விளையாட்டுக்களையும் செய்து விட்டு, வீட்டுக்கு வந்தவுடன் தலைவலிமாத்திரையைப் போடுவதில்...தெரிந்தால் சரி! குடும்பச் சூழ்நிலை - போலியாகத்தான் தென்படும், நீங்கள் உண்மையாகுமட்டும். உடல் நிலைபரவாயில்லை. இன்னும் மூன்று மாதம் நின்று பிடிக்கும் என்று ஒரு ஆறுதல். வியாபாரிகள் மூன்றுக்கு ஒன்று லாபம். உத்தியோத்தர்கள், சம்பளம் கிடைக்கும். வேறு விடயங்களில் அவதானம் தேவை. தொழில் பார்க்கும் பெண்களுக்கு உயர்வு. குடும்பப் பெண்கள் பொம்மை நிலை. குழந்தைகள் எரிச்சல் தருவார்கள். எரிந்து விழ வேண்டாம். மாணவர்கள்- படிக்க மாட்டீர்கள். பரீட்சையை நினையுங்கள். *Hungry don't wait untill serving.*



**கடகம்:** முன்னால் வெளிச்சமென்றால் பின்னால் இருட்டு. உங்கள் நிழல்தான்! குடும்பத்தைச் சமாளித்திருப்பீர்களே! பலே! தொடர்ந்துசெய்யுங்கள். உடல்நிலைஅவ்வளவாகஅலட்டாது. உணவில் கட்டுப்பாடாய் இருங்கள். வியாபாரம் செய்யலாம். அடுத்தவரின் வீண் வம்பு தடுக்கும். உத்தியோகத்தர் மேலதிகாரியின் பிரச்சினைகளால் துன்புறுவீர்கள். குடும்பப் பெண்கள் நிலையில் சற்றே முன்னேற்றம் தென்படுகிறது. வேலைக்குப் போகும் பெண்டிர் மேலும் அலுவலக உபாதைகளால் ஆட்கொள்ளப்படுவீர்கள். பொறுத்துப் போங்கள். குழந்தைகள் காயப்பட நிறைய வாய்ப்பு தெரிகிறது. கவனிக்க வேண்டும். மாணவமாணவியர் தொடர்ந்து முன்னேறகாலம் கைகூடுகிறது. வாழ்த்துக்கள். *Small Investment - Big return. Just a smile.*



**சிம்மம்:** எல்லோரும், எல்லாவற்றிற்கும் நம்மிடம் வரவேண்டும் என்று ஆசைப்பட்டால் சரிதான். ஆனால் முதலில் நமது நிலை? உடல் நிலை பாதிக்கப்படலாம். வருமுன் காத்துக்கொள்ளுங்கள். குடும்பச் சூழல் சலனப்பட்டுக் கொண்டிருக்கும். அவதானியுங்கள். வியாபாரிகள் - வியாபாரத்தில் நஷ்டத்தை விட கஷ்டப்படுவீர்கள். தொழில் பார்ப்போர் கொஞ்சம் அடங்கிப் போனால் நல்லது. என்னதான் இருந்தாலும் தொழிலல்லவா? குடும்பப் பெண்கள் - உறவு, பொருளாதாரம் ஒன்றாய் விளையாடட்டும். தொழிலிலுள்ள மகளிர் - மன உளைச்சலால் அமைதியின்மை. குழந்தைகள் பாடு சுமார். இளைப்பாறலாம். மாணவமாணவியர் கொஞ்சம் சிந்திக்கத் தொடங்கியிருப்பீர்கள். நலல பழக்கம். *Out side the window there is a lot to see.*



**கன்னி:** இருந்தால் அனுபவிக்கலாம். தப்பில்லை. இல்லாது போனால் முதலில் தேடுங்கள். பின்னர் அனுபவிக்கலாம். உடல் நலம் மருத்துவரிடம் கூப்பிடும். போங்கள். குடும்பச் சூழலுக்குள் வெளியாரை நுழைக்காதீர்கள். பின்னால் தலையிடி. வியாரிகள் - தொழில் பார்ப்போர் - இருதரப்பாருக்கும் நல்ல காலம். என்றாலும் கொடுப்பு - எடுப்பில் மிகவும் அவதானமாயிருங்கள். குடும்பப் பெண்களுக்கு குழப்பங்கள் குறையும். தொழில் பார்க்கும் பெண்கள் - கூடவேபுதியவகுப்புக்களில் பங்கேற்கலாம். முன்னேற்றம் தெரிகிறது. குழந்தைகள் படு சுட்டித்தனம் காட்டுவார்கள். அமைதியாககையாளுங்கள். மாணவமாணவியர்க்கு நல்ல அறிகுறிகள் ஏராளம். சகல கதவுகளையும் திறக்கலாம். வாழ்த்துக்கள். *If others starts bothering you - remember it's time for you to bother the real 'You'.*



**துலாம்:** குடை இருக்கும் போது மழை வராததும், மழை நேரம் குடை மறந்து போவதும் சர்வ சாதாரணம் தான். அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. உடல் முன்னை விட சுமார். குடும்பச் சூழலில் அமைதியின்மை தொடர வாய்ப்பிருக்கிறது. கொஞ்சம் சிந்தித்துச் செயற்படுங்கள். வியாபாரிகள் நூறு வீத லாபத்தை மட்டுமே கெட்டியாகப் பிடிக்காமல் விட்டுக் கொடுங்கள். தொழில் பார்ப்போருக்குத் தொல்லைகளிருந்தாலும் தலையடிக்கலாம். பொறுங்கள். குடும்பப் பெண்கள் குடும்ப விஷயங்களில் ஈடுபாடு காட்டுங்கள். தொழில் புரியும் பெண்களுக்கு சிரமங்கள் சற்றே குறையும். குழந்தைகள் குறும்பினால் காயப்பட இடமுண்டு. கண்காணியுங்கள். மாணவ - மாணவியர் - படிப்பில் கவனமெடுக்க அறிகுறியுண்டு. கைவிட வேண்டாம். *Before buying a second horse, study your present one.*



**விருச்சிகம்:** நெடுநாள் எதிர்பார்த்தது கிடைத்தவுடன் - ஒரு சில நாட்களிலேயே அந்த ஆசை சமநிலைப்படுவதில்லையா? இந்த சமநிலைப் பிரச்சினைதான் எல்லாவற்றுக்கும் அடிப்படை. உடல்நலம் வெளிப்பார்வைக்குச் சரிதான். உங்களுக்கே தெரியாமல் இருப்பவை வெளிவரலாம். அவதானம். குடும்பச் சூழல் அமைதியாயிருக்கும். கவலை வேண்டாம். வியாபாரிகள் நிலை படு பயங்கரம். மெல்ல... மெல்ல! தொழில் புரிவோர் சுமார் பலன்களைப் பெறுவீர்கள். தொழில் புரியும் பெண்களுக்கு பொருளாதாரம் கையில் நிற்காது. குழந்தைகள் அமைதியாக இருப்பார்கள். கவலை வேண்டாம். மாணவ மாணவியர் கல்வியோடு கலைகளையும் கற்கும் காலம். சபாஷ். *In the Universe, the darkness is more than the light. Just think about it.*



**தனுசு:** சகலவிதமான பழக்கங்களையும் அனுபவித்துவிட்டு திடீரென சத்ய புருஷர்களாக மாறுபவர்களிடம் நிறைய சுவாரஷ்யம் இருக்கிறது - நாம் தள்ளி நிற்கும் வரை. உடல் நலத்தில் - புதிதாக மாற்றங்கள் இருக்காது. குடும்பச் சூழல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில். விளங்கிக் கொண்டால் சரி. வியாபாரிகள் சம பலன்கள் பெறுவீர்கள். புதிதாக எதையும் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். தெரிந்த பேய் - சுகம். தொழில் செய்பவர்களுக்கும் மேற்கண்ட பலனே. குடும்பப் பெண்களுக்கு கணவர்களால் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. தொழில் புரிபவர்கள் வாயை அடக்கினால் தொல்லைகள் குறைய வழியுண்டு. குழந்தைகளை குழப்ப வேண்டாம். மாணவ மாணவியர்கள் படிப்பைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். *Two persons can't agree on one subject jor a same reason.*



**மகரம்:** என்ன தனியாக யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்பவர்கள் இருக்கின்றார்களல்லவா? இந்தக் கேள்வியை கொஞ்சம் யோசிக்கத்தான் வேண்டும். உடல் நலத்தில் சிறு சிறு உபாதைகள் மட்டுமே. குடும்பச் சூழல் சுகமான வசந்தம் - அவ்வப்போதுசிறுசலனங்களைத் தவிர. அச்சமில்லை. வியாபாரிகள் நிலை நன்றெனினும் - கவனக் குறைவு., நட்டத்தைத் தரலாம். தொழில் புரிவோர் தங்கள் நிலையிலிருந்து மேலும் சிரத்தையுடன் வேலையில் ஈடுபடுங்கள். குடும்பப் பெண்கள் வேலைப் பழுவால் துன்புறுவீர்கள். தொழில் புரிவோரிடையே மந்தகதி தலைகாட்டும். ஜாக்கிரதை. குழந்தைகள் உற்சாகமாக இருப்பார்கள். கைகொடுங்கள். மாணவ மாணவிகள் - தொடர்ந்துகவனத்தைப் பேணுங்கள். வெற்றி அருகில். *After closing the eyes - another dimension appears - if we could focus.*



**கும்பம்:** தென்றல், புயல், சூறாவளி எல்லாமே காற்றுதான். பிரயோக வடிவம் வேறுபடுகிறது. திறமை என்பதையும் இந்த அடிப்படையில் சிந்தித்துப் பார்த்தாலென்ன? உடல்நலம் கெட வாய்ப்புண்டு. அவதானியுங்கள். குடும்பச் சூழ்நிலை சுமார். வியாபாரிகள் கொள்வனவு விஷயத்தில் நேரடியாக ஈடுபடுவது நல்லது. தொழில் பார்ப்போர் எடுத்த வேலையை முடித்துவிட்டு அடுத்த வேலையை தொடருங்கள். வேலையும் முடியும், வீண் பழியும் குறையும். குடும்பப் பெண்கள் - குடும்ப விஷயத்தை வெளியாரிடம் விளம்பரம் செய்ய வேண்டாம். தொழில் செய்வோருக்கு ஆரம்பத்திலிருந்த சிரத்தை குறையப் பார்க்கும். மீண்டும் ஒரு தட்டு தட்டுங்கள். குழந்தைகள் சுமார். மாணவ மாணவியர் - ஒன்று பாடசாலையில் இல்லை வீட்டில் - எங்காவது சரி - படிக்கப் பாருங்கள். *One ring is more than enough for ten fingers.*



**மீனம்:** இரண்டு பேருக்கு கடன் கொடுத்துவிட்டுத் திருப்பிக் கேளாமல் இருங்கள். ஒரு மாதத்தில் ஒரு பட்டாளமே உங்களைச் சுற்றிவிடும். உதவிக்கு அப்படியும் ஒருபக்கமுண்டு. உடல் நலம் - உடனே கவனியுங்கள். குடும்பச் சூழலில் - உறவினர் ஊடுருவல் இப்போதே அதிகம். இன்னும் ஏன்? வியாபாரிகள் அடைந்த நஷ்டங்களிலிருந்து விடுபட வாய்ப்புண்டு. தொழில் புரிவோர் புதிய தொழிலாயின் - கவனம். பழகியதென்றால் அதிக கவனம் தேவை. குடும்பப் பெண்களுக்கு கவலையில்லை. தொழில் செய்பவர்களாயின் - உயர்மட்ட சிபாரிசுகளைப் பிடித்துக்கொள்ளப் பார்க்காமல் - வேலையைப் பிழையின்றி செய்யுங்கள். குழந்தைகள் சோர்வார்கள். மாணவர்கள் பாடுபட்டுப் படித்த தன் பலனை உணர்வீர்கள். *Following any philosophy without proper knowledge is - complicating the normal life.*

**கிரகாச்சாரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்



**பத்திரிகையாளர் நடேசய்யர்**
**சாரல் நாடன்**
**மலையக வெளியீட்டகம்**
**த. பெ. இல. 32, கண்டி.**
**ரூபா: 165.00** **பக்கம்: 207**

1988ல் 'தேசபக்தன் கோ. நடேசய்யர்' என்ற நூலில் அவரது வாழ்க்கை வரலாற்றை முறையாக அறிமுகம் செய்த சாரல் நாடன் அவர்கள், பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் நடேசய்யரின் பன்முக ஆளுமையில் ஒருமுகமான இதழியல் ஆளுமையை இந் நூலின் வாயிலாக நிறுவியுள்ளார்.

இலங்கை வெள்ளையரிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டதற்கு முந்தைய ஆண்டில் காலமான நடேசய்யர் தனது 27வது வயதில் அதாவது 1914ல் 'வர்த்தகமித்திரன்' என்னும் மாதமிருமுறை வெளியீட்டை தஞ்சாவூரில் ஆரம்பித்ததோடு பத்திரிகைத் துறையில் கால்டி வைத்தார். பின்னர் தமது முப்பத்துமூன்றாண்டுகள் பத்திரிகைப்பணியில் 8 தமிழ் ஏடுகளிலும் 4 ஆங்கில ஏடுகளிலும் ஆசிரியராகக் கடமையாற்றியிருக்கிறார். அவற்றில் 'தேசபக்தன்' என்ற பத்திரிகையை 7 ஆண்டுகள் தொடர்ந்து நடாத்தியதன் மூலம் 'தேசபக்தன் நடேசய்யர்' என்றே அவர் நினைவு கூரப்பட்டு, தமிழ்த் தினசரி ஆசிரியர்களில் இன்றும் முக்கியமானவராக வைத்தெண்ணப்படுகிறார்.

"பத்திரிகைகள் அய்யரைப் பொறுத்தவரையில் அச்சில் வார்த்த ஆயுதங்கள். கூனிக் குறுகிக் கிடந்த மக்களை, ஏணிப்படிகளாகப் பிறர் ஏறி மிதிக்கப் பயன்பட்ட மக்களை நாடிபிடித்து அழைத்துவர அவற்றை அவர் பயன்படுத்தினார்..." என்று மதிப்பிடுகிறார் சாரல் நாடன்.

தொழிற்சங்கவாதியாகவும், மலையக மக்களின் மறுமலர்ச்சிக்கான போராட்டத்தை முன்னெடுத்தவராகவும் அறியப்படும் நடேசய்யர் தன்னை ஒரு பத்திரிகையாளன் என்றே குறிப்பிட்டு வந்திருக்கிறார். "சட்டசபைக்குப் போய் மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மையை விட பன்மடங்கு அதிக நன்மையை பத்திரிகைப் பணி மூலம் செய்ய முடியும்" என்று சொன்னது போல, செயற்பட்டிருக்கிறார் அய்யர்.

வர்த்தக மித்திரன், சுதந்திரன் ஆகிய இரு பத்திரிகைகளையும் அவர் தஞ்சாவூரில் நடத்திய போது, அந்த இரண்டு பத்திரிகைளிலும் அவருக்கு உதவியாகப் பணியாற்றியவர் புகழ் மிகுந்த வ.ரா. என்றறியப்பட்ட வ. ராமசாமி அய்யங்கார்.

"பாமர ஜனங்களை படுகுழியிலிருந்து மீட்கப் போவதாகக் கூறிவரும் தலைவர்கள், தமக்குள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லையென்றால் அதை விடக் கேவலமான நிலைமை கிடையாது" என்று மக்கள் மீதான கரிசனத்தில் அவர்களது சார்புநிலையிலிருந்தும், தீர்க்க தரிசனமிக்க தெளிந்த அறிவோடும் இற்றைக்கு 70 வருடங்களுக்கு முன்பே எழுதியிருக்கிறார் நடேசய்யர்.

மலையகத்தின் ஒரு காலகட்ட வரலாற்றை "நடேசய்யரின் பத்திரிகையுலகப் பணிகளினூடாக வாசகர்களுக்குத் தந்திருக்கிறார் சாரல் நாடன். பாரிய உழைப்பை வேண்டி நிற்கும் ஆய்வுப் பணியாகும் இது. செவ்வனே செய்திருக்கிறார் சாரல் நாடன். நூலை 'மலையக வெளியீட்டகம்' வெளியிட்டிருக்கிறது.



**கட்டவிழும் முடிச்சுக்கள்**
**பெண்கள் தொடர்பான பொய்களும் உண்மைகளும்**
**பதிப்பாசிரியர்:**
**சுல்பிகா ஆதம்**
**முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி, செயற்பாட்டு முன்னணி,**
**17, பார்க் அவென்யூ,**
**கொழும்பு 05.**

இலக்கியத்திலாகட்டும், பேச்சு வழக்கிலாகட்டும், பழமொழிகள் அறிவுரைகளிலாகட்டும், பிள்ளை வளர்ப்பிலாகட்டும் எல்லாவற்றினூடாகவும் பெண் ஆணுக்குக் கீழ்ப்பட்டவள் என்பதை நிறுவவே இந்த சமூகம் இன்றுவரை முயல்கிறது. இந்த அநீதி சுட்டிக் காட்டப்படும்போது வெளிநாட்டுக் கலாசாரத்தை இறக்குமதி செய்கிறார்கள் என்றோ முன்னோரை இழிவுபடுத்துகிறார்கள் என்றோ இதைத் திசைதிருப்பிவிடவே இன்றைய சமூகப் பாதுகாவலர்களும் பரபரக்கிறார்கள். தலைமுறைகளுக்கூடாக இவர்கள் கடத்திவரும் - பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கியிருக்கும் - சமூக நியமங்கள் நியதிகளை ஆராய்கிறது நூல்.

**நூலிலிருந்து......**

ஆண் பிள்ளைகளை பயமற்றவர்களாக, வீரம் மிக்கவர்களாக, தன்னம்பிக்கை உடையோராக, சுயமாக இயங்கக் கூடியோராக வளர்க்கும் அதே வேளையில் பெண் பிள்ளைகள் பயந்தவர்களாக, மற்றவர்களில் சார்ந்து நிற்க வேண்டியோராக, தமது உணர்ச்சிகளின் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக வளர்க்கப்படுகின்றனர். உதாரணமாக உரத்துச் சிரிக்கவேண்டியது நியாயமான சந்தர்ப்பமாக இருந்தாலும் கூட,

**"பொம்பிளை சிரிச்சால் போச்சு**
**போயிலை விரிச்சாப் போச்சு'**

என்ற ஒரு வார்த்தையில் இனம்புரியாத அச்சத்தையும் குற்ற உணர்வினையும் அந்த இளமனதில் ஊட்டிவிடுகின்றனர். உணர்வுகளின் இயல்பான வெளிப்பாட்டிற்குத் தடை போட்டு அவளைத் தன்னுள்ளே ஒடுங்கிப் போகச் செய்கின்றனர்.

கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் இன்று எமது நாட்டில் பெண்ணுக்குக் கல்விச் சந்தர்ப்பங்கள் முற்று முழுதாக மறுக்கப்படவில்லையாயினும் இன்றும் கூட ஒரு சில சமூகங்களில்,

**"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு"**

என்ற மனோபாவம் இருக்கத்தான் செய்கிறது. இவ்வாறுமுளையிலேயேஅறிவுக்குத் தடைபோட்டு விடும் சமூகம் பின்பு,

**"பெண் புத்தி பின்புத்தி" என்றும்,**
**"பெண்களின் அறிவு அகப்பைக் காம்பளவே"**

என்றும் ஏளனம் செய்யவும் தவறுவதில்லை. இது உண்மையிலேயே அறிவாற்றல் அற்ற அல்லது குறைந்த பெண்களைக் குறிப்பிட்டாலும் கூட அறிவிலும் ஆற்றலிலும் தீர்க்கமான பெண் பிள்ளைகளைக் கூட சமூகம் அவ்வளவு சுலபமாக அங்கீகரித்து விடுவதுமில்லை. ஏனெனில் ஆணின் அறிவு அதிகாரம், பெண்ணின் அறிவு அகங்காரம் என்ற கண்ணோட்டம் இலைமறைகாயாக இன்றும் எமது சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றது.

பொதுவாக பெண் குணாதிசயங்கள் குறித்த சமூகக் கூற்றுக்களைப் பல வகையினவாக அடையாளம் காணலாம். பெண்களின் அங்க அமைப்புக்களைக் கொண்டு அவர்களது குணாதிசயங்களை நிர்ணயிப்பவை ஒரு வகை. உதாரணமாக பின்வருவருவனவற்றைக் கூறலாம்.

**"கெண்டைக்கால் சிறுத்தவளும் கொண்டை பெருத்தவளும் கொண்டவனுக்கு ஆகாள்"**

நடத்தையைக் கூறுவதன் மூலம் அவர்களது குணங்களைக் கோடிட்டுக் காட்டும் கூற்றுக்களும் உண்டு. அவற்றுள் ஒரு சில.

**கொலையும் செய்வாள் பத்தினி!**
**பெண்களின் ஆயுதம் கண்ணீர்!**
**ஒரு செய்தியை அம்பலப்படுத்த வேண்டின் பெண்ணிடம் சொல்!**
**பிடிவாதம் பெண்ணுடன் கூடப் பிறந்தது!**
**பெண் என்றால் பேயும் இரங்கும்!**

ஒரு சில கூற்றுக்கள் ஒப்பீட்டு ரீதியானவை:

**"சீறும் பாம்பை நம்பலாம் சிரிக்கும் பெண்களை நம்பாதே"**
**"ஆயிரம் பேர் ஒற்றுமையாகக் கூடி வாழ முடியும், ஆனால் இரண்டு பெண்களால் முடியாது"**
**"பெண் தீமை செய்வதில் ஆண்களை விட அறிவாளி"**

சில கூற்றுக்கள் போற்றத் தகுந்த குணங்களைப் பெண்களுக்கு உரிய குணங்களாக முத்திரையிட்டுக் காட்டினாலும், அவற்றின் பயன்பாட்டை நோக்கும் போது அதில் ஒரு சுரண்டல் தன்மை (*Exploitory nature*) பொதிந்திருப்பதைக் காணலாம். உதாரணமாக,

**பெண் பொறுமையின் சின்னம்**
**பெண்ணுக்கு அழகு அடக்கம்**

முதலிய கூற்றுக்களைக் கூறலாம். இத்தகைய அழகான சட்டங்களில் அவளை அடக்கி விடுவதனால் நியாயமான சந்தர்ப்பங்களில் கூட இவற்றை மீறுவது கஷ்டமானதொன்றாகி விடுகின்றது. அவ்வாறு மீறிவிடும் சந்தர்ப்பங்களில் அது ஒரு குற்றமாகவும், நியதிக்கு மீறிய செயலாகவும் கணிக்கப்பட்டு விமர்சிக்கப்படுகின்றன.



**பாலர் கால்வீப் பாடல்**
**கலாநிதி சபா ஜெயராசா**
**நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டம் (யுனிசெவ்)**
**மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.**
**பக்கம்: 22**

முன்னாரம்பப் பள்ளி மாணவர்களுக்காக எழுதப்பட்ட அவர்கள் உள்ளங்களை வளப்படுத்தும் பாடல்கள். இசையோடும், நடிப்போடும், சேர்ந்த செயற்பாடுகளோடும் பாடுவதற்குரியவை.

**நூலிலிருந்து ஒரு பாடல்:**

பாட்டிக்கு உதவுவோம்
படுக்கை விரித்துப் போடுவோம்
தாத்தாவுக்கு உதவுவோம்
துண்டை எடுத்துப் போடுவோம்
அம்மாவுக்கு உதவுவோம்
அழகாக அடுக்குவோம்
அப்பாவுக்கு உதவுவோம்
அழகாக எழுதுவோம்
நண்பருக்கு உதவுவோம்
நன்றாய் ஆடிப் பாடுவோம்
எல்லோருக்கும் உதவுவோம்
எழுந்து கை தட்டுவோம்.

நூலாய்வு : மாலனிக்கலாசகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து

பாதுகாப்பையும் உயர்ந்த வருவாயையும் வழங்கும்

# நீண்ட கால வைப்புச் சான்றிதழ்கள்

**4** வருடகால வைப்பிற்கு வருடாந்தம் **15%**

**5** வருடகால வைப்பிற்கு வருடாந்தம் **16%**

(வருடாந்த வட்டி வீதம் 12.5%)

## பெறும் நன்மைகள்:

- நிறுத்தி வைக்கும் வரி இல்லை.
- முத்திரை வரி இல்லை.
- உயர்ந்த வட்டி வீதம்
- படிவங்கள் நிரப்புவதற்கில்லை. எனவே முற்றிலும் இரகசியமானது.
- முதலீட்டுக் கடன்களுக்குப் பிணையாகப் பயன்படுத்தலாம்.

| காலம் | 4 வருடங்கள் | 5 வருடங்கள் |
|---|---|---|
| வட்டி வீதம் | 15% வருடாந்த வட்டி | 16% வருடாந்த வட்டி |
| தொகை | ரூ. 62,500/- | ரூ. 55,555/- |

**முதிர்வு நிலையில் பெறுமானம் : ரூபாய் 100,000/-**

இவை அனைத்தும், இன்னும் நூறு வருட வரலாற்றுறுதியும் பாரம்பரியமும் மிக்க ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவையும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளருடன்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**ஹற்றன் நஷனல் வங்கி**
*உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி*

தலைமை அலுவலகம் : 10, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 421885-7, 337501-5 பக்ஸ்: 320745

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூத்துச் சிரித்திடும் ரண்கெகுளு அதிர்ஷ்டம்

உங்களது ரண்கெகுளு
சேமிப்புக் கணக்கின் மூலம்
பெறுமதியான ஏராளம்
பரிசுகளை வெல்ல
இப்பொழுது
அரியதொரு வாய்ப்பு.

**முதலாம் பரிசு**
10 மல்டி மீடியா கொம்பியூட்டர்கள்

**இரண்டாம் பரிசு**
100 மௌண்டன் பைசிக்கிள்கள்

**மூன்றாம் பரிசு**
10,000 ரண்கெகுளு பாடசாலைப் பைகள்



ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது தற்போதுள்ள ரண்கெகுளு கணக்கில் 1999 ஜூன் மாதம் 30ந் திகதியன்று ஆகக்குறைந்த கணக்கு மீதியாக 3,000 ரூபாவை பேணுங்கள். நீங்களும் ரண்கெகுளு அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறுவீர்கள்.

இனியுமென்ன தாமதம். உங்கள் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இன்றே நீங்களும் இலங்கை வங்கியில் ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஏற்கெனவே ரண்கெகுளு கணக்கொன்று உங்களிடமிருந்தால் மேலும் மேலும் சேமியுங்கள்.

**ஞாபகமிருக்கட்டும். சேமிப்பதால் உங்களுக்கும் வெற்றி. நாட்டுக்கும் வெற்றி.**

FIRST & FORWARD

இலங்கை வங்கி
ලංකා බැංකුව Bank of Ceylon
புதிய நூற்றாண்டின் - தேசத்தின் ஒளிவிளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org